

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in — நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி — murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 173 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – தை 20 – சனிக்கிழமை 03 பிப்ரவரி 2024 – திருச்சி ★★ 8 + 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 173 : Thiruvalluvar Year - 2055 - Thai 20 - Saturday 03 February 2024 - Trichy ★★ 8 + 12 Pages ₹ 5.00


### பேரறிஞர் அண்ணாவின் 55வது நினைவு நாள் இன்று! கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் தலைமையில்

# சென்னையில் - கழகத்தின் சார்பில் மாபெரும் அமைதிப் பேரணி !

## கழக நிர்வாகிகள் - முன்னணியினர் - அடலேறுகள் - வீராங்கனையர் ஆயிரக் கணக்கில் பங்கேற்கின்றனர் !

**சென்னை, பிப்.3-**


**பேரறிஞர் பெருந்தகை - 'திராவிட முன்னேற்றக் கழகம்' எனும் நமது மாபெரும் ஜனநாயகப் பேரியக்கத்தைத் தோற்றுவித்த பெருமகன் - அண்ணா அவர்களின் 55வது நினைவு நாள் இன்று! இந்நாளில், அவர் தோற்றுவித்த கழகத்தின் சார்பில், மாபெரும் அமைதிப் பேரணி, அறிஞர் அண்ணா நினைவிடம் நோக்கி நடைபெறுகிறது.**

**கழகப் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தலைமையிலும் - பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. அவர்கள் முன்னிலையிலும் நடைபெறும் இம்மாபெரும் அமைதிப் பேரணியில், கழக நிர்வாகிகள், முன்னணி யினர், அடலேறுகள் ஆயிரக் கணக்கில் பங்கேற்கிறார்கள்.**

**இம்மாபெரும் அமைதிப் பேரணிக்கு கழகத்தினர் திரண்டு வருமாறு சென்னை மாவட்டக் கழகங்களின் செயலாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.**

அதன் விவரம் வருமாறு:-

காஞ்சி தந்த காவியத் தலைவர் - உலகத் தமிழர் உள்ளங்களில் எல்லாம் சிம்மாசனம் போட்டுக் கொலுவீற்றிருக்கும் செந்தமிழ் அறிஞர் - தமிழ் மொழி உயர்வுக்காகவும், தமிழர்களின் மேம்பாட்டுக்காகவும், தமிழ்நாட்டின் சிறப்புக்காகவும் வாழ்நாள் எல்லாம் ஓயாது பாடுபட்ட உத்தமர் - 'கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு' எனும் மகத்தான தாரக மந்திரத்தை அரசியல் உலகத்திற்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர் - "இப்படை தோற்கின் எப்படை வெல்லும்" என்று தம்பிமார் பெரும்படையைக் கண்டு, நெஞ்சுயர்த்தி பெருமிதம் கொண்ட பெருமகன் - "மெட்ராஸ் ஸ்டேட்" என்ற பெயரை "தமிழ்நாடு" என்று பெயர் மாற்றம் செய்து தாய்க்குப் பெயர் தந்த தனிப் பெரும் தனயன் - சுயமரியாதைச் சுடரொளி - சொக்க வைக்கும்



சொற்பொழிவாளர் - எழுத்து வேந்தர் - தென்னகத்தின் மிகப் பெரும் அரசியல் தலைவர் - பேரறிஞர் அண்ணா அவர்களின் **55வது** நினைவு நாள் இன்று!

இந்நாளையொட்டி - கழகத்தின் சார்பில் மாபெரும் அமைதிப் பேரணி, இன்று (3.2.2024 - சனிக்கிழமை) காலை 8.00 மணி அளவில் திருவல்லிக்கேணி - வாலாஜா சாலையில் உள்ள 'அரசு விருந்தினர் மாளிகை' அருகில் தொடங்கி, அண்ணா நினைவிடம் நோக்கி நடைபெறுகிறது.

கழகத்தின் இம்மாபெரும் அமைதிப் பேரணிக்கு கழகப் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தலைமை வகிக்கிறார். கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. முன்னிலை வகிக்கிறார்.

கழக இந்நாள் - முன்னாள் அமைச்சர்கள், இந்நாள் - முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற இந்நாள் - முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, மாணவர் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, மீனவர் அணி, கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை, இலக்கிய அணி, வழக்கறிஞர் அணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவ அணி, சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, அனைத்து கழக நிர்வாகிகளும், செயல் வீரர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு போற்றி அஞ்சலி செலுத்த திரண்டு வாரீர்!"

- என சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு, சென்னை கிழக்கு, சென்னை தெற்கு, சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு ஆகிய மாவட்டக் கழகங்களின் செயலாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

---

### ஸ்பெயின் நாட்டின் ஹபக் லாய்டு நிறுவனம் - சரக்கு முனையங்கள் அமைத்திட ரூ.2,500 கோடி முதலீடு!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம்!

## தமிழ்நாட்டில் சாலைக் கட்டமைப்பில் முதலீடு செய்ய அபர்ட்டிஸ் நிறுவன நிர்வாகிகள் முதல்வருடன் சந்திப்பு !

**மேட்ரிட் (ஸ்பெயின்) பிப். 3-**

**சரக்கு முனையங்கள் மற்றும் சரக்கு கையாளும் பூங்காக்களை அமைப்பதில் உலகளவில் முன்னணி நிறுவனமான ஹபக் லாய்டு நிறுவனத்துடன் 2,500 கோடி ரூபாய் முதலீட்டில், 1,000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்திடும் வகையில் தூத்துக்குடி மற்றும் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் தளவாட வசதிகள் அமைத்திட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.**

தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக ஸ்பெயின் நாட்டிற்கு அரசு முறை பயணம் மேற்கொண்டுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஸ்பெயின் நாட்டில் உள்ள பல்வேறு முன்னணி நிறுவனங்களின் நிர்வாகிகளை நேரில் சந்தித்து தமிழ்நாட்டில் முதலீடுகளை மேற்கொள்ள வலியுறுத்தி வருகிறார்கள்.

தமிழ்நாட்டின் பரவலான தொழில் வளர்ச்சிக்கு சரக்கு போக்குவரத்தினை திறமையாகக் கையாளுவது மிகவும் அவசியமானதாகும். தமிழ்நாட்டில் உள்ள நான்கு பெரும்



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், சரக்கு முனையங்கள் மற்றும் சரக்கு கையாளும் பூங்காக்களை அமைப்பதில் உலகளவில் முன்னணி நிறுவனமான ஹபக் லாய்டு (Hapag-Lloyd) நிறுவனம் 2500 கோடி ரூபாய் முதலீட்டில், தூத்துக்குடி மற்றும் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் தளவாட வசதிகள் அமைத்திட தமிழ்நாடு அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது. இந்நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, 'Guidance' நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு, ஹபக் லாய்டு (Hapag-Lloyd) நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் Jesper Kanstrup மற்றும் இயக்குநர் Albert Lorente ஆகியோர் உடனிருந்தனர்.

துறைமுகங்களைப் பயன்படுத்தி, சரக்குகளைக் கையாளும் கண்டெய்னர் துறைமுகங்கள், சரக்குப் போக்குவரத்து பூங்காக்கள் போன்ற கட்டமைப்பு வசதிகளை தமிழ்நாட்டில் அமைத்திட பல்வேறு முயற்சிகளை தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருகின்றது. இத்துறைக்கான தனிக் கொள்கை ஒன்றும் தமிழ்நாடு அரசால் வெளியிடப்பட்டுள்ளது.

**ஹபக் லாய்டு நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்**

அந்த வகையில், சரக்கு முனையங்கள் மற்றும் சரக்கு கையாளும் பூங்காக்களை அமைப்பதில் உலகளவில் முன்னணி நிறுவனமாக திகழக்கூடிய ஹபக் லாய்டு (HapagLloyd) நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் Jesper Kanstrup மற்றும் இயக்குநர் Albert Lorente ஆகியோர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை 31.1.2024 அன்று சந்தித்துப் பேசினார்கள்.

இந்த சந்திப்பின்போது, தமிழ்நாட்டில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புகள் குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எடுத்துரைத்து, தமிழ்நாட்டில் முதலீடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். இக்கூட்டத்தில், 2,500 கோடி ரூபாய் முதலீட்டில், தூத்துக்குடி மற்றும் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் தளவாட வசதிகள் அமைத்திட இந்நிறுவனம் முன்வந்துள்ளது. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது. இம்முதலீடு 1,000 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துவதோடு, தமிழ்நாட்டின் எதிர்கால தொழில் வளர்ச்சிக்கு வழிவகுக்கும்.

**தமிழ்நாட்டின் சாலைக் கட்டமைப்பில் முதலீடு செய்வது தொடர்பாக அபர்ட்டிஸ் நிறுவனத்தின் நிர்வாகியுடன் சந்திப்பு**

அதனைத் தொடர்ந்து, சாலை கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனமான அபர்ட்டிஸ் நிறுவனத்தின் Laura Berjano, International and Institutional Relations Head அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை சந்தித்துப் பேசினார்.

இச்சந்திப்பின்போது, இந்தியாவிலேயே அதிகமான சாலை அடர்த்தியும், தரமான சாலை கட்டமைப்பும் தமிழ்நாட்டில் உள்ளன என்பதையும், தொழில்வளர்ச்சியை ஊக்குவிக்கவும் இந்த சாலை கட்டமைப்பை மேலும் மேம்படுத்துவதன் அவசியத்தையும் வலியுறுத்தி, அபர்ட்டிஸ் நிறுவனம் தமிழ்நாட்டின் சாலைக் கட்டமைப்பில் மேலும் முதலீடு செய்ய வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். தமிழ்நாட்டின் மாநில நெடுஞ்சாலை கட்டமைப்பில் முதலீடுகளை மேற்கொள்ளவும் அபர்ட்டிஸ் நிறுவனம் ஆர்வம் தெரிவித்துள்ளது.

இச்சந்திப்பின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, 'Guidance' நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே. விஷ்ணு ஆகியோர் உடனிருந்தனர்.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 03-02-2024

# மதவாத - இனவெறுப்புவாதச் சட்டம் அது!

பா.ஜ.க. என்ற வகுப்புவாதக் கட்சிக்கு மூன்றே மூன்று தான் கொள்கைகள். ஒன்று, பாபர் மசூதியை இடித்துவிட்டு ராமர் கோவிலைக் கட்டுவது. கட்டித் திறந்துவிட்டார்கள். இரண்டு, காஷ்மீருக்கான சிறப்புத் தகுதியை ரத்து செய்வது. ரத்து செய்துவிட்டு, ஐந்து ஆண்டுகளாக அங்கு தேர்தலே இல்லாமல் பார்த்துவிட்டார்கள். மூன்றாவது, சி.ஏ.ஏ. எனப்படும் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வருவது. அதனைக் கொண்டு வரத் துடிக்கிறார்கள். இதையும் செய்து விட்டால் அவர்களது அஜெண்டா ஓவர்!

கடும் எதிர்ப்பு எழுந்த நிலையில் நான்கு ஆண்டுகளாகக் கிடப்பில் கிடக்கிறது குடியுரிமைத் திருத்தச் சட்டம். நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கி வரப்போகிறது என்பதால் இதனைக் கையில் எடுத்துள்ளார்கள்.

'குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை ஒரு வாரத்துக்குள் அமல்படுத்தப் போகிறோம்' என்று ஒன்றிய கப்பல் போக்குவரத்துத் துறை இணை அமைச்சர் சாந்தனு தாக்குர் சொல்லி இருக்கிறார். இவர் என்ன பிரதமரா? அல்லது உள்துறை அமைச்சரா? இல்லை. குட்டியை விட்டு ஆழம் பார்ப்பதைப் போல இவரை இறக்கி விட்டுள்ளார்கள். சி.ஏ.ஏ. என்பது பா.ஜ.க. விழுந்தால் எழ முடியாத குழியாகும். தீராப்பழியாகும்.

"மேற்கு வங்க மாநிலத்தில் மட்டுமல்ல, இந்தியா முழுமைக்கும் குடியுரிமை திருத்தச் சட்டம் அமல்படுத்தப்படும்" என்று மேற்கு வங்கத்தில் வைத்து சொல்லி இருக்கிறார் ஒன்றிய அமைச்சர். இதற்கு கடுமையான எதிர்ப்பைப் பதிவு செய்துள்ளார் மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா. தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும் கடும் கண்டனத்தைப் பதிவு செய்துள்ளார்கள்.

**"தமிழ்நாட்டில் குடியுரிமைத் திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப் படுவதைத் தி.மு.க. அரசு ஒருபோதும் அனுமதிக்காது. மத நல்லிணக்கத்துக்கு எதிரான பா.ஜ.க. அரசின் நாசகாரச் செயல்களையும், அதற்குத் துணைபோகும் அ.தி.மு.க.வின் நயவஞ்சக நாடகங்களையும் நாட்டு மக்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். உறுதியாகச் சொல்கிறேன். தமிழ்நாட்டினுள் CAA கால்வைக்க விடமாட்டோம்! No CAA In TamilNadu" என்று உறுதி செய்துள்ளார் முதலமைச்சர் அவர்கள்.**

குடியுரிமைச் சட்டம் என்பது, ஒரு நாட்டில் வாழ முடியாமல் அகதிகளாக வருகின்றவர்களுக்கு வாழ்வு தரக்கூடியது ஆகும். இந்திய நாடாளுமன்றத்தில் 1955 ஆம் ஆண்டு குடியுரிமைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இந்தச் சட்டத்தில்தான் இன்றைய ஒன்றிய அரசு ஒரு திருத்தம் செய்கிறது. அனைவருக்கும் குடியுரிமை என்று சொல்லி இருந்தால் அதனை நாம் எதிர்க்கப் போவது இல்லை. ஆனால் பா.ஜ.க.வின் குறுகிய எண்ணத்துக்கு வடிவம் கொடுத்துள்ளது இந்த சட்டத் திருத்தம்.

* எல்லா மதத்தவருக்கும் குடியுரிமை உண்டு, இசுலாமியரைத் தவிர!

* எல்லா நாட்டவர்க்கும் குடியுரிமை உண்டு, ஈழத்தமிழரைத் தவிர!

- இதுதான் பா.ஜ.க.வின் இசுலாமியர் விரோத - தமிழர் விரோத குடியுரிமைச் சட்டம் ஆகும். இதனை எதிர்ப்பது ஒவ்வொரு தமிழரின் கடமையாகும்.

பாகிஸ்தான், வங்கதேசம், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் மத ரீதியாக துன்புறுத்தலுக்கு உள்ளாகும் சிறுபான்மையினரான இந்துக்கள், கிறிஸ்தவர்கள், பார்சிக்கள், சமணர்கள், பவுத்தர்கள் இந்தியாவுக்குள் வரலாமாம். ஆனால் இசுலாமியர்கள் வரக்கூடாதாம். இப்படி மத உள்நோக்கம் கொண்டது எப்படி அனைவர்க்கும் பொதுவான சட்டம் ஆகும்?

இந்திய அரசை மதச்சார்பற்ற அரசு என்று இந்திய அரசியலமைப்புச் சட்டம் சொல்கிறது. அதன்படி பார்க்கும்போது மதத்தை அடிப்படையாகக் கொண்டு எந்தச் சட்டத்தையும் கொண்டு வர முடியாது. ஆனால் அதனைத்தான் இன்றைய பா.ஜ.க. அரசு செய்கிறது..

பாகிஸ்தான், வங்கதேசம், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் இருந்து பாதிக்கப்படும் மக்கள் இந்தியாவுக்குள் வரலாம் என்றால் இலங்கையில் இருந்து மக்கள் வர என்ன தடை? மத ரீதியாகவும், இன ரீதியாகவும் அதிகமான துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்ட மக்கள் அதிகமாக வாழும் நாடு இலங்கை. தமிழர்கள் பச்சைப் படுகொலைகள் செய்யப்பட்டார்களே இலங்கையில். தமிழர்கள் கட்டிய கோவில்கள் இடிக்கப் பட்டதே? அவை 'இந்துக் கோவில்கள்'தானே? மற்ற அண்டை நாட்டைச் சேர்ந்த 'இந்துக்கள்' வரலாம் என்றால் ஈழத்தில் இருக்கும் தமிழர்களை 'இந்துக்களாக' இந்த பா.ஜ.க. அரசு நினைக்கவில்லையா? ஈழத்தில் இருப்பவர்கள் இனத்தால் தமிழர்களாக இருந்தாலும் அவர்களது சமய நம்பிக்கை இந்து - சைவம் சார்ந்ததுதானே!

தமிழகத்தில் சுமார் 70 ஆயிரம் ஈழத்தமிழர்கள் அவர்களுக்கான அரசு வாழ்விடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இதில் 1983ம் ஆண்டு வந்தவர்கள் முதல் 2002ம் ஆண்டு வந்தவர்கள் வரை இருக்கிறார்கள். இவர்களால் மீண்டும் இலங்கைக்குச் செல்ல முடியாது. அவர்களுக்கு தாய்த்தமிழகம்தானே அடைக்கலம் தர முடியும்? அவர்களைப் புறக்கணிக்கும் சட்டத்தை தமிழ்நாடு எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்?

ஒன்றிய அரசு இப்படி ஒரு சட்டத்திருத்தம் கொண்டு வந்ததும், பி.பி.சி. செய்தி நிறுவனத்துக்குப் பேட்டி அளித்த ஈழ அகதிகள், "எங்களுக்கு இந்தியக் குடியுரிமை தராவிட்டால் கடலில் கொண்டு போய் தள்ளிவிடுங்கள்" என்று பேட்டி அளித்தார்கள்.

திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கு வந்த ஈழ அகதி மாணவர் ஒருவர், "எனக்கு இந்தியக் குடியுரிமைதராவிட்டால், கருணைக்கொலை செய்துவிடுங்கள்" என்று சொன்னார். இதையெல்லாம் மீறித்தான் குடியுரிமைச் சட்டம் வரப் போகிறது.

'இந்து'க்களாகவே இருந்தாலும் 'தமிழர்களாக' இருந்தால் வேண்டாம் என்பதுதான் பா.ஜ.க.வின் வகுப்புவாத, இனவெறுப்பு வாதக் கொள்கை ஆகும்.

**பா.ஜ.க.வுக்கு வாக்களிக்காமல் இருப்பதற்கு ஆயிரம் காரணம் இருக்கிறது. பா.ஜ.க.வை தமிழர்கள் புறக்கணிக்க இந்த ஒன்றே போதும்!**

## மாநில வளர்ச்சிக்கு கிஞ்சிற்றும் அக்கறை இல்லாமல்

# தமிழ்நாடு திட்டமிட்டு புறக்கணிப்பு!

## ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிக்கை!



**சென்னை, பிப். 3–**

**'ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாடு முற்றிலும் புறக்கணிக்கப் பட்டுள்ளது' என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.**

ஒன்றிய நிதிநிலை அறிக்கை குறித்து கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிக்கை வருமாறு:

இரண்டாவது முறையாக ஆட்சிக்கு வந்து பத்தாண்டுகாலம் ஆட்சி செய்து, சொல்லிக் கொள்ளும் அளவுக்கு எந்தச் சாதனையும் செய்யாத பா.ஜ.க. அரசு, ஆட்சிக்காலத்தை முடித்து விடைபெறும் நேரத்தில் இடைக்கால நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்துள்ளது. எடைபோட்டுப் பார்க்க ஏதுமில்லாத வெற்று அறிக்கையைத் தாக்கல் செய்துள்ளார், ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள்.

கடந்தகாலச் சாதனைகளையும் இந்த நிதிநிலை அறிக்கை சொல்லவில்லை; நிகழ்காலப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதாகவும் இது அமையவில்லை; எதிர்காலப் பயன்களுக்கு உத்தரவாதம் தருவதாகவும் இல்லை! மொத்தத்தில், ஏதுமற்ற அறிக்கையை வாசித்தளித்திருக்கிறார் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன். ஆட்சிக் காலம் முடியப் போகிறது என்ற அலட்சியம் தான் இந்த அறிக்கையில் தெரிகிறது.

### பொதுமக்களுக்கு ஏமாற்றம்!

நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கி வருவதால் பல்வேறு சலுகைகளைப் பொதுமக்கள் எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். பெட்ரோல், டீசல், சிலிண்டர் ஆகியவற்றின் விலைக் குறைப்பு இருக்கும் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால், பொதுமக்களுக்கு ஏமாற்றத்தையே பரிசளித்துள்ளது இந்த நிதிநிலை அறிக்கை.

வருமான வரி உச்சவரம்பில் மாற்றம் இருக்கும் என்று நடுத்தர மக்கள் எதிர்பார்த்தார்கள். அதனையும் வழங்கவில்லை; எந்தப் பொருளுக்கும் வரிக்குறைப்பு வழங்கப் படவில்லை. சலுகைகளும் ஏதுமில்லை; சாதாரண, சாமானிய, ஏழை, எளிய, நடுத்தர மக்களுக்கான எந்த அறிவிப்பும் இல்லை!

### 'இல்லா நிலை' பட்ஜெட்!

உழவர்களின் மிக முக்கியமான கோரிக்கையான குறைந்தபட்ச ஆதார விலை குறித்த அறிவிப்பு உண்டா? அதுவும் இல்லை! இப்படி 'இல்லை... இல்லை...' என்று சொல்வதற்காக எதற்கு நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்ய வேண்டும்? நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்துள்ளது, 'இல்லா நிலை' பட்ஜெட்டாக மட்டுமே அமைந்துள்ளது.

### பொய் அறிக்கை தாக்கல் செய்த நிதியமைச்சர்!

இந்தியப் பொருளாதாரம் வளர்ச்சி காணவில்லை. பணவீக்கம் குறைய வில்லை. வறுமை ஒழிக்கப்படவில்லை. வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியவில்லை. ஆனால் இதையெல்லாம் செய்து காட்டிவிட்டதாகப் பொய் அறிக்கையை தாக்கல் செய்துள்ளார் நிதி அமைச்சர். மகளிருக்கு இட ஒதுக்கீடு வழங்கப்படவில்லை. வழங்கி விட்டதாகத் தங்களுக்குத் தாங்களே தோளைத் தட்டிக் கொள்கிறார்கள்.

## 'இல்லை, இல்லை' என்று சொல்வதற்கா நிதிநிலை அறிக்கை?

மக்கள்தொகைப் பெருக்கத்தால் ஏற்படும் பிரச்சினையைச் சமாளிக்கக் குழு அமைக்கப்படும் என அறிவித்திருக்கிறார்கள். மக்கள்தொகை குறைந்து விட்டதைக் காரணம் காட்டி சில மாநிலங்களில் தொகுதிகளின் எண்ணிக்கையைக் குறைக்க நினைக்கும் திட்டத்தின் சூழ்ச்சியாக இக்குழு அமைக்கப் படுகிறதா எனச் சந்தேகம் ஏற்படுகிறது. மக்கள்தொகை குறைந்து விட்டது என்று சொல்லி, நாடாளுமன்றத் தொகுதியின் எண்ணிக்கையைக் குறைக்கும் அதேவேளையில் மக்கள்தொகைப் பெருக்கத்தால் ஏற்படும் பிரச்சினையைச் சமாளிக்கக் குழு அமைக்கப்படும் என ஏமாற்று அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்கள்.

### தமிழ்நாட்டுக்கு ரூ.20 ஆயிரம் கோடி இழப்பு!

நாட்டில் ஜி.எஸ்.டி. வரிவிதிப்பு முறை நடைமுறைக்கு வந்த பிறகு வரி வசூல் அதிகரித்திருப்பதாக நிதி அமைச்சர் பெருமைப் பட்டுக் கொள்கிறார். ஆனால் மாநிலங்களுக்கான ஜி.எஸ்.டி. இழப்பீட்டுத் தொகையை இந்த ஆண்டு வழங்குவது குறித்து எந்தவொரு அறிவிப்பும் இல்லாமல் இருப்பது மிகுந்த ஏமாற்றத்தை அளிக்கிறது. இதனால் இந்த ஆண்டு மட்டும் தமிழ்நாட்டுக்கு ஏறத்தாழ 20 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் ஒன்றிய வரிகள் மீது கூடுதல்வரிகள் மற்றும் மேல் கட்டணமாக சுமார் 7.5 இலட்சம் கோடி ரூபாயினை ஒன்றிய அரசு தொடர்ந்து வசூலித்து வருகிறது. இதனால் மாநிலங் களுக்குக் கிடைக்க வேண்டிய உரிய பங்கை ஒன்றிய அரசு தொடர்ந்து பறித்து வருகிறது.

கூடுதல் வரி மற்றும் மேல் கட்டணங்களை மாநிலங்களுடன் பகிர வேண்டும் என்று தமிழ்நாடு அரசு தொடர்ந்து வலியுறுத்தியும் ஒன்றிய அரசு கூட்டாட்சித் தத்துவதற்கு முரணாகச் செயல்பட்டு வருவது கண்டனத்திற்குரியது.

### எய்ம்ஸ்: தமிழ்நாட்டுக்கு மட்டும் ஓரவஞ்சனை!

இந்த நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாடு முழுமையாகப் புறக்கணிக்கப் பட்டுள்ளது. பத்தாண்டுகாலத்தில் பதினைந்து எய்ம்ஸ் மருத்துவமனைகள் அமைக்கப்பட்டுள்ளது என்று நிதி அமைச்சர் சொல்லி இருக்கிறார். 2015-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டு, 2019-ஆம் ஆண்டு பிரதமர் நரேந்திர மோடி அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்ட மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை 2024 வரைக்கும் கட்டுமானப் பணிகள் கூட நடக்காமல் கிடக்கிறதே... என்ன காரணம்? இந்தியாவின் மற்ற மாநிலங்களில் எல்லாம் எய்ம்ஸ் அமைத்தவர்கள், தமிழ்நாட்டில் மட்டும் அமைக்காமல் போனதற்கு என்ன காரணம்? தமிழ்நாட்டுக்கு மட்டும் ஏன் இந்த ஓர வஞ்சனை? தமிழ்நாட்டு மக்கள் இளித்தவாயர்களா? பா.ஜ.க.வுக்கு தமிழ்நாட்டில் ஓட்டு இல்லை என்பதுதான் காரணமா?

காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளப் புதிய திட்டங்களை ஒன்றிய அரசு அறிமுகப்படுத்தும் என்று நிதி அமைச்சர் அறிவித்துள்ளார்கள். ஆனால் தமிழ்நாடு அண்மையில் சந்தித்த இரண்டு தொடர் பேரிடர் இழப்புகளைச் சீரமைக்க இதுவரை எந்தவொரு நிதியும் வழங்கப்பட வில்லை என்பது தமிழ்நாட்டு மக்களையே ஒட்டுமொத்த மாக ஏமாற்றுவதாகும்.

### மெட்ரோ ரெயில்: மிகப்பெரிய துரோகம்!

மிக்ஜாம் புயல் கனமழையால் சென்னை மற்றும் சுற்றுப்புற மாவட்டங்களில் கடந்த 47 ஆண்டுகளாக இல்லாத கனமழையால் ஏற்பட்ட வெள்ளப் பாதிப்பையும், தென் மாவட்டங்களில் வரலாறு காணாத வகையில் 100 ஆண்டுகள் இல்லாத கனமழை பெய்ததால் ஏற்பட்ட பாதிப்புகளையும் கருத்தில் கொண்டு, 'தீவிர இயற்கைப் பேரிடர்' (Calamity of severe nature) ஆக அறிவிக்க வேண்டும் என்றும் இந்தியப் பிரதமர் அவர்களிடம் கேட்டுக் கொண்டேன். அது குறித்தும் எந்த அறிவிப்பும் இல்லை. 31 ஆயிரம் கோடி ரூபாய் நிவாரணத் தொகை கேட்டோம். அது குறித்தும் ஏதுமில்லை.

மெட்ரோ ரயில் மற்றும் வந்தே பாரத் திட்டங்கள் நாட்டின் மிக முக்கியமான நகரங்களுக்கு விரிவுபடுத்தப்படும் என்று நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார், ஆனால் கடந்த மூன்றாண்டு காலமாக சென்னை மெட்ரோ இரயில் திட்டத்திற்கான நிதிக்கு ஒன்றிய அமைச்சரவையில் இன்னும் ஒப்புதல் வழங்கப் படாமல் இருப்பது தமிழ்நாட்டு மக்களுக்குச் செய்யும் மிகப்பெரிய துரோகம்.

"பிரதம மந்திரியின் வீடு வழங்கும் திட்டத்தில் அடுத்த 5 ஆண்டுகளில் 2 கோடி வீடுகள் கட்டப்படும்" என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது, ஆனால் உண்மையில் நகர்ப்புறப் பகுதிகளில் கட்டப்படும் வீடுகள் ஒவ்வொன்றும் 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இருந்தாலும் ஒன்றிய அரசின் பங்கு வெறும் 1.50 இலட்சம் ரூபாய் மட்டுமே. இதில் மாநில அரசின் பங்கு 7.50 இலட்சம் ரூபாய் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டைச் சேர்ந்த இளம் சதுரங்க யாட்டுவீரர் பிரக்ஞானந்தா பற்றி குறிப்பிட்டது மட்டுமின்றி, நாட்டில்தற்போது 80 கிராண்ட் மாஸ்டர் நிலை விளையாட்டு வீரர்கள் இருப்பதாகக் குறிப்பிட்டி ருக்கிறார். ஆனால் உலகமே வியக்கும் வண்ணம் செஸ் ஒலிம்பியாட் விளையாட்டுப் போட்டியைத் தமிழ்நாடு நடத்தியதை ஒன்றிய நிதியமைச்சர் அவர்கள் வசதியாக மறந்தது ஏன்?

இந்த இடைக்கால நிதிநிலை அறிக்கையில் 'ஏழைகள், மகளிர், இளைஞர்கள் மற்றும் உழவர்கள்' ஆகிய நான்கு பிரிவினருக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படும் என்றுகூறி, இந்த நான்கு பிரிவினர்களையும் நான்கு சாதிகளைச் சேர்ந்தவர்கள் ("four major castes") என்று குறிப் பிட்டிருப்பது மிகவும் கண்டனத்திற்குரியது. ஒருநாட்டின் நிதிநிலை அறிக்கையில் மிகவும் கண்டிக்கத்தக்க பிற்போக்குத் தனமான வருணாசிரமக் கருத்தைப் புகுத்துவது சமூகநீதிக்குப் புறம்பானது.

"சமூகநீதியை அரசின் கொள்கையாகக் கொண்டு செயல்படுத்தி வருகிறோம். சமூகநீதி என்பது அரசியல் வாக்கியமாக இருந்ததை திட்டங்களுக்கான மந்திரமாகப் பயன்படுத்துகிறோம்" என சொல்லியிருக்கிறார் நிர்மலா சீதாராமன் அவர்கள். அனைத்துச் சமூக மக்களுக்குமான உரிமையைச் சரிசம விகிதத்தில் 'பறிப்பதுதான்' பா.ஜ.க பின்பற்றும் சமூகநீதி ஆகும். சமூகநீதி என்ற சொல்லைப் பயன்படுத்தும் மாற்றத்தை பா.ஜ.க அடைந்திருப்பதைப் பார்த்துச் சிரிப்பு வருகிறது.

### அமைச்சரின் உச்சக்கட்ட நகைச்சுவை!

வருகிற நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் பா.ஜ.க.வுக்குத்தான் வாக்களிப்பார்கள் என்றும்; சூலை மாதம் நாங்கள்தான் பட்ஜெட் தாக்கல் செய்வோம் என்றும் அமைச்சர் சொல்லி இருப்பது உச்சகட்ட நகைச்சுவை. நிதிநிலை அறிக்கையை அரசியல் பேராசை அறிக்கையாக ஆக்கி இருக்கிறார். நிதிநிலை அறிக்கையில் மக்களை ஏமாற்றியது போல, மக்களும் ஏமாற்றத்தை பா.ஜ.க.வுக்கு வருகிற தேர்தலில் வழங்குவார்கள்.

### புதிய இந்தியாவை 'இந்தியா' கூட்டணி உருவாக்கும்!

2047-ஆம் ஆண்டு புதிய இந்தியாவைப் படைப்போம் என்று சொல்லி இருக்கிறார்கள். 2014-ஆம் ஆண்டு முதன்முதலாக நரேந்திர மோடி அவர்கள் பிரதமர் ஆனபோது புதிய இந்தியா பிறந்ததாகச் சொன்னார்கள். 500,1000 ரூபாய் நோட்டுகளைத் தடை செய்தபோதும் புதிய இந்தியா பிறந்துவிட்டது என்றார்கள். 2019-ஆம் ஆண்டு மீண்டும் பாஜக ஆட்சிக்கு வந்ததும் புதிய இந்தியா பிறந்தது என்றார்கள். ஆனால் 2024 வரை புதிய இந்தியா பிறக்கவே இல்லை. 2047-ஆம் ஆண்டுதான் புதிய இந்தியா பிறக்கப் போவதாக நிதி அமைச்சர் சொல்லி இருக்கிறார். இவர்களால் புதிய இந்தியாவை எத்தனை ஆண்டுகள் ஆனாலும் உருவாக்க முடியாது என்பதே உண்மை. புதிய இந்தியாவை 'இந்தியா' கூட்டணி நிச்சயம் உருவாக்கும்.

### தி.மு.க. எம்.பி.க்கள் போராட்டம்!

தமிழ்நாட்டு மக்கள் நலனை முழுமையாகப் புறக்கணித்து, தமிழ்நாட்டு வளர்ச்சிக்கு கிஞ்சிற்றும் அக்கறை இல்லாமல் ஒரு நிதிநிலை அறிக்கையைத் தயாரித்து அளித்துள்ளார் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள். இந்த நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாடு திட்டமிட்டு புறக்கணிக்கப் பட்டுள்ளது. இதுகுறித்து தி.மு.க எம்.பி.கள் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்புவார்கள். நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள அண்ணல் காந்தியடிகள் சிலைக்கு முன்னால் கருப்புச் சின்னம் அணிந்து போராட்டமும் நடத்துவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### வருணாசிரமக் கருத்தைப் புகுத்துவதா?

**இந்த இடைக்கால நிதிநிலை அறிக்கையில் 'ஏழைகள், மகளிர், இளைஞர்கள் மற்றும் உழவர்கள்' ஆகிய நான்கு பிரிவினருக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படும் என்றுகூறி, இந்த நான்கு பிரிவினர்களையும் நான்கு சாதிகளைச் சேர்ந்தவர்கள் ("four major castes") என்று குறிப்பிட்டிருப்பது மிகவும் கண்டனத்திற்குரியது. ஒருநாட்டின் நிதிநிலை அறிக்கையில் மிகவும் கண்டிக்கத்தக்க, பிற்போக்குத் தனமான வருணாசிரமக் கருத்தைப் புகுத்துவது சமூகநீதிக்குப் புறம்பானது.**

# விவாதப் பொருளாகலாமா நீதிபதிகளின் கருத்துகள்?

சில நீதிபதிகள் அரசியல், மத சம்பந்தப்பட்ட சில வழக்குகளில் எழுப்பியுள்ள கேள்விகள், அளித்துள்ள தீர்ப்புகள்; இன்று, வெட்ட வெளியில் பகிரங்கமாக விமர்சிக்கப்படும் நிலையை உருவாக்கியுள்ளது!

பொதுவாக நீதிமன்றங்களின் தீர்ப்புகளோ, நீதிபதிகளின் கருத்துகளோ வீதியில் பேச்சுப் பொருளாவதில்லை! அந்த அளவு நமது நீதிமன்ற நீதிபதிகள், சட்டத்தில் தங்களுக்கு வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் நின்று நீதிமன்றத்தின் புனிதத்தைக் காத்து வந்திருக்கிறார்கள்!

**நீதிபதியாவதற்குமுன் அரசியல் கட்சிகளின் கொள்கைகளில் ஈர்ப்புடையவர்களாக இருந்த சிலர், ஏன்; இன்னும் ஒரு படி மேலே சென்று சொல்ல வேண்டுமானால். அரசியல் கட்சியில் உறுப்பினராக இருந்து செயல்பட்டவர்கள்கூட; நீதிபதிகளானபின், தாங்கள் முன்பு கொண்டிருந்த கொள்கைக்கு எதிராக இருப்பினும், தங்கள் பதவிக் காலத்தில் சட்டத்திற்குட்பட்டே தீர்ப்புகள் வழங்கி நீதிமன்றத்தின் மாண்புக்குப் பெருமை சேர்த்திருக்கிறார்கள்.**

அத்தகைய பெருமைமிகு நீதிபதிகள் எந்தவித அழுத்தத்துக்கும் அடிபணியாது கடமையாற்றி, மன்றத்தின் கண்ணியத்தைக் காத்து நின்றதற்கு பல உதாரணங்கள் உண்டு!

**ஆனால் சமீபகாலமாக நீதிமன்றங்களில் சில நீதிபதிகளின் போக்கு, நீதிமன்றத்தில் தங்கள் முன் உள்ள வழக்குக்குத் தொடர்பின்றி அவர்கள் தெரிவிக்கும் கருத்துகள், சக நீதிபதிகள், கீழமை நீதிமன்ற நீதிபதிகள் தந்த தீர்ப்பு குறித்து சந்தேகங்கள் எழுப்புவது போன்றவை இன்று சமூக வலைதளங்களில் விமர்சிக்கப்படும் நிலையினை உருவாக்கி உள்ளது.**

**அத்தகைய விமர்சனங்களுக்கு வாதப் பிரதிவாதங்கள் நடத்தப்படுவது, நீதித்துறையின் மீது மக்கள் கொண்டிருந்த மதிப்பை சுக்கு நூறாக்கிக் கொண்டிருக்கிறது. இதற்காக நாம் அந்த வாதப் பிரதி வாதங்களை நடத்திக் கொண்டிருப்போரை மட்டும் குறை கூற முடியாது; நீதி மன்றங்கள் மீது அவர்கள் கொண்டிருந்த மரியாதை கலந்த பயத்தை உடைத்தெறியும் வகையில் சில நீதிபதிகள் நடந்துகொள்ளும் போதும், வழக்குக்குள் நின்று கருத்து தெரிவிக்காது. வழக்குக்கு வெளியே சென்று கருத்துகள் கூறும் போதும் இத்தகைய எதிர்க் கருத்துகள் உலாவரத் தொடங்குகின்றன!**



நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் தங்கள் வாதங்களை எந்த ஒரு வழக்கிலும் எடுத்து வைக்கும் போது, அவர்களுக்கு வகுக்கப் பட்ட உரிய எல்லைக்குள் நின்று வாதிடுகின்றனர்! நீதிபதியின்முன் பல வழக்குகளை எடுத்துச் செல்ல வேண்டிய நிலையில் அவரை அடுத்தடுத்து சந்திக்க வேண்டி வருவதால் சில நீதிபதிகள் வழக்குக்கு வெளியே சென்று கூறிடும் கருத்துகளுக்கு உரிய மறுப்பிருந்தும் அதனைத் தெரிவிக்காது வழக்கறிஞர்கள் அமைதி காத்து விடுவது இயற்கையே! ஆனால் மக்கள் மன்றம் அப்படி இல்லை.

ஓரிருவர் நீதிபதியையோ, தீர்ப்பையோ விமர்சித்தால் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்ந்து அவரது செயலுக்குத் தண்டனை வழங்கலாம்! இது சமூக ஊடகங்கள் புற்றீசல்களாகத் தோன்றியுள்ள காலம்! இதனை நீதிபதிகளும் அறிவர்: இந்த நிலையில் நீதிபதியின் கருத்து குறித்து வாதப் பிரதிவாதங்கள் ஆயிரக்கணக்கில் தொடங்கி விடும்போது, ஒவ்வொருவரையும் கண்டுபிடித்து, நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொடர நினைத்தால், நீதிமன்றங்கள் அந்த வழக்குகளைத் தவிர வேறு வழக்கை நடத்திட முடியாது என்பதை உணர்ந்திட வேண்டும்!

**நீதிபதிகள் சிலருக்கு தங்களுக்கென்று தனிப்பட்ட கொள்கைகள் இருக்கலாம்; சில விருப்பு, வெறுப்புகள் இருக்கலாம்; நீதி மன்றத்தின் படி ஏறி, தங்களுக்கான இருக்கைக்குச் செல்லும் போது. தாங்கள் சட்டத்தின் காவலர்கள்; நேர்மையின் காரணிகள்; நியாயத்தின் காப்பாளர்கள் என்ற உணர்வுகளோடு மட்டுமே சென்றிட வேண்டும்.**

‘ஒருவரை அமைச்சராக நியமிப்பதும் நீக்குவதும் முதலமைச்சருக்கு உள்ள உரிமை’ என்று உச்சநீதிமன்றமேதீர்ப்பளித்துள்ள நிலையில், உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவர், ‘ஒரு அமைச்சர் 230 நாட்களுக்கு மேல் சிறையில் இருந்தும் அவர் அமைச்சராக நீடிக்க அனுமதிப்பதன் மூலம் மக்களுக்கு என்ன செய்தி சொல்ல விரும்புகிறீர்கள்?’ என்று நீதிமன்றத்தில் கேட்டுள்ளார்!

நீதிபதியின் பார்வையில் அவர் கருத்து நியாயமானதுதான்!

**ஆனால் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்ட நிலையில், தண்டனை பெற்று அவர் 230 நாட்கள் சிறையில் இருந்திருந்து அமைச்சர் பதவியிலிருந்திருந்தால், நீதிபதி கேட்ட கேள்வியை மக்களே கேட்டிருப்பார்கள்!**

**இன்றைய சூழ்நிலையில் பல வழக்குகளில் ஜாமின் வழங்க நீதிபதிகள் மறுத்து, குற்றம் சாட்டப்பட்டவரை பல மாதங்கள் சிறைவாசம் அனுபவிக்க வைத்திடும் நிலை; பொதுமக்கள் மட்டுமின்றி, முன்னாள் - இந்நாள் உச்சநீதிமன்ற மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகளாலும் கடுமையாக விமர்சிக்கப்பட்டாலும் பல நீதிபதிகள் அதனைக் கருத்தில் எடுத்துக் கொள்வதில்லை!**

ஆம் ஆத்மி தலைவர், டெல்லி முன்னாள் துணை முதல்வர் சிசோடியாவுக்கு ஓராண்டுக்கு மேலாகியும் நீதிமன்றம் ஜாமின் வழங்காதது குறித்து சமீபத்தில் முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி மதன் பி.லோகூர் (Madan B Lokur). கருத்தறிவிக்கையில்,


சிலந்தி

**“ஜாமின் வழங்குவது அல்லது மறுப்பதற்கான அடிப்படைக் கொள்கைகளை நீதிமன்றங்கள் மறந்து விட்டதாகத் தெரிகிறது; ("Courts seem to have forgotten the basic Principle of grant of refusal of bail")**


**முதலில் போலிஸ் கைது செய்கிறது. பின்னர் விசாரணையைத் தொடங்குகிறது. விசாரணை அமைப்புகளின் வடிவமைப்புகளை நீதித்துறை பார்க்க விரும்பாதது மிகவும் துரதிருஷ்டமானது. சட்டப் புத்தகங்கள் முழுக் கதைகளையும் கூறாது. நீதித்துறை வாழ்க்கையின் உண்மை நிலைகளுக்கு ஏற்ப விழித்தெழ வேண்டிய தேவை உள்ளது.**

("The Police first arrest the person, then start a serious investigation. An incomplete chargesheet is filed followed by supplementary chargesheet and documents are not furnished. This is most unfortunate and what is troubling is that some courts are not willing to see through this.

The judiciary needs to wake up to the realities of life as law books do not tell the whole story")

- முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி தெரிவித்த இந்தக் கருத்துகளின் ஆழம் இன்று; நீதிமன்றங்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்றாக அமைந்து விட்டது!

ஜாமின் வழங்குவதில் நீதிமன்றங்கள், பலதரப்பட்ட முறைகளைப் பின்பற்றுவதும், ஒருசில வழக்குகளில் கைது செய்யப்பட்டவர்களுக்கு இரவோடு இரவாகவே ஜாமின் வழங்குவதும், அதேபோன்ற சில வழக்குகளில் கைது செய்யப்பட்டவர்களுக்கு மாதக்கணக்கில், ஆண்டுக் கணக்கில் ஜாமின் வழங்காது இழுத்தடிப்பதும், அதுகுறித்து


**மதன் பி.லோகூர்**
உச்சநீதிமன்ற நீதிபதி (ஓய்வு)

வலைதளங்களில் பல்வேறு கருத்துகள் பகிரப்படுவதும், சில நீதிபதிகளின் நேர்மைத் தன்மையை சந்தேகத்துக்குள்ளாக்குவதும் தொடர்வது நல்லதல்ல!

‘சட்டம் ஒரு இருட்டறை... அதில் வக்கீலின் வாதம் விளக்கு’ என்றார் அண்ணா. இன்றைய நிலையில், ஒரு வழக்கறிஞரைச் சந்தித்தபோது, அவர் தெரிவித்த கருத்துகள் நம்மை அதிர வைப்பதாகவே உள்ளது!

“என்ன சார்; நாளைய வழக்குக்கு வாதம் செய்ய படித்துத் தயாராகி விட்டீர்களா?” என்றால்;

**“வாதத்தைக் கேட்டு தீர்ப்பு வழங்குவது என்ற நிலை குறைந்து வருகிறது. சில அழுத்தங்கள், (சாதிய, அரசியல்) காரணமாக சில நீதிபதிகள் தீர்ப்பை முடிவு செய்துவிட்டு வழக்கை விசாரிக்கும் நிலையில் நாம் என்ன வாதிட்டு என்ன பயன்? முன் ஆதாரங்களை (Precedent) தேடித் தேடிப் படித்து எடுத்துரைத்தாலும், முடிவு ஒன்றுதான். அது முன்னுதாரணங்களை ஆய்ந்து தெரிவித்த முடிவாக இருப்பதில்லை; பின் அழுத்தங்கள் விளைவாக எழுந்ததாகவே இருக்கிறது!”** என வேதனையோடு குறிப்பிட்டார்!

இப்போது ஒரு சில நீதிமன்றங்களில் நடைபெறும் இத்தகைய நிகழ்வுகள் தொடர்கதையானால் என்ன ஆவது?

**“மங்கை சூதகமானால் கங்கையில் மூழ்கலாம்; கங்கையே சூதகமானால் எங்கே போய் மூழ்குவது?”**

மக்கள்முன் எழத் தொடங்கியுள்ள இந்த எண்ணம் பரவாது தடுக்க; உரியவர்கள் முன்வருவார்களா?

---



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை சரக்கு முனையங்கள் மற்றும் சரக்கு கையாளும் பூங்காக்களை அமைப்பதில் உலகளவில் முன்னணி நிறுவனமான ஹபக் லாய்டு (Hapag – Lloyd) நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் Mr. Jesper Kanstrup மற்றும் இயக்குநர் Mr. Albert Lorente ஆகியோர் சந்தித்துப் பேசினார்கள். உடன் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா உள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை ஸ்பெயின் நாட்டின் சாலை கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனமான அபர்ட்டிஸ் நிறுவனத்தின் Ms. Laura Berjano, International and Institutional Relations Head அவர்கள் சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, 'Guidance' நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### அமைச்சர் கா.ராமச்சந்திரன் முன்னிலையில்!

# உதகை தீட்டுக்கலில் - மாவட்ட கால்நடை பண்ணையில் ஆய்வு!

## அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் மேற்கொண்டார்!

நீலகிரி, பிப். 3 -

நீலகிரி மாவட்டம், உதகை தீட்டுக்கல் மாவட்ட கால்நடை பண்ணையின் செயல்பாடுகள் குறித்து, சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச் சந்திரன் முன்னிலையில், மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர். இராதாகிருஷ்ணன் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

நீலகிரி மாவட்டம், உதகை தீட்டுக்கல் மாவட்ட கால்நடை பண்ணையில் பொலிகாளைப் பிரிவு, உறைவிந்து உற்பத்தி பிரிவு, தரக்கட்டுபாடு பிரிவு, விவசாயப் பிரிவு ஆகிய பிரிவுகள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் முன்னிலையில், மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராபரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.இராதா கிருஷ்ணன் நேற்று முன்தினம் (01.02.2024) நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்கள் கிராம பொருளாதாரம் முன்னேற்றம் அடைய வேண்டும் என்ற நோக்கத்தில் கால்நடைத்துறைக்காக பல்வேறு அறிவிப்புகளை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். கடந்த 09.03.2023 அன்று மாவட்ட கால்நடை பண்ணையில் 47.50 கோடி ரூபாய் செலவில் மூன்று ஆண்டுகளில் 7.5 இலட்சம் பாலினம் பிரிக்கப்பட்ட உறைவிந்து குச்சிகள் உற்பத்தி செய்ய ஏதுவாக அமைக்கப்பட்டுள்ள பாலினம் பிரிக்கப்பட்ட உறைவிந்து உற்பத்தி நிலையத்தை காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்தார்கள். இதன் மூலம் கிடேரி கன்றுகளின் பிறப்பு விகிதத்தை அதிகரிக்க அதிநவீன தொழில்நுட்பம் மூலம் பாலினம் பிரிக்க ப்பட்ட உறைவிந்தினை உற்பத்தி செய்து அதனைக் கொண்டு கால்நடைகளுக்கு கருவூட்டல் செய்வதன் மூலம்

சுமார் 90 சதவிகிதத்திற்கு மேல் கிடேரி கன்றுகள் பிறப்பதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளது

இந்நிலையத்தில் கால்நடை பராமரிப்புத்துறை மூலமாக பசு மற்றும் எருமை இனங்களுக்கு உறைவிந்து குச்சி மூலம் செயற்கை முறை கருவூட்டல் செய்யப்பட்டு வருகிறது. இதன் வாயிலாக 50 சதவிகிதம் காளைக் கன்றுகள் மற்றும் 50 சதவிகிதம் கிடேரி கன்றுகள் பிறப்பதற்கு வழி வகுக்கிறது. இந்நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் பாலினம் பிரிக்கப்பட்ட உறைவிந்து குச்சிகளை கொண்டு, பசுக்களுக்கு கருவூட்டல் செய்வதன் மூலம் அதிக எண்ணிகைகளான கிடேரி கன்றுகள் பிறப்பதற்கு வழி வகுப்பதுடன், அதிக அளவில் கறவை பசுக்களை பால் உற்பத்திக்கு கொண்டு வந்து, பால் உற்பத்தியை பெருக்கிடவும். விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இப்பண்ணையில் தரம் மிக்க உறைவிந்து குச்சிகளை உயர்தர

ஆரோக்கியமான ஜெரிச்சி மற்றும் சாஹவால் இளங்களைச் சார்ந்த 123 பொலிகாளைகளிலிருந்து பெறும் விந்துவைக் கொண்டு தயாரித்து பசு இனத்தில் செயற்கை கருவூட்டல் செய்து அவற்றின் தரத்தை மேம்படுத்தி, விவசாயிகளை பயன்பெற செய்வதாகும். இப்பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு, பண்ணையில் பொலிகாளைப் பிரிவு, உறைவிந்து உற்பத்தி பிரிவு, தரக்கட்டுபாடு பிரிவு, விவசாயப் பிரிவு ஆகிய பிரிவுகள் செயல்பட்டு கொண்டிருக்கிறது.

அதேபோல இப்பண்ணையிலேயே மாட்டுத்தீவனங்கள் தயாரித்து, நீலகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளுக்கும் விவசாமிகளுக்கு குறைந்த விலையில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. மானாவாரி நிலங்களில் புற்களை வளர்க்க மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலமாகவும், தன்னார்வ தொண்டு நிறுவனத்தார் மூலமாகவும் நடைமுறைப்படுத்தி சிறப்பான முறையில் செயல்படுத்தப்படவுள்ளது என மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அலுவலகத்தில் வண்ண மீன்கள் காட்சிகள் அருங்காட்சியகம் உள்ளிட்டவற்றை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. மு. அருணா, உதகை சட்டமன்ற உறுப்பினர் ஆர்.கணேஷ், கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் மரு.பகவத்சிங், மாவட்ட கால்நடை பண்ணை துணை இயக்குநர் மருநீலவண்ணன், கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குநர் மரு. பார்த்தசாரதி, மரு.தாமோதரன் (உறைவிந்து உற்பத்தி பிரிவு), மரு.கிருத்திகா (தரக்கட்டுப்பாட்டு பிரிவு), மரு.லக்ஷ்மணன் (பொலிகாளை பிரிவு), மீன் வளத்துறை துணை இயக்குநர் தில்லைராஜன் (பவானிசாகர்), உதவி இயக்குநர் ஜோதி லக்ஷ்மணன் உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

# ஈரோடு தெற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் சு.முத்துசாமி அறிக்கை!

மணல்மேட்டில் உள்ள மாவட்டக் கழக அலுவலகம், கலைஞர் அறிவாலயம், தளபதி மன்றத்தில் ஈரோடு தெற்கு மாவட்ட செயற்குழுக் கூட்டம் இன்று ( 3.2.2024 - சனிக்கிழமை) காலை 10 மணியளவில் மாவட்ட அவைத்தலைவர் கே.குமார்முருகேஸ் தலைமையில் நடைபெற உள்ளது.

எனவே மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு கழக செயலாளர் உட்பட நிர்வாகிகள், துணை அமைப்புகளின் நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஈரோடு வருகை குறித்து.

**க.முத்துசாமி**
செயலாளர்
ஈரோடு தெற்கு மாவட்ட தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### க. மாசிலாமணி
### பிப்ரவரி 3 (2015)



சென்னை தெற்கு மாவட்டம், சைதாப்பேட்டை பகுதியில், வட்டக் கழகச் செயலாளராக மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு கழகப் பணியாற்றியவர்.

தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் பொதுச்செயலாளராகவும் – சைதை கிழக்கு பகுதியின் அவைத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் நடத்திய அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு பலமுறை சிறை சென்றுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### தலைமைக் கழக முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என்.நேரு தலைமையில்

# திருச்சி மத்திய மாவட்டத்தில் - அண்ணா நினைவு நாள் - அமைதிப் பேரணி!

## கழகத்தினருக்கு மாவட்டச் செயலாளர் க.வைரமணி வேண்டுகோள்!



திருச்சி, பிப். 3 -

திருச்சி மத்திய மாவட்டச் செயலாளர் க. வைரமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

இன்று (3.02.2024 - சனிக்கிழமை) காலை: 8.30 மணியளவில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 55வது நினைவு நாளையொட்டி கலைஞர் அறிவாலயத்திலிருந்து கழக முதன்மை செயலளார், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில், எனது (மத்திய மாவட்ட தி.மு.க. செயலாளர் க.வைரமணி), மாநகரச் செயலாளர் மு.அன்பழகன் ஆகியோர் முன்னிலையில் அமைதி ஊர்வலமாகப் புறப்பட்டு சிந்தாமணி அண்ணாசிலை சென்றடைந்து அங்கு அண்ணா அவர்களின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படவிருக்கின்றது.

இந்நிகழ்வில் மாவட்ட, மாநகர அனைத்து ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளைக்கழக நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் நாடளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள்,

உள்ளாட்சிப் பிரதி நிதிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டப் பிரதிநிதிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் மற்றும் செயல்வீரர்கள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு வீரவணக்கம் செலுத்திட வேண்டுகிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### பேரறிஞர் அண்ணா 55 வது நினைவுநாள்!

# கிருஷ்ணகிரி கிழக்கு - மேற்கு மாவட்டத்தில் அமைதிப் பேரணி!

## மாவட்ட செயலாளர்கள் தே.மதியழகன் - ஒய்.பிரகாஷ் வேண்டுகோள்!

கிருஷ்ணகிரி, பிப். 3 -

கிருஷ்ணகிரி கிழக்கு , மேற்கு மாவட்டச் செயலாளர்கள் தே.மதியழகன் - ஒய்.பிரகாஷ் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ் மொழி உயர்வுக்காகவும், தமிழர்களின் மேம்பாட்டுக்காகவும், தமிழ்நாட்டின் சிறப்புக்காகவும் வாழ்நாள் எல்லாம் ஓயாது பாடுபட்ட உத்தமர் "பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு கிழக்கு மாவட்ட திமுக சார்பில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் தே. மதியழகன் எம் எல் ஏ தலைமையில் " இன்று கிருஷ்ணகிரி சென்ட்ரல் தியேட்டரில் இருந்து புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள அண்ணா சிலைக்கு அமைதி பேரணி சென்று அங்குள்ள அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து நினைவஞ்சலி செலுத்தப்படுகிறது.

அதே போல கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளர் ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. தலைமையில் ராம் நகர் அண்ணா சிலை முதல் தாலுகா அலுவலகம் செல்லும் சாலை அண்ணா சிலை வரை பேரணியாக சென்று அங்குள்ள "பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச்சிலைக்கு" கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட திமுக சார்பில் மாலை அணிவித்து மரியாதை செய்யப்படவுள்ளது.

இந்நிகழ்ச்சிகளில் கிழக்கு மேற்கு மாநில , மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகரம், ஒன்றியம், பகுதி, பேரூர் மற்றும் கிளை கழக செயலாளர்கள், அணி தலைவர், துணை தலைவர், மற்றும் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறார்கள்.

இவ்வாறு அவர்கள் தங்களது அறிக்கையில் தெரிவித் துள்ளனர்.



நீலகிரி மாவட்டம், உதகை மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அலுவலகத்தில் வண்ண மீன்கள் காட்சிகள் அருங்காட்சியகம் உள்ளிட்டவற்றை சுற்றுலாத்துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன் அவர்கள் முன்னிலையில், மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் இன்று நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா உட்பட பலர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பி.ஏ. காஜாமொய்தீன்
### பிப்ரவரி 3 (2018)



மாணவப் பருவத்திலிருந்தே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழகப் பணியாற்றியவர்.

ஒன்றுபட்ட சென்னை மாவட்டத்தில் திருவல்லிக்கேணி பகுதி பிரதிநிதி, வட்டக் கழகச் செயலாளர், மாவட்ட பிரதிநிதி என பல்வேறு பொறுப்புகளை வகித்து, மாநில சிறுபான்மை நலஉரிமைப் பிரிவு துணைச் செயலாளராக பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர், தலைவர் மு.க.ஸ்டாலின் ஆகியோரின் பாராட்டுகளைப் பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**




நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கில் நேற்று முன்தினம் (01.02.2024) சென்னைப் பள்ளிகளுக்கிடையிலான 2023–24ஆம் ஆண்டிற்கான விளையாட்டுப் போட்டிகளை ஒலிம்பிக் சுடர் ஏற்றி தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் மேயர் திருமதி ஆர். பிரியா, துணை மேயர் மு. மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், நிலைக்குழுத் தலைவர்கள் த.விஸ்வநாதன் (கல்வி), டாக்டர் கோ.சாந்தகுமாரி (பொது சுகாதாரம்), திருமதி. சர்ப ஜெயா தாஸ் (வரிவிதிப்பு (ம) நிதி), கூடுதல் ஆணையர் (சுகாதாரம்) சங்கர்லால் குமாவத், இணை ஆணையர் (பணிகள்) டாக்டர் ஜி.எஸ்.சமீரன், துணை ஆணையர் (கல்வி) திருமதி ஷரண்யா அறி, வட்டார துணை ஆணையர்கள் எம்.பி.அமித், (தெற்கு), கே.ஜெ.பிரவீன் குமார், (மத்தியம்), கட்டா ரவி தேஜா, (வடக்கு), மண்டலக்குழுத் தலைவர்கள் பி.ஸ்ரீராமுலு (இராயபுரம்), நேதாஜி யு. கணேசன் (துண்டையார்பேட்டை) மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள், பள்ளி மாணவ – மாணவிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### சண்டிகர் மேயர் தேர்தல்!

## ரத்து செய்யக்கோரி உச்சநீதிமன்றத்தில் மனு!

### ஆம் ஆத்மி கட்சி தாக்கல் செய்தது!

புதுடெல்லி, பிப். 2 -

சண்டிகர் மேயர் தேர்தலை ரத்து செய்யக் கோரி உச்சநீதிமன்றத்தில் ஆம் ஆத்மி கட்சி மனு தாக்கல் செய்துள்ளது.

காங்கிரஸ் ஆம் ஆத்மி கூட்டணி 20 வாக்குகளையும், பா.ஜ.க. 16 வாக்குகளையும் பெற்றது. ஆனால், ஆம் ஆத்மி வேட்பாளருக்கு விழுந்த 8 வாக்குகளை செல்லாது என அறிவித்து பா.ஜ.க. குறுக்கு வழியில் மேயர் பதவியை பிடித்தது. இதையடுத்து முறைகேடாக நடைபெற்ற சண்டிகர் மாநகராட்சி மேயர் தேர்தலை ரத்து செய்து, மீண்டும் நடத்த உத்தரவிட கோரி பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர் நீதிமன்றத்தில், வழக்குகள் தொடரப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம், இது தொடர்பாக 3 வாரத்துக்குள் பதில் அளிக்க சண்டிகர் யூனியன் பிரதேசத்துக்கு உத்தரவிட்டு வழக்கை ஒத்திவைத்தது. ஆனால், சண்டிகர் மேயர் தேர்தலை ரத்து செய்ய மறுத்துவிட்டது.

இந்நிலையில், ஆம் ஆத்மி கட்சி சார்பில் உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### ‘கேலோ இந்தியா’ விளையாட்டுப் போட்டியில் தமிழ்நாடு அரசு சாதனை!

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் அவரது குழுவினருக்கு வாழ்த்து!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, பிப். 3 -

கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டியில் தமிழ்நாடு சாதனை நிகழ்த்திருக்கிறது. இதற்காக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் அவரது குழுவினருக்கு வாழ்த்துக்கள் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**பல்வேறு சர்வதேச விளையாட்டுப் போட்டிகள் நடத்தியதன் வாயிலாகவும் அண்மையில் நடைபெற்ற கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் வாயிலாகவும் தமிழ்நாடு, இந்தியாவின் விளையாட்டுத் தலைநகர் மற்றும் உலக விளையாட்டு மையம் என்ற தனது நிலையை உறுதிப்படுத்தி வருகிறது.**

**கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு 2023 போட்டியில் தமிழ்நாடு 38 தங்கம், 21 வெள்ளி, 39 வெண்கலம் என 98 பதக்கங்களுடன் இரண்டாம் இடத்தை பிடித்துள்ளது. 18 வயதுக்குட்பட்ட சாம்பியன்கள் நிகழ்த்திய சிறப்பான சாதனையானது, முதன்முறையாக குறிப்பிடத்தக்க வெற்றியைக் குறிக்கிறது.**

**கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகளை எவ்விதத்திலும் குறைபாடற்ற முறையில் நடத்தியதற்காக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் அவரது குழுவினருக்கும் எனது வாழ்த்துகள். நமது திறமையான விளையாட்டு வீரர்கள் நிகழ்த்திய இச்சாதனை எதிர்கால நட்சத்திரங்களை உருவாக்கிட வழிவகுப்பதாய் அமைந்துள்ளது!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### தேங்காய்ப்பட்டினத்தில் மீன் பிடிக்கச் சென்று

# காணாமல் போன மீனவர் குடும்பத்திற்கு நிதி உதவி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, பிப்.3 -

கன்னியாகுமரி மாவட்டம் தேங்காய்ப்பட்டணம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து விசைப் படகில் சென்று கடலில் தவறி விழுந்து காணாமல் போனவரின் குடும்பத்திற்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அளித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

கன்னியாகுமரி மாவட்டம், தேங்காய்ப்பட்டணம் மீன்பிடி துறைமுகத்திலிருந்து கடந்த 14.01.2024 அன்று IND-TN-15-MM-4636 என்ற பதிவெண் கொண்ட விசைப்படகில் மீன் பிடிக்கச் சென்றவர்களில், விசைப்படகில் சமையல் பணிக்காகச் சென்ற கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் வட்டம், தேங்காய்ப்பட்டணம் கிராமத்தைச் சேர்ந்த எ.ஜலாலுதீன் (வயது 38), த/பெ.அபுபக்கர் என்பவர் கடந்த 21.01.2024 அன்று காலை 5.30 மணியளவில் கன்னியாகுமரி கடலில் இருந்து சுமார் 40 கடல் மைல் தொலைவில் ஆழ்கடலில் விசைப்படகிலிருந்து கடலுக்குள் தவறி விழுந்துள்ளார். அவரை மீட்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும், இதுவரை கண்டுபிடிக்க இயலாமல் காணாமல் போயுள்ளார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

கடலில் தவறி விழுந்து காணாமல் போயுள்ள எ.ஜலாலுதீன் என்பவரது குடும்பத்திற்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்திற்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

### திருச்சி தெற்கு மாவட்டத்தில்

# பேரறிஞர் அண்ணாவின் 55 ஆம் ஆண்டு நினைவு ஊர்வலம்!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை!



*திருச்சி, பிப். 3 -*

*திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:*

*பேரறிஞர் அண்ணா அவர்களின் 55 ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி, இன்று (03.02.2024-சனிக்கிழமை) காலை 8.00மணி அளவில் முதன்மைக் கழக செயலாளர் கே.என்.நேரு தலைமையில் சத்திரம் பேருந்து நிலையம் காமராஜர் திரு உருவச் சிலையில் இருந்து சிந்தாமணியில் உள்ள அண்ணா சிலைக்கு மௌன ஊர்வலமாகச் சென்று காலை 8.15 மணிக்கு பேரறிஞர் அண்ணா அவர்களின் திரு உருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது.*

*இந்நிகழ்வில் மாநில, மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, வார்டு, கிளை கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள்,*

*அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைத்து உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக முன்னோடிகள் மற்றும் கழக தொண்டர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு வேண்டுகிறேன்.*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*

### இடைக்கால பட்ஜெட்டில் தமிழ்நாடு புறக்கணிக்கப்பட்டதற்கு எதிர்ப்பு!

# டெல்லியில் வரும் 8ஆம் தேதி தி.மு.க. எம்.பி.க்கள் போராட்டம்!

### நாடாளுமன்ற வளாகம் காந்தி சிலை முன்பு நடைபெறுகிறது!

### கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் அறிவிப்பு!

புதுடெல்லி, பிப். 3 -


கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒன்றிய அரசின் இடைக்கால பட்ஜெட்டில் தமிழ்நாடு புறக்கணிக்கப்பட்டதை எதிர்த்தும், புயல் மழை நிவாரணம் வழங்காததைக் கண்டித்தும், கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் டெல்லியில் ஆர்ப்பாட்டம் செய்வார்கள் என்று அறிவித்திருந்தார். அதன்படி கழகத் தலைவர் - முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவுப்படி வரும் 8ஆம் தேதி தி.மு.க. எம்.பி.க்கள் போராட்டம் நடத்தவுள்ளனர் என்று கழக எம்.பி.க்கள் தெரிவித்துள்ளனர்.

இது பற்றிய விவரம் வருமாறு:

ஒன்றிய அரசின் இடைக்கால பட்ஜெட்டில் தமிழ்நாடு புறக்கணிக்கப்பட்டிருப்பது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கண்டனம் தெரிவித்திருந்தார். தமிழ்நாடு புறக்கணிப்பு குறித்து நாடாளுமன்றத்தில் தி.மு.க. எம்.பி.க்கள் குரல் எழுப்புவார்கள் என்றும் பட்ஜெட் குறித்த தமது அறிக்கையில் முதலமைச்சர் கூறியிருந்தார். இந்நிலையில் இடைக்கால பட்ஜெட்டில் தமிழ்நாடு புறக்கணிக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், புயல் மழை நிவாரணம் வழங்காத ஒன்றிய அரசைக் கண்டித்தும்

நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள காந்தி சிலை எதிரே வரும் பிப்ரவரி 8 ஆம் தேதி தி.மு.க. எம்.பி.க்கள் கருப்பு சின்னம் அணிந்து போராட்டத்தில் ஈடுபட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# அண்ணா - நினைவில் நிலைத்த நெடுஞ்சித்திரம்!



இன்று பிப்ரவரி 3 - அறிஞர் அண்ணா நினைவு நாள்! இந்த நினைவு நாள் என்பதே ஒரு குறியீடுதான்; அண்ணா அவர்களைப் பொறுத்தவரை, அவர்தம் அருமைத் தம்பிமார்களாகிய நாம், இந்த ஒரு நாள் மட்டுமா அவரை நினைக்கிறோம்? இல்லை; நம் எல்லோருடைய நினைவிலும் எப்பொழுதும் நீங்காத நெடுஞ்சித்திரமாக நிலைத்திருப்பவர் அவர் !

அண்ணா அவர்களைப் பற்றிய நினைப்பே, பல்லாயிரம் பேரை பேச்சுக் கலையில் பழக்கியது; பின்னர் அவர்கள் எல்லாம், மேடையிலே வீசிய மெல்லிய பூங்காற்றாய் மணம் வீசினர்.

**அண்ணா அவர்களைப் பற்றிய நினைப்பே, பல நூறாயிரம் பேரை எழுத்தாளர்களாக்கியது; அவர்கள் எழுதி எழுதி மேற்சென்றனர். அண்ணா அவர்களோ, திராவிடத்துத் தீரா எழுத்தானார்; திசை எட்டும் ஆட்கொண்டார்.**

**அண்ணா அவர்களைப் பற்றிய எண்ணமே, ஏராளமானோரை அரசியலுக்கு ஈர்த்தது; பொது வாழ்க்கையில் புகுந்து புடம் போட்டுக் கொள்ளச் செய்தது.**

**இவ்வாறு, அண்ணா எல்லோர்க்கும் முதல்வரானார்,முன்னோடி ஆனார், மூலகர்த்தாவானார்.**

அண்ணல் காந்தி அடிகள், விடுதலைப் போரில் அகிம்சையைப் பின்பற்றினார்; வன்முறை தவிர்த்த ஒத்துழையாமையைக் கடைப்பிடித்தார்; எளிமையையும், பொறுமையையும் தரித்துக் கொண்டார்; இவ்வகை ஆயுதங்களைக் கொண்டே, அணி தேர்ப் புரவி ஆட்பெரும் படையொடு நம் அன்னை தேசத்தை அடிமைப்படுத்தி, அதிகாரம் செலுத்தி வந்த வெள்ளை ஏகாதிபத்தியத்தை வெருண்டோடச் செய்தார்.

காந்தியாரைப் போலவே, அறிஞர் அண்ணா அவர்கள், “பலாத்காரம் கூடாது. பலாத்காரம் என்றால், ஆயுத பலாத்காரம் மட்டுமல்ல, தத்துவம் மூலம் பலாத்காரம் புகுத்துவதும் கூடாது. தேச ஒற்றுமை, தேசியம் என்று ஏதேனும் தத்துவங்களையே கருவியாக்கிப் பலாத்காரப் படுத்துவது கூடாது” என்று எதிலும் வன்முறையை வெறுத்தார்.

**“எதிரிகள், தாக்கித் தாக்கித் தங்கள் வலுவை இழக்கட்டும்; நீங்கள், தாங்கித் தாங்கி வலுவைப் பெற்றுக் கொள்ளுங்கள்” என்று தம்பிமார்களுக்கு அறிவுறுத்தினார். “கண்டனத்தைத் தாங்கிக் கொள்ளும் திடமனம் இல்லையென்றால்,கடமையை நிறைவேற்ற முடியாது” என்றும்; “கட்டுப்பாடும் ஒழுங்கும் கட்டாயம் நமக்குத் தேவை. இவை சாதாரணமானவைதான். ஆனால் இம்மாதிரி சாதாரண விஷயங்களைக் கொண்டே ஒரு சமூகத்தை எடை போட முடியும்” என்றும்; வலியுறுத்தி, கடமை – கண்ணியம் – கட்டுப்பாடு போதனை செய்தார்.**

தமிழினம், தமிழ் மொழி – மறுமலர்ச்சிக்காகத் திட்டமிட்டுப் பணி செய்தார் அண்ணா. எதையும் தாங்கும் இதயத்தை இயற்கையாகவே பெற்றிருந்ததால், எல்லாவகை இழிமொழிகளையும் தாங்கித் தாங்கி, எதிலும் எதற்கும் அவசரப்படாமல், இந்த பூமி காத்த பொறுமையை மனதில் புடம் போட்டு வளர்த்துக் கொண்டு; “ மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு “ என்ற செறிந்த நாகரிகத்துடன், சீர் தூக்கி, அடி அளந்து நடந்து, நீடு துயிலில் ஆழ்ந்திருந்த திராவிடத்தைச் சிலிர்த்தெழச் செய்தார்.

**தனிநாடு கேட்பதில் உள்ள நியாயங்களை உணர்ந்து, பிரிவினை குறித்து ஆழமாகச் சிந்தித்து, எழுதியும் பேசியும் ‘திராவிட நாடு திராவிடருக்கே’ என முழக்கமிட்ட அண்ணா அவர்கள், அதைக் கைவிட வேண்டிய கட்டாய சூழல் ஏற்பட்ட போது,**

**“இலட்சியவாதிகளான என் தம்பிமார்கள் வளர்க்கும் இந்த இயக்கத்தைக் காப்பாற்றவும், மானிட உரிமையைக் காத்திடத் துணையாகும் ஜனநாயகத்தைக் காப்பாற்றவும், நான் திராவிட நாடு பிரிவினையைக் கைவிடத்தான் வேண்டும் , வேறு வழியில்லை “ என்று மிகுந்த மன திடத்தோடு அண்ணா அறிவித்தார்.**

**எனினும், எழுப்பி வந்த கோரிக்கையிலே இருந்த நியாயத்தைத் தெளிவு படுத்திடும் வண்ணம்,” நான் நாட்டுப் பிரிவினையைத் தான் கைவிடுகிறேனே தவிர, நாட்டுப் பிரிவினைக்கான காரணங்கள் அப்படியேதான் இருக்கின்றன” என்று சொன்னதின் மூலமாக அண்ணா சாதுர்யம் மிக்க அரசியல் ஆளுமை இமயமாக உயர்ந்தார்.**

**கடவுள் இல்லை என்று சொல்வோமானால், நாம் சொல்லும் பிறவற்றை ஏற்றுக் கொள்கிற மனநிலையிலே உள்ளவர்கள் கூட , அவற்றையும் ஏற்றுக் கொள்ளத் தயங்குவர்; கடவுளைப் பற்றி எல்லோரையும் சிந்திக்க வைக்க வேண்டும், மாறுபாடுகளைக் குறைத்து, உடன்பாடுகளை அதிகப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன், “ ஒன்றே குலம், ஒருவனே தேவன் “ என்னும் திருமூலரின் கருத்தைப் பதிவு செய்து, அண்ணா சமூக விஞ்ஞானியாக அனைவரையும் பிரமிக்க வைத்தார்..**

பிரிவினைக் கோரிக்கை குறித்தும், கடவுளைப் பற்றிய கருத்தாக்கம் தொடர்பாகவும், அண்ணா அறுபது ஆண்டுகளுக்கு முன்னரே மேற்கொண்ட நிலைப்பாடுகள், எந்தவித மறுபரிசீலனையும் இன்றி இன்றளவும் இயக்கத்தின் அடிப்படைக் கோட்பாடுகளாகத் தொடர்வதின் மூலம், அண்ணா ஈடிணையற்ற தொலை நோக்குச் சிந்தனையின் தூய ஊற்று என்று திராவிடம் தெளிவாக ஏற்றுக் கொண்டுள்ளது.

கைக்கொண்ட அணுகுமுறைகளினால் தென்னாட்டுக் காந்தி ஆனார்; ஆகச் சிறந்த சொற் பொழிவுகளினால் இந்நாட்டு இங்கர்சால் ஆனார்; சமூக நோக்கம் கொண்ட நாடகங்களைப் படைத்ததினால், பெர்னாட்ஷா ஆனார் அண்ணா !

“தமிழுக்கு ஒரு சார்லஸ் டிக்கன்ஸ், கோல நடைக்கொரு கோல்ட்ஸ்மித், உணர்ச்சியை உலுக்க ஒரு விக்டர் ஹியோகோ, உரையாடலுக்கு ஒரு ஷெரிடன், கேலிக்கு ஒரு மோலியர், எளிமைக்கு ஒரு எமிலி ஜோலா “என்று கவிஞரும், நாடக ஆசிரியருமான எஸ்.டி. சுந்தரம், மேலை நாட்டின் இலக்கிய ஜோதிகளை அண்ணா அவர்களுக்கு உருவகமாக்கிச் சொல்லி இருப்பது, அவரது பன்முக ஆற்றலுக்கான அழகிய அடையாளம்.

**அனைத்திற்கும் மேலாக, “அண்ணாவை நான் புத்தர் என்றே சொல்வேன். அவர் பொறுமையிலே புத்தர்; பிறருடைய கடுஞ் சொல்லையெல்லாம் தாங்கிக் கொள்வதானாலே புத்தர்; தனக்கு வந்த இழிவைப் பற்றியெல்லாம் கவலைப் படாத தன்மையிலே புத்தர்; இரக்க உணர்வு மிகுந்த, தியாகத் திருவுருவமாக இருந்த அண்ணா, புத்தராக இருந்தார் “ என்று அண்ணா மறைந்த போது தந்தை பெரியார் கூறினார்.**

அறிஞர் அண்ணா என்னும் திராவிட புத்தர், நம் நினைவில் நெடுஞ்சித்திரமாகவும், கலை வண்ணம் மாறாத மாசறு பொற் சிலையாகவும் நிலைத்திருந்து, நமக்கு மட்டுமல்லாமல், நம் சந்ததியினர்க்கும், ஈர்ப்பு சக்தியாக என்றும் இருப்பார் !

**வாழ்க அண்ணா ! வாழ்க அண்ணா ! ! வாழ்க அண்ணா !!!**

•••

**கி.இராஜமாணிக்கம்**

•••




சிதம்பரம், மயிலாடுதுறை, நாகை மக்களவைத் தொகுதிக்குட்பட்ட கழக நிர்வாகிகளுடன், கழக நாடாளுமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்பு மற்றும் மேற்பார்வைக் குழுவின் சார்பில் – சென்னை கலைஞர் அரங்கில் நேற்று முன்தினம் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. ஒருங்கிணைப்புக் குழுவினரான – கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு, அமைச்சர் எ.வ.வேலு, கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர் தங்கம்தென்னரசு ஆகியோர் ஆய்வு செய்தனர். உடன் கடலூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், அரியலூர் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், மாவட்டச் செயலாளர்கள் குன்னம் ராஜேந்திரன், நிவேதா முருகன், கௌதமன், உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# நாடாளுமன்றத் தேர்தல் - 2024
# தலைமைக் கழக அறிவிப்பு

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, நாடாளுமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், 22-01-2024 அன்று மாலை 5 மணியளவில் சென்னை, அண்ணா அறிவாலயம், முரசொலி மாறன் வளாகத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடைபெற்றது. இதில் கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர்கள் எ.வ.வேலு, தங்கம் தென்னரசு, கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஜனவரி21 அன்று சேலத்தில் நடைபெற்ற தி.மு.க. இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டில் எழுச்சியுரையாற்றும்போது தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் வழங்கிய அறிவுரையின்படி, நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட நிர்வாகிகளான பொறுப்பு அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட/ மாநகர / பகுதி/ ஒன்றிய/ நகர/ பேரூர் கழகச் செயலாளர்கள், தொகுதிப் பார்வையாளர்கள், மாநகராட்சி மேயர், துணை மேயர் மற்றும் மண்டலக்குழுத் தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்கள், நகர்மன்றத் தலைவர்கள், ஒன்றியக்குழுத் தலைவர்கள், பேரூராட்சித் தலைவர்கள் உள்ளிட்ட "நிர்வாகிகள் சந்திப்பு" கீழ்க்கண்ட அட்டவணைப்படி. சென்னை, அண்ணா சாலை, "அண்ணா அறிவாலயத்தில்" நடைபெறும்.

| தேதி | நேரம் | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|
| 03.02.2024 | காலை 10.00 மணி | வடசென்னை, தென் சென்னை |
| | மாலை 3.00 மணி | மத்திய சென்னை, திருபெரும்புதூர் |
| 04.02.2024 | காலை 9.00 மணி | திருவண்ணாமலை, ஆரணி |
| | மாலை 3.00 மணி | பெரம்பலூர், திருச்சி |
| 05.02.2024 | காலை 9.00 மணி | கரூர், திண்டுக்கல் |
| | மாலை 3.00 மணி | காஞ்சிபுரம், புதுச்சேரி |

குறிப்பு: அந்தந்த நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட நிர்வாகிகள் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பாகவே அரங்கத்திற்குள் வந்து அமர்ந்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

அரசன் வீட்டு முட்டை குடியானவனின் அம்மிக்கல்லை உடைக்கப் பார்ப்பதுபோல்

# 3,500 ஆண்டு கால தமிழை 400 ஆண்டு 'இந்தி'யால் அழிக்கப்பார்ப்பதா?

## வீரவணக்க நாள் கூட்டத்தில் கவிஞர் காசிமுத்துமாணிக்கம் பேச்சு!

திருச்சி, பிப். 3 -

மொழிப் போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் கூட்டம். திருச்சி - துறையூர் பாலக்கரை - ராமஜெயம் திடலில் மாவட்ட அணி அமைப்பாளர் வருண்ராஜ் தலைமையில் திருச்சி வடக்கு மாவட்டச் செயலாளர் காடுவெட்டி தியாகராஜன் எம்.எல்.ஏ., ஸ்டாலின் குமார் எம்.எல்.ஏ. மற்றும் வர்த்தகர் அணி அமைப்பாளர் திருமூர்த்தி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

விஜயகுமார் நன்றியுரை யாற்றினார்.

இக்கூட்டத்தில் தி.மு.க. வர்த்தகர் அணி செயலாளர் கவிஞர் காசி முத்து மாணிக்கம் பேசியதாவது:-

இந்தியாவிற்கென்று தனி மொழி வேண்டும் என்பதுதான் தேச பக்தி என்றால் அமெரிக்கா, கனடா போன்ற 50க்கும் மேற்பட்ட நாடுகள் பேச்சு எழுத்து மொழியாய் ஆங்கிலத்தையும் மலேசியா, சிங்கப்பூரில் தங்கள் தாய்மொழிக்கு எழுத்து வடிவமாய் ஆங்கிலத்தையும் வைத்துக்கொண்டதால் அவர்கள் தேசபக்தி அற்றவர்களா?

நம்மை நாயன்மார்கள் விஜய நகரபேரரசர்களால், நவாபுகள், மராட்டியர்கள், வெள்ளையர்கள் ஆண்டிருக்கிறார்கள்.

அதற்காக மராட்டியம் கற்றால்தான் கேசியர் வேலை என தஞ்சை பெரிய கோயிலில் யாரும் சொன்னதில்லை.

நவாப்புகள் உருது கற்றால்தான் தமிழ் நாட்டில் வேலை என்று சொன்னதில்லை.

நாயக்க மன்னர்கள் தெலுங்கு கற்றால்தான் வேலை என்று சொன்னதில்லை.

**ஆங்கிலம் கற்க என ஆங்கிலேயரே சொன்னதில்லை!**

ஆங்கிலம் கற்றால்தான் மணியக்காரர் வேலை என ஆங்கிலேயன் சொன்னதில்லை.

நம்மை அடிமையாக நடத்திய ஆட்சியாளர்களால் கூட மொழியை கட்டாயமாக திணிக்கவில்லை.

ஆனால் நம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜன நாயக நாட்டில் இந்தி மொழியை திணிக்கலாமா?

பலமொழி இருந்தால் அது நாட்டுக்கு - கேடா என்றால் இல்லை, இரண்டு மொழி கொண்டு பெல்ஜியம் வெற்றி பெறவில்லையா?

மூன்று மொழி கொண்டு இலங்கை இல்லையா, நான்கு மொழிக் கொண்டு மலேசியா, சிங்கப்பூர் இல்லையா?

**வட இந்தியாவில் ஆங்கில மீடியம் இல்லையா?**

அறிஞர் அண்ணா சொன்னதுபோல் சுவற்றை உடைத்து வெளியே செல்ல பூனைக்கு ஒரு ஓட்டை, குட்டிக்கு ஒரு ஓட்டையா? இந்தியாவே ஆங்கிலத்தையும் 2ம் மொழியாக கற்றுக்கொண்டால் இந்தியாவுக்கும் உலகத்திற்கு தொடர்பு கொள்ள ஒரு மொழியாய் ஆங்கிலம் போதுமே!

**நாம் மட்டும்தான் ஆங்கிலமா?**

தெற்கே குமரி முனையிலிருந்து வடக்கே விந்திய மலை வரைக்கும் தமிழே பேசப்பட்டது. அன்று தமிழுக்குள் புகுந்த சமஸ்கிருதம் ஆங்காங்கே பிராந்திய மொழிகளை உருவாக்கியது. அதுதான் கன்னடம் என்றும், மலையாளமென்றும், தெலுங்கு என்றும் திரிந்தது. கடைசியில் தமிழ் நாட்டுக்கு மட்டுமே தமிழ் என்று ஆகி கிடக்கிறது. எல்லாம் சமஸ்கிருதத்தின் மாயாஜாலம். இந்தியா முழுவதும் தனது நாடாக்கி கொண்டிருந்த தமிழ் இன்று 1,30,060 சதுர கிலோ மீட்டராக சுருங்கிவிட்டது.

**3,500 ஆண்டுகளுக்கு முன் தோன்றிய தமிழ்மொழி!**

3500 ஆண்டுக்கு முன் தோன்றிய தமிழை, 400 ஆண்டுக்கு முன் தோன்றிய இந்தி அழிக்கப்பார்க்கிறது. அரசன் வீட்டு முட்டை குடியானவன் வீட்டு கல்லை உடைக்க துடிக்குது.

இந்தியை உள்ளே விட்டால் என்னவென்று என்னை சிலர் கேட்கிறார்கள்.

இப்படி கேட்ட சில மொழிகள் அனுசரித்து தன்னை இழந்து இருக்கிறது. ராஜஸ்தான், ஆவாதி, மைத்ரேயி, போஜ்பூரி சாத்ரி, மகதி இதை வைத்துதான் அறிஞர் அண்ணா சொன்னார் இந்தி என்கிற ஒட்டகம், தமிழ் கூடாரத்தில் முதலில் மூக்கு - தாடை - தலை - கழுத்து - முதுகு - உடம்பு என ஒரு வழியாக கூடாரத்தையே ஆக்கிரமித்தது போல இந்தி நுழைந்து விடும்.

இந்தி படித்தால் வட மாநிலத்தில் உனக்கு வேலை என்பதற்காக உன்னை படிக்க சொல்லவில்லை. இந்தி மட்டும் தெரிந்தவன் இந்தியா முழுவதும் வேலை பார்த்திட உன்னிடம் வேலை செய்திட. உன்னை இந்தி படிக்க சொல்கிறார்கள்.

ஆனால் ஆங்கிலம் படிப்பதால் வெள்ளைக்காரன் வேலை கேட்டு இங்கு வரவில்லை. நாம் ஆங்கிலம் கற்றுக்கொண்டால் உலகம் முழுவதும் போகலாமே வேலை செய்திட.

ஆண்டிற்கு தமிழுக்கு 9 கோடி, சமஸ்கிருதத்திற்கு 519 கோடி தருவைத்தான் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடக்கிறது.

ஏறத்தாழ 86 ஆண்டுகாலமாக இந்தி என்கிற பேய் உள்ளே நுழைய முயல்வதும் அதை நாம் அடித்து விரட்டுவதும் பழகிவிட்டது.

1937-ல் தமிழ் நாடு தமிழுருக்கே என்கிற கோஷத்தை எங்கள் பாட்டான் பெரியார் திருச்சி மாநாட்டில் சொன்னார்.

1948-ல் அறிஞர் அண்ணா "நம் போராட்டத்திற்கு வீணர்களை அல்ல வீரர்களை எதிர்பார்க்கிறேன்" என்றார்.

1965 - ஜனவரி இந்தி மகுடம் சூட்டிக்கொள் ளும் என லால்பகதூர் சாஸ்திரி கூறியதனை எதிர்த்து தி.மு.க, இந்தி எதிர்ப்பு மாநாடு நடத்தியது. இந்த மா நாட்டில் போராட்டக் குழு தலைவராக கலைஞர் தேர்வு செய்யப்பட்டார்.

1965-ல் கலைஞர் திரை உலகத்தின் உச்சத்தில் இருக்கிறார், கலைஞரின் கதை வசனத்தை கேட்டு வீட்டு வாயிலில் பலர் காத்து இருந்த காலம் அது. 1964 டிசம்பர் 16ல் கலைஞர் 6 மாத தண்டனை பெற்றார். அதே போல் அ.தி.மு.க காலத்தில் சட்டத்தை எரித்து 10 எம்.எல்.ஏ.க்கள் பதவி போனது.அதில் கலைஞரும் ஒருவர்.

கடந்த அ.தி.மு.க ஆட்சியில் அ.தி.மு.கவிடம் எம்.பி.க்கள் 49 ஆக இருந்தது. ஆசிரியர் தினத்தை "குரூத்சவ்" என்று மாற்றியபோது, சமஸ்கிருத வாரம் கொண்டாடியபோது எல்லாம், அ.தி.மு.க அமைதி காத்தது போல தி.மு.க விடம் எதிர்பார்த்தால் ஏமாந்துதான் போகணும்.

இவ்வாறு கவிஞர் காசி முத்துமாணிக்கம் பேசினார்.

# வணிகப் பயன்பாட்டிற்கான சிலிண்டரின் விலை உயர்வு!

சென்னை, பிப். 3 -

சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலையில் ஏற்படும் மாற்றங்களை கருத்தில் கொண்டு எண்ணெய் நிறுவனங்களே கேஸ் விலையை தீர்மானித்துக்கொள்ளலாம் என்று ஒன்றிய அரசு ஏற்கெனவே அறிவித்து விட்டது.

இதனையடுத்து மாதத்திற்கு இரண்டு முறை இந்நிறுவனங்கள் கேஸ் விலையை தீர்மானிக்கும். அந்த வகையில் தற்போது வணிக சிலிண்டரின் விலை உயர்த்தப்பட்டிருக்கிறது.

சென்னையில் 19 கிலோ எடை கொண்ட வணிக பயன்பாட்டிற்கான சிலிண்டர் விலை 12 ரூபாய் 50 காசுகள் உயர்த்தப்பட்டுள்ளன.

இதன் மூலம் சென்னையில் வணிக பயன்பாட்டிற்கான சிலிண்டர் 1,924 ரூபாய் 50 காசுகள் என விற்பனையாகி வந்த நிலையில் நேற்று முன்தினம் முதல் 1,937 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இதனால், ஓட்டல்களில் உணவுப் பொருட்களின் விலை அதிகரிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

சென்னையில் வீட்டு உபயோக சிலிண்டர் விலை மாற்றமின்றி 918 ரூபாய் 50 காசுகள் என்ற நிலையில் நீடிக்கிறது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பி. முருகேசன்
### பிப்ரவரி 3 (2003)



இளம்வயதிலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, காஞ்சிபுரம் ஒன்றியக் கழகச் செயலாளராக தொடர்ந்து 7 முறை பொறுப்பேற்று, முப்பது ஆண்டுகள் கழகப் பணியாற்றியவர்.

மேல் ஒட்டிவாக்கம் ஊராட்சிமன்றத் தலைவராகவும், துணைத் தலைவராகவும் – காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

1989, 1996 ஆகிய இருமுறை காஞ்சிபுரம் தொகுதி கழக சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு காஞ்சிபுரத்தில் திருப்பாற்கடல் குடிநீர் திட்டத்தையும் – பாலாற்றின் குறுக்கே உயர் மட்ட பாலங்களையும் கழக ஆட்சியில் கொண்டு வந்தார்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே.எஸ். முருகேசன்
### பிப்ரவரி 3 (2004)



மாணவப் பருவத்திலிருந்தே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழகப் பணியாற்றியவர்.

கூத்தைப்பார் ஊராட்சி மன்றத் தலைவராகவும், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கித் தலைவராகவும், திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

1977ல் திருவெறும்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்கள் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
தி.மு.க.





ஒன்றிய பா.ஜ.க. அரசின் புதிய கல்விக் கொள்கை, 'நீட்' திணிப்புக்கு எதிராக 'யுனைடெட் ஸ்டுடென்ட்ஸ் ஆஃப் இந்தியா' கூட்டமைப்பு சார்பில் சென்னையில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாபெரும் மாணவர் பேரணியை கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், கொடியசைத்து துவக்கி வைத்து எழுச்சியுரையாற்றினார். இந்நிகழ்வில் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மாணவரணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. உள்ளிட்ட மாணவர் அணி நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### தேசிய கல்விக் கொள்கை, 'நீட்'டுக்கு எதிராக

# மாணவர் அமைப்பினர் மாபெரும் பேரணி!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சென்னை, பிப். 3 -

தேசிய கல்விக் கொள்கைக்கு எதிராக மாணவர் அமைப்பினர் பேரணி நடைபெற்றது. யுனைடெட் ஸ்டுடென்ட்ஸ் ஆஃப் இந்தியா கூட்டமைப்பு சார்பில் பேரணியை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கொடி அசைத்து தொடங்கி வைத்தார்

செயின்ட் பீட்டர்ஸ் மைதானம் முதல் ராபின்சன் பூங்கா வரை மாணவர் அமைப்பினர் பேரணி நடைபெற்றது. இந்தியாவை காக்கவும், மாணவர்களின் கல்வி உரிமையை காக்கவும் பேரணியில் முழக்கமிட்டுச் சென்றனர்.

தி.மு.க. மாணவரணி உள்பட 16 அமைப்புகளைச் சேர்ந்த பல்லாயிரக் கணக்கானோர் பங்கேற்றனர்.

நீட் மற்றும் தேசிய கல்வி கொள்கையை ரத்து செய்ய வலியுறுத்தி இந்தியா கூட்டணி மாணவர் அமைப்பு சார்பில் சென்னை ராயபுரத்தில் நடைபெற்ற மாபெரும் பேரணியை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கொடி அசைத்து தொடங்கி வைத்தார்.

யுனைடெட் ஸ்டுடென்ட்ஸ் ஆஃப் இந்தியா கூட்டமைப்பு சார்பில் நீட்டை ரத்து செய்ய வேண்டும், தேசிய கல்விக் கொள்கையை கைவிட வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னை ராயபுரத்தில் மாபெரும் பேரணி நடைபெற்றது. தி.மு.க. மாணவர் அணி உட்பட 16 மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு சார்பில் இந்த பேரணி நடைபெற்றது. சென்னை ராயபுரம் செயின்ட் பீட்டர்ஸ் மைதானத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தி.மு.க. இளைஞரணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு பேரணியை கொடி அசைத்து தொடங்கி வைத்தார்.

தொடர்ந்து, மாணவர் அமைப்பினர் மத்தியில் உரையாற்றிய அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மாநிலத்தின் கல்வி உரிமையை மீட்கவும், புதிய கல்விக் கொள்கையை ரத்து செய்யக்கோருதல் உள்ளிட்ட 4 முக்கிய அம்சங்களை வலியுறுத்தி பேரணி நடைபெறுவதாக கூறினார். புதிய கல்வி கொள்கையை தி.மு.க. தொடர்ந்து எதிர்க்கும் என்று கூறிய அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாடு புதுச்சேரியில் 40 தொகுதிகளிலும் வெற்றி பெறுவோம் என உறுதிபட தெரிவித்தார்.

இந்த பேரணியில் தி.மு.க. மாணவர் அமைப்பினர் உள்பட பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொண்டு முழக்கங்களை எழுப்பினர். ராயபுரம் செயின்ட் பீட்டர்ஸ் பள்ளியில் இருந்து தொடங்கிய பேரணியானது ராபின்சன் பூங்காவை சென்று நிறைவடைந்தது. இந்த பேரணியில் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, தி.மு.க. மாணவரணி செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன், தி.மு.க. மாணவரணி தலைவர் ராஜீவ்காந்தி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஐட்ரீம்ஸ் மூர்த்தி, ஆர்.டி.சேகர், எபினேசர் மற்றும் பல்வேறு மாணவர் அமைப்பினர் கலந்து கொண்டனர்.

இதற்கிடையே, அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூகவலை தளப் பதிவில், இந்திய ஒன்றிய மாணவர்களின் உரிமைகளை காக்க, தி.மு.க. இடதுசாரி சிறுபான்மையினர் இயக்கங்கள் உள்ளிட்டவற்றின் மாணவர் அமைப்புகளை ஒன்றிணைத்து "யுனைடெட் ஸ்டுடென்ட்ஸ் ஆஃப் இந்தியா" எனும் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

இந்தக் கூட்டமைப்பு சார்பில், தேசியக் கல்விக் கொள்கை மற்றும் நீட் தேர்வுக்கு எதிராகவும், பாசிச பா.ஜ.க.வை மக்களை வைத் தேர்தலில் வீழ்த்தவும், பல்லாயிரக் கணக்கான மாணவர்கள் கலந்து கொண்ட "சென்னைப் பேரணி"யை, தி.மு.க. தொடங்கப்பட்ட ராயபுரத்தில் இந்திய மூவர்ணக் கொடியை அசைத்து இன்று தொடங்கி வைத்திருப்பதாக உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய கல்விக் கொள்கை நீட் இட ஒதுக்கீடு பறிப்பு இந்தி மொழித் திணிப்பு போன்ற பா.ஜ.க.வின் பாசிச அடக்கு முறைகளை முறியடிப்போம். INDIA கூட்டணியை வெல்லச் செய்வோம் என்றும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

## சிங்கம்புணரியில் இலவச சைக்கிள் வழங்கல்!

சிவகங்கை. பிப். 3 -


சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரியில் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி அரசு ஆண்கள் உயர்நிலைப் பள்ளியில் உள்ள 395 மாணவ - மாணவிகளுக்கு முதல்வரின் இலவச மிதிவண்டி வழங்கும் நிகழ்ச்சி பேரூராட்சி மன்றத் தலைவர் அம்பலமுத்து தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் முதல்வரின் விலையில்லா இலவச 395 மிதிவண்டிகளை மாணவ - மாணவிகளுக்கு பேரூராட்சி மன்றத் தலைவர் அம்பலமுத்து, துணைத்தலை வர் இந்தியன் செந்தில், ஒன்றிய கழகச் செயலாளர் பூமணி, ஆகியோர் வழங்கி சிறப்புரையாற்றினார்கள்.

### தமிழினத் தலைவர்

# கலைஞர் நூற்றாண்டு சிறப்பிதழ் (9)

### இன்று (பிப்ரவரி 3) வெளிவருகிறது!



**தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினையொட்டி, 2023 ஜீன் 3 முதல், ஒவ்வொரு மாதமும் 3 ஆம் தேதியன்று "முரசொலி சிறப்பிதழ்" வெளிவரும் என்று ஏற்கனவே அறிவிக்கப் பட்டுள்ளது.**

**அந்த அறிவிப்பிற்கு ஏற்ப, இன்று (பிப்ரவரி 3 - சனிக்கிழமை) முரசொலி சிறப்பிதழ், "முத்தமிழறிஞர் கலைஞருடன் உடன்பிறப்புகளின் நெகிழ்ச்சிமிகு சந்திப்பு" என்ற தலைப்பில், முரசொலியின் இணைப்பாக வெளிவருகிறது.**

### தமிழ்நாடு சட்டமன்றம் பிப்.12-ல் ஆளுநர் உரையுடன் தொடங்குகிறது!

# பிப்.19-ல் நிதிநிலை அறிக்கை தாக்கல்!

## சட்டப்பேரவைச் செயலாளர் அறிவிப்பு!

சென்னை, பிப். 3-

சட்டப்பேரவை செயலாளர் முனைவர் கி.சீனிவாசன் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் கூட்டம் 12.2.2024ஆம் நாள், திங்கட்கிழமை, காலை 10.00 மணிக்கு, சென்னை - 600 009, தலைமைச் செயலகத்தில் உள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் கூடும். அவ்வமயம் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் உரை நிகழ்த்த உள்ளார்.

2024-2025-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை, 2024-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 19-ஆம் நாள், திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு பேரவைக்கு அளிக்கப்படும்.

மேலும், 2024-2025-ஆம் ஆண்டிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள், 2024-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள், 20-ஆம் நாள், செவ்வாய்க்கிழமை அன்றும், 2023-2024-ஆம் ஆண்டின் கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகள் (இறுதி), 2024-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள், 21-ஆம்நாள், புதன் கிழமை அன்றும் பேரவைக்கு அளிக்கப்பெறும்.

இவ்வாறு அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

### ஒன்றிய அரசின் இடைக்கால பட்ஜெட்:

# ஏழை - எளியோருக்கு எந்தச் சலுகையுமில்லை!

## மக்கள் மிகுந்த ஏமாற்றம்!

புதுடெல்லி, பிப். 3 -

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் தாக்கல் செய்யப்பட்ட ஒன்றிய பா.ஜ.க. அரசின் இடைக்கால பட்ஜெட்டில், பாமர மக்கள் நலனுக்கான எந்த புதிய திட்டமோ, முக்கிய அறிவிப்புகளோ இடம்பெறவில்லை. இதேபோல், மாத சம்பளதாரர்கள் பெரிதும் எதிர்பார்த்த வருமான வரி விலக்கு உச்சவரம்பிலும் எந்த மாற்றத்தையும் ஒன்றிய அரசு அறிவிக்கவில்லை


நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் தொடங்கிய நிலையில், இடைக்கால பட்ஜெட் நேற்று முன்தினம் தாக்கல் செய்யப்பட்டது. ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், தற்போதைய பா.ஜ.க. அரசின் கடைசி பட்ஜெட்டை தாக்கல் செய்தார்.

விளையாட்டுத்துறையில் இந்தியா பதக்கங்களை குவித்து வருகிறது என்று கூறிய நிர்மலா சீதாராமன், செஸ் விளையாட்டில் சாதனை படைத்த தமிழ்நாட்டு வீரர் பிரக்ஞானந்தாவுக்கு பாராட்டு தெரிவித்தார். புதிய இந்தியாவை உருவாக்கும் பணி 2047ஆம் ஆண்டு நிறைவடையும் என்றும், அப்போது பல்வேறு துறைகளிலும் இந்தியா புதிய வளர்ச்சி அடைந்திருக்கும் என்றும் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

அடுத்த 5 ஆண்டுகளில் கிராமங்களில் 2 கோடி வீடுகள் கட்டித்தரப்படும், 5 ஒருங்கிணைந்த மீன்வள பூங்காக்கள் அமைக்கப்படும் என்றும் அறிவித்தார். இதேபோல் பால் உற்பத்தியை அதிகரிக்க புதிய திட்டம் செயல்படுத்தப்படும், கர்ப்பப்பை புற்றுநோயை தடுக்க தடுப்பூசி திட்டம் செயல்படுத்தப்படும் என்றும், பெருநகரங்களில் மெட்ரோ ரயில் சேவையை விரிவுபடுத்த முன்னுரிமை அளிக்கப்படும் என்றும், 40,000 ரயில் பெட்டிகள் வந்தே பாரத் ரயில் பெட்டிகளாக மாற்றப்படும் என்றும் நிர்மலா சீதாராமன் கூறினார்.

நடுத்தர மக்கள் பெரிதும் எதிர்பார்த்த வருமான வரி விலக்கு உச்சவரம்பில் எந்த மாற்றமும் அறிவிக்கப்படவில்லை.

தற்போது நடைமுறையில் இருக்கும் வரி விகிதமே தொடரும் என்று நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார். இதேபோல், இறக்குமதி வரி உள்ளிட்ட நேரடி மற்றும் மறைமுக வரி விகிதங்களிலும் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை எனவும் அவர் கூறினார்.



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தமிழிசை மூவர் மணிமண்டபத்தை தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆய்வு செய்தார். உடன் மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதி, மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஜி.என். ரவி. சீர்காழி நகரக் கழச் செயலாளர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ் மற்றும் ஒன்றிய கழக செயலாளர்கள் உள்ளிட்டோர் உள்ளனர்.

# ஈரோடு தெற்கு மாவட்டத்தில் - பேரறிஞர் அண்ணா 55வது நினைவு நாள் நிகழ்ச்சிகள்!

## மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் சு.முத்துசாமி அறிக்கை!

ஈ.ரோடு, பிப். 3-

ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சு.முத்துசாமி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

பேரறிஞர் அண்ணா அவர்களின் 55வது நினைவு நாளை முன்னிட்டு இன்று (3.2.2024 - சனிக்கிழமை) ஈரோடு தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஈரோடு மாநகரம் மற்றும் ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு கிளைக் கழகங்களில் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவ சிலை மற்றும் படத்திற்கு மாலை அணி வித்து மரியாதை செலுத்தும் நிகழ்ச்சிகள் கீழ்க்கண்டவாறு நடைபெறும்

ஈரோடு மாநகரம் காலை 9 மணிக்கு மாவட்ட அவைத்தலைவர் குமார் கே.முருகேஸ் தலைமையில் பன்னீர் செல்வம் பூங்கா அண்ணா சிலைக்கும்

சூரியம்பாளையம் பகுதியில் காலை 8 மணிக்கு பகுதி கழக செயலாளர் எஸ்.குமாரவடிவேல் தலைமையில் சூரியம்பாளையத்திலும்

வீரப்பன் சத்திரம் பகுதியில் காலை 8 மணிக்கு பகுதி கழக செயலாளர் வி.சி.நடராஜன் தலைமையில் வீரப்பன் சத்திரத்திலும்

பெரியசேமூர் பகுதியில் காலை 8 மணிக்கு பகுதி கழக செயலாளர் வி.செல்வராஜ் தலைமையில் பெரிய சேமூரிலும்

சூரம்பட்டி பகுதியில் காலை 8 மணிக்கு பகுதி கழக செயலாளர் வில்லரசம்பட்டி முருகேசன் தலைமையில் சூரம்பட்டியிலும்

பெரியார் நகர் பகுதியில் காலை 8 மணிக்கு பகுதி கழக செயலாளர் அக்னி டி.சந்திரசேகர் தலைமையில் பெரியார் நகரிலும்

கொல்லம்பாளையம் பகுதியில் காலை 8 மணிக்கு பகுதி கழக செயலாளர் கா.லட்சுமணகுமார் தலைமையில் கொல்லம்பாளையத்திலும்

கருங்கல் பாளையம் பகுதியில் காலை 8 மணிக்கு



பகுதி கழக செயலாளர் குறிஞ்சி என்.தண்டபாணி தலைமையில் கருங்கல் பாளையத்திலும் கொடுமுடி வடக்கு ஒன்றியத்தில் காலை 8 மணிக்கு ஒன்றிய கழக செயலாளர் மு.சின்னசாமி தலைமையில் கொடுமுடி புதிய பேருந்து நிலையத்திலும்

கொடுமுடி மேற்கு ஒன்றியத்தில் காலை 8 மணிக்கு ஒன்றிய கழக செயலாளர் பா.நடராஜன் தலைமையில் சிவகிரியிலும்

மொடக்குறிச்சி கிழக்கு ஒன்றியத்தில் காலை 8 மணிக்கு ஒன்றிய கழக செயலாளர் வி.கதிர்வேல் தலைமையில் மொடக்குறிச்சியிலும்

மொடக்குறிச்சி மேற்கு ஒன்றியத்தில் காலை 8 மணிக்கு ஒன்றிய கழக செயலாளர் சு.குணசேகரன் தலைமையில் அவல்பூந்துறையிலும்

மொடக்குறிச்சி தெற்கு ஒன்றியத்தில் காலை 8 மணிக்கு ஒன்றிய கழக செயலாளர் ஆர்.விஜயகுமார் தலைமையில் அரச்சலூரிலும்

சென்னிமலை ஒன்றியத்தில் காலை 8 மணிக்கு ஒன்றிய கழக செயலாளர் பி.செங்கோட்டையன் தலைமையில் வெள்ளோட்டிலும்

ஈரோடு ஒன்றியத்தில் காலை 8 மணிக்கு ஒன்றிய கழக செயலாளர் தோப்பு சதாசிவம் தலைமையில் நசியனூரிலும்

பெருந்துறை தெற்கு ஒன்றியத்தில் காலை 8 மணிக்கு ஒன்றிய கழக செயலாளர் கே.பி.சாமி தலைமையில் பெருந்துறையிலும்

பெருந்துறை கிழக்கு ஒன்றியத்தில் காலை 8 மணிக்கு ஒன்றிய கழக செயலாளர் சி.பெரியசாமி தலைமையில் காஞ்சிகோயிலிலும்

பெருந்துறை வடக்கு ஒன்றியத்தில் காலை 8 மணிக்கு ஒன்றிய கழக செயலாளர் பி.சின்னசாமி தலைமையில் திங்களூரிலும்

ஊத்துக்குளி தெற்கு ஒன்றியத்தில் காலை 8 மணிக்கு ஒன்றிய கழக செயலாளர் பி.பி.ஈஸ்வரமூர்த்தி தலைமையில் ஊத்துக்குளியிலும்

ஊத்துக்குளி வடக்கு ஒன்றியத்தில் காலை 8 மணிக்கு ஒன்றிய கழக செயலாளர் எஸ்.சுப்பிரமணியம் தலைமையில் குன்னத்தூரிலும்

ஊத்துக்குளி மத்திய ஒன்றியத்தில் காலை 8 மணிக்கு ஒன்றிய கழக செயலாளர் பி.ராஜா தலைமையில் நடுப்பட்டியிலும் நடைபெற உள்ளது.

அந்தந்தப் பகுதிகளில் உள்ள மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு, ஊர் கிளைக் கழக நிர்வாகிகள் மற்றும் துணை அமைப்புகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் இந்நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பெரம்பலூர் மாவட்டம் வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் ரூ.25.84 கோடி மதிப்பிலான பல்வேறு புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற பணிகளை தொடங்கி வைத்தார். முன்னதாக போக்குவரத்துத்துறை அமைச்சர் தனது சொந்த செலவில் குன்னம் அரசு மேல்நிலைப் பள்ளியில் 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவ – மாணவிகளுக்கு தேர்வை வெல்வோம் என்ற தலைப்பில் உருவாக்கப்பட்டுள்ள அனைத்து பாடப்பிரிவுகளுக்குமான மிக முக்கிய வினா – விடைகள் அடங்கிய புத்தகங்களை வழங்கினார்.

# உடன்பிறப்பே... 43

**தி.மு.க. என்பது எதிரிகளால் அழிக்கமுடியாத இரும்புக்கோட்டை. இந்தக் கோட்டையைக் கட்டியெழுப்பி, இயக்க வரலாற்றில் இடம்பிடித்த தீரர்கள் சிலரை, வாரா வாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், இந்த வாரம், பெரியார்-அண்ணா-கலைஞருடன் பயணித்து கழகம் வளர்த்த திருவாரூர் கு.தென்னன் அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.**

## திருவாரூர் கு.தென்னன்

# நண்பர் என்ற தகுதியில் முதலில் நின்றவர்!


ஓவியம் : ரவி பேலட்

2012-ஆம் ஆண்டு, ஒரு நூல் வெளிவந்தது. அந்த நூலின் தலைப்பு **‘கலைஞரின் காதலர் திருவாரூர் கு.தென்னன்’**. திருவாரூர் துரைச்செல்வம் எழுதியிருந்த, அந்த நூலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்கி இருந்தார் முத்தமிழறிஞர் கலைஞர்.

அதில், “எனக்கு எத்தனையோ நண்பர்கள் உண்டென்ற போதிலும், ‘நண்பன்’ என்ற தகுதியில் முதலில் வைத்துக் கருதப்படுபவர் எனது அருமை நண்பன் தென்னன்” எனக் குறிப்பிடுகிறார்.

கலைஞரின் நண்பர் எனில், கழகத்தினருக்கு அன்பர். கலைஞரின் பொதுவாழ்க்கை தொடங்கிய காலத்தில் இருந்தே, அவருடன் பயணிக்கத் தொடங்கிய உடன்பிறவா உடன்பிறப்புதான் திருவாரூர் கு.தென்னன்.

### விளையாட்டுத் தோழமை

கலைஞர் தனது 11-வது வயதில் தென்னனைச் சந்திக்கிறார். திருக்குவளையில் பிறந்த கலைஞர், தனது கல்விக்காக, திருவாரூர் வந்து தங்குகிறார். தென்னனின் தந்தை குப்புசாமி அவர்கள் ராசிபுரத்தில் பிறந்து, திருவாரூரில் அடைக்கலமானவர்.

திருவாரூர் கீழவீதி மானந்தியார் தெருவில் விளையாட்டுத் தோழமையாக இருவரும் அறிமுகமாக, கொள்கைத் தோழமையாக உறுதிகொண்டார்கள். கலைஞர் பிறப்பதற்கு ஓர் ஆண்டுக்கு முன்பு, 1923-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4- ஆம் தேதி பிறந்தவர் தென்னன்.

மூத்தவர் என்றாலும், வயது வித்தியாசம் பார்க்காத பால்ய நண்பர்கள். இருவரது நட்புக்கும் பல கதைகள் ஆதாரமாக உள்ளன என்றாலும், கழக உறவே அவர்களை காலத்தின் அடையாளமாக மாற்றுகிறது.

### கழகத் தோழமை

தென்னன் அவர்களின் இயற்பெயர் தெட்சணாமூர்த்தி. பகுத்தறிவு, சுயமரியாதை இயக்கத்தினர் தமிழ்ப் பெயர்களைச் சூட்டிக்கொண்ட காலத்தில், தனது நண்பர் தெட்சணாமூர்த்தியின் பெயரை ‘தென்னன்’ என மாற்றி வைத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். தென்னனும், நண்பர் என கலைஞருடன் நெருக்கம் கொண்டிருந்தாலும், கழக உடன்பிறப்பாக கலைஞரைத் தலைவராகவே வரித்துக் கொண்டவர்.

தென்னன் அவர்களின் நட்பு, கழகப் பணியாகக் கலந்திருப்பதை கலைஞர் பலமுறை எழுதி இருக்கிறார். கடந்த ஆண்டு தென்னன் அவர்களின் நூற்றாண்டு நினைவில் கழகத் தலைவர், நமது முதலமைச்சர் அவர்கள் நினைவுகூர்ந்தார்.

“முத்தமிழறிஞர் கலைஞரின் மூத்த பிள்ளை எனப்படும் ‘முரசொலி’ தொடங்கப்பட்டபோது அதன் நிதிப் பொறுப்பைக் கவனிக்கக் கூடியவராகவும், அச்சிடப்பட்ட இதழ்களை மக்களிடம் கொண்டு சேர்க்கும் பணியை கலைஞருடன் இணைந்து மேற்கொள்ளக் கூடியவராகவும் இருந்தவர் தென்னன் அவர்கள்.

1957-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் குளித்தலைத் தொகுதியில் முத்தமிழறிஞர் கலைஞர் முதன்முதலாகப் போட்டியிட்டபோது அவரது வெற்றிக்கு அல்லும் பகலும் பாடுபட்டவர்களில் ஒருவர். தலைவர் கலைஞர் அவர்களின் ஒவ்வொரு வெற்றியிலும் துணை நின்று அகம் மகிழ்ந்த நண்பர். கழகம் சந்தித்த நெருக்கடிகளின் போதெல்லாம் தலைவர் கலைஞருக்கு நிழலாகத் துணை நின்ற தோழர். பலன் கருதா நட்புக்குரியவர் தென்னன்” எனப் போற்றிப் புகழ்ந்தார்.

அந்தப் போற்றுதலுக்கு முழு உரிமையுடையவர் தென்னன். கழகத்தில் அவரது உழைப்பும், தலைவரோடு நெருக்கமாக இருந்தாலும், அதைத் தனது நலனுக்காகப் பயன்படுத்த முனையாத பண்பும் தென்னனிடம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள். கலைஞரின் பெயருக்குக் கடுகளவும் சேதம் வரக்கூடாது என கங்கணம் கட்டிக் கொண்டவர் தென்னன்.

### கட்சிப் பணிகள்

திருவாரூர் கழகத்தில் நகரச் செயலாளராகவும் கழகத்தினரின் அன்பைப் பெற்றிருந்தார் கலைஞரின் நண்பர். 1972 ஆம் ஆண்டுகளில் கழகம் பிளவைச் சந்தித்தபோது, கீழத் தஞ்சைப் பகுதியில் கழகத்துக்கு சேதம் வராமல் காத்து நின்றதில் தென்னனின் பங்கு அதிகம். திருவாரூர், நாகப்பட்டினம், வேதாரண்யம் எனச் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ‘அரைவேக்காடு’ என நாடகம் எழுதி அரங்கேற்றி, கொள்கைப் பிரச்சாரம் நிகழ்த்தியவர்.

> **அகவை முதிர்ந்த நிலையிலும், கழகத்தினரை அரவணைத்துப் போற்றி, இளையவர்களுடன் இணக்கமாக கட்சிப் பணியாற்றிய பண்பாளர் தென்னன்.**

கூட்டுறவுத் துறை பணிகளில் அதிக ஆர்வம் கொண்டவர் தென்னன். திருவாரூர் பால் வழங்கும் சங்கம், கமலாம்பிகா வங்கித் தலைவர் எனப் பொறுப்புகளை ஏற்றுத் திறம்பட நிர்வகித்தார். அதன்மூலம் அந்தப் பகுதி விவசாயிகளின் முன்னேற்றத்துக்குக் காரணமாக இருந்திருக்கிறார். கூட்டுறவுத் துறை உழைப்புக்காக ஒன்றிய அரசு வழங்கிய விருதினைப் பெற்று வந்தவர் தென்னன்.

### மெய்க்காவலர் தென்னன்

கல்லக்குடிப் போராட்டத்தில் கைதாகி இரண்டு மாதங்கள் கலைஞருடன் சிறையில் இருந்தவர் தென்னன். திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்த ஐந்தாயிரம் கழகத்தினரைக் கொண்டு திராவிட அரசாங்கத்தை நிறுவி இருந்தார் கலைஞர். அங்கு பிரதம மந்திரியாக இருந்த கலைஞரின் மெய்க்காவலராக இருந்தவர், அவரது உற்ற நண்பரான தென்னன்தான்.

மிசா நெருக்கடியின்போது ஓராண்டு சிறை வாழ்க்கையையும் அனுபவித்தவர் தென்னன். கலைஞரின் பால்ய நண்பர் என்பதால், கலைஞர் தனது சொத்துகளைத் தென்னனிடம் கொடுத்து வைத்திருப்பார் எனக் காவல்துறை அலசி எடுத்தார்களாம். ஆனால், எவ்வளவு துழாவியும் தென்னன் வீட்டில் கருப்புச் சிவப்புக் கரை வேட்டியும், கலைஞர் எழுதிய புத்தகங்களையும் தவிர, வேறு கண்டுபிடிக்க ஒன்றுமில்லை. கலைஞரும் அப்படி எதுவும் கொடுத்திருக்கவில்லை. இதே விசாரணையைச் சிறையிலும் எதிர்கொண்டு மீண்டு வந்தவர் தென்னன். இரும்பு மனிதரின் நண்பரல்லவா. அந்தக் கொள்கை உறுதிக்குச் சொல்லவா வேண்டும்?

### இனிப்பான சம்பவங்கள்

எம்.எல்.சி. பதவிக்கான வேட்பாளர்கள் தேர்வின்போது, தென்னனையும் விண்ணப்பம் செய்யச் சொல்லி இருக்கிறார் கலைஞர். வேண்டாம் என மறுத்தாலும், கலைஞர் வலியுறுத்தியதால், கடிதம் அளித்திருக்கிறார் தென்னன். அப்போது கழகத்தினரும், உறவினர்களும் அவர் எம்.எல்.சி. ஆகிவிட்ட உணர்வில் இருந்துள்ளனர். ஆனால், தென்னன் கலைஞரின் நுட்பம் அறிந்தவராயிற்றே... அமைதியாக இருந்திருக்கிறார். அவர் நினைத்ததுபோலவே தென்னன் பெயர் எம்.எல்.சி. பட்டியலில் இல்லை.

அது தொடர்பான அறிவிப்பின்போது, “எம்.எல்.சி. பதவி கேட்டு பலரும் கடிதம் கொடுத்திருக்கிறார்கள். என் நண்பன் தென்னன்கூட கடிதம் அளித்தார். நான் தென்னனுக்குக்கூடப் பரிந்துரை செய்யவில்லை. ஆகையால், நான் சொல்லி எதுவும் நடக்காது என்பதை உணர்ந்து, கழகத்தின் பொதுக்குழு முடிவினை, அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்” என கலைஞர் அறிவிக்கிறார்.

அதேநேரத்தில், தென்னனே எதிர்பார்க்காத வகையில், அவரது 84-வது வயதில் திருவாரூர் நகர்மன்றத் தலைவராக்கி நட்பைப் போற்றினார் முத்தமிழறிஞர் கலைஞர். தமிழ்நாட்டிலேயே முதிய வயதில் நகர்மன்றப் பொறுப்புக்குத் தேர்வானவர் தென்னன் அவர்கள்தான். அந்தப் பொறுப்பில் இருந்தபோது, கலைஞர் திருவாரூர் தொகுதியில் போட்டியிட வேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றினார் தென்னன். இப்படிக் கொள்கை உறவுடன் பல அனுபவங்களைக் கொண்டுள்ளது அவர்களது தோழமை.

### வாழ்க! வணக்கம்!

இருவரும் ‘வாழ்க, வணக்கம்’ போல இணைபிரியாத முழக்கம் போன்றவர்கள் என சிறுவயதிலேயே பெயர் எடுத்தவர்களாம். ‘வணக்கம்’ என்றால் கலைஞர், ‘வாழ்க’ என்றால் தென்னன். ‘வாழ்க வருகிறாரே, எங்கே வணக்கத்தைக் காணவில்லை’ எனக் கேட்பார்களாம்.

இப்படி நாளொரு மேனி, பொழுதொரு பிரச்சினையுமாக திருவாரூர் நகர வீதிகளில் வலம் வந்த நண்பர்கள், இருவரில் ஒருவர் மாபெரும் மக்கள் இயக்கத்தின் தலைவரானார். அந்தப் புகழில் மயங்காமலும் மங்காமலும் காத்தார் மற்றொரு நண்பர்.

அகவை முதிர்ந்த நிலையிலும், கழகத்தினரை அரவணைத்துப் போற்றி, இளையவர்களுடன் இணக்கமாக கட்சிப் பணியாற்றிய பண்பாளர் தென்னன், உடல்நலிவுற்று 2011 டிசம்பர் 15 அன்று மறைவெய்தினார். “என் நிரந்தர நண்பனை இழந்தேனே” எனக் கண்ணீர் உகுத்தார் கலைஞர்.

அந்தப் பண்பாளர் தென்னனின் நூற்றாண்டு கடந்த ஆண்டு போற்றப்பட்டது. அப்போது கழகத்தின் இன்றைய தலைவர் காலத்தால் அழியாத அந்த நட்பை, கொள்கை உறவைப் போற்றினார்.

“கொள்கை உறுதிமிக்க அவரது கழகப் பணிகளை இன்றைய தலைமுறையின் உடன்பிறப்புகள் அறிந்து பின்பற்றுவதே, தென்னன் அவர்களின் நூற்றாண்டுக்கு நாம் செய்யும் சிறப்பு. நட்பென்ற சொல்லுக்குரியவராக வரலாற்றில் என்றும் வாழ்வார் திருவாரூர் கு.தென்னன்” என்றார். தென்னனிடமிருந்து கற்பதே கலைஞருக்கு நாம் செய்யும் மரியாதை.

**...துடிக்கும்**

## வெறுப்புப் பேச்சின் விபரீதங்கள்!

பா.ஜ.க. விதைக்கும் மதவெறியினால் ஏற்படப்போகும் ஆபத்துகள், எத்தனை விபரீதமானது என்பதற்கு டெல்லியில் நடந்திருக்கிற ஒரு சம்பவம் உதாரணமாகி இருக்கிறது. காங்கிரஸ் மூத்த தலைவரான மணிசங்கர் அய்யரின் மகள் சுரண்யா, டெல்லி ஜாங்புரா பகுதியில் குடும்பத்துடன் வசித்து வருகிறார். அயோத்தி ராமர் கோவில் திறப்பு விழாவுக்கு இரு நாட்களுக்கு முன்பு, தனது சமூக வலைத்தளப் பக்கத்தில் அவர் ஒரு பதிவிட்டிருந்தார்.

“ராமர் கோவில் திறப்பு விழாவை எதிர்க்கும் வகையிலும், சிறுபான்மையினருக்கு ஆதரவாகவும் நான் உண்ணாவிரதம் இருக்கப் போகிறேன்” என்று சுரண்யா அந்தப் பதிவில் கூறியிருந்தார். வலதுசாரிகள் அதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்து அவரை நெருக்கடிக்கு உள்ளாக்கினர்.

அதன் உச்சகட்டமாக டெல்லி ஜாங்புரா குடியிருப்போர் நலச்சங்கம், மணிசங்கர் அய்யர் மற்றும் அவரது மகள் சுரண்யாவுக்கு நோட்டீஸ் ஒன்றை அனுப்பியுள்ளது. ‘ராமர் கோவில் குறித்த கருத்துக்காக மன்னிப்புக் கேளுங்கள், இல்லாவிட்டால், வீட்டை விட்டு வெளியேறுங்கள். வெறுப்புப் பேச்சை சகித்துக் கொள்ளும் மக்கள் இருக்கும் பகுதிக்குச் செல்லுங்கள்’ என்று பகிரங்கமாக மிரட்டியிருக்கிறார்கள்.

எத்தகைய ஆபத்தை நோக்கி, பா.ஜ.க. நாட்டை இழுத்துச் செல்லும் என்று சிந்திக்க வேண்டியிருக்கிறது. சரி, சுரண்யா மட்டுமா ராமர் கோயில் திறப்பைக் கண்டித்தார்? பா.ஜ.க.வின் அரசியல் லாபத்துக்காக, ராமர் கோவிலைக் கட்டி முடிக்கும் முன்பே திறக்கிறார்கள், என்று 4 சங்கராச்சாரிகள் கண்டித்தார்களே? சுரண்யாவின் மீது வெறுப்பைக் கக்கும் மதவாதிகள் எவரும் சங்கராச்சாரிகளைச் சீண்டிக்கூடப் பார்க்கவில்லையே..? ஏன்..?

## :ப்ளாஷ்பேக்




சேதுராமன்

### ஊக்கப்படுத்தும் மோதிரம்!

1994 ஆம் ஆண்டு மதுரை தமுக்கம் மைதானத்தில், கழக நிதி அளிப்புப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அன்றைய மதுரை புறநகர் மாவட்டச் செயலாளர் அக்கினிராசு அவர்கள் தலைமையில், நடைபெற்ற கூட்டத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் பங்கேற்றார். அதிக நிதி வசூலித்துக் கொடுத்தவர்களை ஊக்கப்படுத்தும் வகையில், சால்வையும் மோதிரமும் அணிவித்து, எங்களைப் பாராட்டினார். தலைவரிடம் பெற்ற பாராட்டு, என் வாழ்நாளில் நடைபெற்ற மிகச் சிறந்த நிகழ்வு என்பேன்.

**-எஸ்.சேதுராமன்,**
**மாநில துணைச் செயலாளர், விவசாயத் தொழிலாளர் அணி,**
**மதுரை.**


இது போன்ற அரிய புகைப் படங்களை சிறு குறிப்புடன் எங்க ளுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### தனிமைச் சிறை!

**1965 ஆம் ஆண்டு பிப்ரவரி 16 ஆம் நாள் ‘முரசொலி’ அலுவலகத்தில் எழுத்துப் பணிகளை முடித்துவிட்டு, வீடு திரும்பிய கலைஞர் நள்ளிரவில் கைது செய்யப்பட்டார். இந்திய பாதுகாப்புச் சட்டத்தில் நாட்டிலேயே முதன்முதலாக கைது செய்யப்பட்டிருந்த கலைஞர், 2 நாட்கள் அலைக் கழிக்கப்பட்டு பாளையங்கோட்டை, தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டார். அப்போது அவரைச் சந்திக்கச் சென்ற அண்ணாவிடம், குடும்பத்தினரைப் பற்றிக் கேட்காமல், தருமபுரி தேர்தல் நிலவரம் எப்படி இருக்கிறது, என்று கட்சி குறித்துத்தான் கேட்டார். கலைஞரின் கழகப் பற்றை உச்சிமுகர்ந்து பாராட்டினார் அண்ணா.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 377




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 173 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – தை 20 – சனிக்கிழமை 03 பிப்ரவரி 2024 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 173: Thiruvalluvar Year - 2055 - Thai 20 - Saturday 03 February 2024 - Chennai 12 Pages சிறப்பிதழ்!

தமிழினத் தலைவர்

## கலைஞர்

## நூற்றாண்டு சிறப்பிதழ் 9



# கழகத்தைப் பரப்பியதில் கலைஞரின் உழைப்பு முக்கியம்!

## தந்தை பெரியார்

நண்பர் திரு. கருணாநிதி அவர்களின் படத்தினைத் திறந்து வைப்பதில் எனக்கு பெரும் மகிழ்ச்சியே. சமீபத்தில் ஒரு பள்ளிக் கட்டிட திறப்பு விழாவிற்காக சென்றிருந்தேன். அந்த விழாவிற்கு அமைச்சர் கோவிந்தசாமி அவர்களும் வந்திருந்தார்கள். அந்தப் பள்ளியின் நிர்வாகிகள் நான் பேசிக் கொண்டிக்கும்போது இடையில் வந்து இரகசியமாக என் காதில் அண்ணாதுரை அவர்களின் படத்தினைத் திறந்து வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். நான், “இதில் என்ன இரகசியம் வேண்டி இருக்கிறது, அண்ணாதுரையின் படத்தினைத் திறந்து வைப்பது எனக்கு பெருமைதான்” என்று கூறி அண்ணா படத்தைத் திறந்து வைத்தேன்.



ஒருவருடைய படத்தினைத் திறப்பதென்றால் அவரைப் பற்றி அவரது தொண்டுகளைப் பற்றி சிலவற்றைச் சொல்லவேண்டியது அவசியமும் சம்பிரதாயமும்ஆகும். **நண்பர்கருணாநிதி அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் உள்ள அறிவாளிகள் முன் வரிசையில் உள்ள அறிவாளி ஆவார். தி.மு.கழகம் இந்த அளவு பரவுவதற்கு அவரது முயற்சியும் அறிவும்தான் காரணமாகும். அண்ணாதுரை கழகத்தில் தலைவராக இருந்தார். அவரும் கழகத்தைப் பரப்பினார் என்றாலும் கருணாநிதியின் உழைப்பும் முக்கியம்.** இல்லா விட்டால் கழகத்தின் செல்வாக்கு இந்த அளவு வளர்ந்து இருக்காது. இதைச் சொல்வதால் அண்ணாதுரையை நான் குறைத்துச் சொல்வதாகாது. அண்ணாதுரைக்கு பல வேலை, அவர் ஒருவராலேயே கழகத்தை இந்த அளவு பரப்பி இருக்க முடியாது. கருணாநிதி அவர்கள் அண்ணாதுரைக்கு வலது கரமாக இருந்து உதவி வந்திருக்கிறார்.

நண்பர் இளம் வழுதி அவர்கள் சொல்வது போல; **பள்ளிக் கூடத்தை விட்டதும் என்னிடம் நண்பர் கருணாநிதி நேராக வந்தார். “எனக்கு பொதுத்தொண்டு செய்ய ஆவலாக இருக்கிறது” என்று கூறினார். நானும் “என்னிடம் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். நீங்களும் இருங்கள்” என்று சொன்னேன். எனது வீட்டிலேயே இருந்தார். குடிஅரசு ஆபிசுக்குப் போய் வந்து கொண்டிருந்தார். பிறகு எழுதவும் மேடையில் பேசவும் ஆரம்பித்தார். நல்ல கருத்தாளர் ஆவார், எழுச்சியுள்ளவராவார். வரவர நல்ல கருத்து பிடிபட்டது, பிரச்சாரக் கலையும் பிடிபட்டது.**

அண்ணாதுரையாவது, கருணாநிதியாவது; என்னைக் குறிப்பிட்டு, என் காரியத்தைக் குறிப்பிட்டு இதுவரை ஒரு சிறு குறை கூட கூறியது கிடையாது. இன்று வரைக்கும் அண்ணாதுரை ‘என் தலைவர் பெரியார்தான்’ என்று கூறுகிறார். அதே போல் கருணாநிதியும் என்னை எங்கு கண்டாலும், செல்லப்பிள்ளை மாதிரி நெருங்கி, பின் உரிமையோடு உரையாடுவார். இன்னமும் தி.மு.க.வுக்கு கருணாநிதியின் தொண்டு பயன்படத்தக்கதாகும். அவரது தொண்டும் முயற்சியும் பிறர் கடைபிடிக்க வேண்டியதாகும். அவரது படத்தைத் திறந்து வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

**(திட்டக்குடி - 12.6.1967)**

# பேரறிஞர் அண்ணாவுடன் கலைஞரின் சந்திப்பு!



**(திருவாரூரில் நடந்த மிலாது நபி விழாவில் பங்கேற்றிட பேரறிஞர் அண்ணா அவர்கள் வருகை தந்திருந்தார்.**

**இச்சந்திப்பு குறித்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் எழுத்தில் காண்போம்!)**

“தம்பி, தெரியுமா செய்தி? அண்ணா திருவாரூருக்கு வரப்போகிறார், நபிகள் நாயகம் விழாவில் கலந்துகொள்ள...” என்றார் டி.என்.ராமன். இயக்கத்தைக் கட்டி வளர்த்தவர்களில் தலைசிறந்தவர் இவர்.

இந்தச் செய்தி என் செவிகளில் தேனாகப் பாய்ந்தது. ‘அண்ணா வரப்போகிறார். எனது இதயங் கவர்ந்த இலட்சியத் தலைவர் வரப்போகிறார்’ என்று என் உள்ளம் மகிழ்ச்சிப் பெருக்கால் துள்ளியது. அப்போது நான் ஒன்பதாம் வகுப்பில் படித்துக் கொண்டு இருந்தேன். 1938ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டம் தமிழகத்தில் தீவிரமாக நடந்தபோதே, நான் என்னையொத்த சிறுவர்களுக்குத் தலைமை தாங்கி இந்தி எதிர்ப்பு முழக்கங்களுடன் ஊர்வலம் நடத்தியவன். மேலும் ‘முரசொலி’ என்னும் துண்டுத்தாளை அவ்வப்போது வெளியிட்டு என் எண்ணங்களை எழுத்துக்களாக்கி, என் பணியைத் தொடங்கியவன்.

1940ஆம் ஆண்டில் திருவாரூரில் நடைபெற்ற நீதிக் கட்சி மாநாட்டில்கூட அண்ணாவை அருகில் இருந்து காணும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. இப்போது, இயக்கத் தலைவர்களுடன் தொடர்பு நெருக்கமாகி இருந்ததால், அண்ணாவைக் கண்டு மகிழலாம் எனப் பேராவல் கொண்டு இருந்தேன்.

‘விடுதலை’ ஏட்டில் அண்ணாவின் எழுத்துக்கள் என் உள்ளத்தைக் கொள்ளைகொண்டு இருந்தன. பின்னர், அவர் காஞ்சியில் இருந்து ‘திராவிட நாடு’ இதழைத் தொடங்கியதும் ‘இளமைப் பலி’ என்ற தலைப்புடன் ‘திராவிட நாடு’ இதழுக்கு ஒரு கட்டுரை தீட்டிஅனுப்பினேன். அதுவும்விரைவில்அண்ணா அவர்களால் வெளியிடப்பட்டது.

அண்ணாவின் இதழில் என் எழுத்துக்கள் இடம் பெற்றதும் என் உற்சாகம் கரை புரண்டது. என் எழுத்துக்களை அண்ணா அங்கீகரித்து விட்டார் அல்லவா?இந்தச் சமயத்தில்தான் அண்ணா திருவாரூர் வரும் செய்தி தித்திப்பாக எனக்குத் தரப்பட்டது. என் இயல்பிற்கேற்றவாறு கூட்டத்துக்கான முன்னேற்பாடுகளில் நானும் முனைந்தேன். விளம்பரத்தாள்கள் விநியோகித்தல், சுவரொட்டி ஒட்டுதல், கொடி தயாரித்தல், மேடை அமைத்தல் போன்ற சிறு சிறு ஆக்க வேலைகளில் ஈடுபட்டேன்.

## முத்தமிழறிஞர் கலைஞர்

**“கருணாநிதி! உன்னை அண்ணா அழைத்து வரச் சொன்னார்” என்று வந்தார் ஒருவர்.**

**“அண்ணாவா?”**

**“ஆமாம், ஆமாம். ‘திருவாரூரில் கருணாநிதி என்பவர் யார்? அவரை நான் பார்க்க வேண்டும்” என்றார். “நமது இயக்கத்தில் நீ ஒரே ஒரு கருணாநிதிதானே!” என்றார்.**

கையைத் துடைத்துக்கொண்டு உடனே புறப்பட்டேன். என் உள்ளத்தில் அச்சம் ஒரு பக்கம், ஆனந்தம் ஒரு பக்கம், வியப்பு ஒரு பக்கம், திகைப்பு ஒரு பக்கம், மகிழ்ச்சி பாதி, பயம் பாதி. மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு புறப்பட்டேன்.

வக்கீல் வெங்கடாச்சாரியார் வீட்டின் மாடியில் அண்ணாவைத் தங்கவைத்து இருந்தார்கள். அண்ணாவைச் சூழ்ந்து திருவாரூரின் இயக்கப் பிரமுகர்களான திரு டி.என்.ராமன், டி.என்.லட்சப்பா, ரங்கராசு, சிங்கராயர் போன்றோர் அமர்ந்து இருந்தனர்.

**அண்ணாவுக்கு வணக்கம் தெரிவித்துவிட்டு, “அழைத்தீர்களாமே?” என்றேன். வார்த்தைகள் தெளிவாக வரவில்லை.**

**“நீதான் கருணாநிதியா?” வெண்கல மணி ஒலித்தது.**

**“ஆமாம், அண்ணா!”**

**“என்ன செய்கிறாய்? படிக்கிறாயா தம்பி!”**

**“ஆமாம்.”**

**“ ‘இளமைப் பலி’ எழுதியது நீதானே?”**

**“நான்தான் எழுதினேன்!”**

**“சரி, கட்டுரை நன்றாகத்தான் இருந்தது. ஆனால், உனக்கு இப்போது அந்த வேலை தேவை இல்லை. படிப்பை முடித்துப் பட்டம் பெற்ற பிறகு எழுதத் தொடங்கலாம். கவனமாகப் படி!” என்றார் அண்ணா.**

**என்ன பதில் சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை. எழுத்துப் பணியை நிறுத்தச் சொல்கிறாரே! என்னால் இயலுமா?**

**“வருகிறேன், அண்ணா!” என்று மட்டும் சொல்லி விட்டு அங்கிருந்து நகர்ந்தேன்” .**

## எல்லாம் ஒரே சாதிதான் !



சிலர் கேட்கலாம்; நாங்கள் அழைத்தால் வர மறுக்கிறாய் ? இஸ்லாமியர் அழைத்தால் செல்கிறாய்; கிறித்தவர்கள் அழைத்தால் செல்கிறாய்; என்று கேட்கலாம். நாங்கள் என்பது – நாங்கள் வேறு, நீங்கள் வேறு என்று எண்ணுகிற நேரத்தில்தான் – நாங்கள் என்ற சொல்லுக்குப் பொருள் உண்டு.

நாங்கள் என்பதிலே – நான் என்னை, தமிழன், திராவிடன் என்று சொல்லிக் கொண்டாலுங்கூட, அவர்கள் சொல்வதைப் போல, இந்து மதக்காரர், இந்து மதத்தைச் சேர்ந்தவர் – ஆனால் இந்து மதத்திலே இருப்பவர்கள் எங்களை அழைக்கின்ற நேரத்தில், எல்லோரும் சமம், வாருங்கள் என்றழைத்தால் அட்டியின்றி செல்வேன்; நீயும், நானும் ஒன்று ஆண்டவன் முன்பு என்றழைத்தால் தட்டாமல் செல்வேன். ஆண்டவன் படைப்பிலே மேல் சாதி, கீழ் சாதி என்று இல்லை; எல்லாம் ஒரே சாதிதான், மனிதசாதி தான் என்று சொல்லி அழைத்தால் கட்டாயம் செல்வேன்.

நான் இந்துக் கடவுள்களுடைய விழாக்களிலே கலந்து கொள்ள வேண்டும் அல்லது வேண்டாம் என்ற இந்தப் பிரச்சினையில் நான் என்றைக்கும் என்னைச் சிக்க வைத்துக் கொள்ள விரும்புவதில்லை.

**- கலைஞர்**

# நாள்தோறும் நெகிழ்வுதான்... வாழ்வெல்லாம் நினைவுதான்!

முதல்வர் மு.க.ஸ்டாலின்
தலைவர், தி.மு.க.



அரும்பெரும் தலைவர்கள் பலரும் வருகை தந்த கோபாலபுரம் இல்லத்தில் வளர்ந்த எனக்கு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுடனான நெகிழ்வான நினைவுகள் என்று எதைச் சொல்வது, எதை விடுவது? ஒரு தந்தையாக என்னை வளர்த்தெடுத்தவர். அதைவிட இயக்கத்தின் தலைவராக இருந்து என்னை வார்த்தெடுத்தவரும் அவரே.

சிறுவயதில், என் உடன்பிறந்தவர்களுடனும் உறவினர்களுடனும் கோபாலபுரம் இல்லத்தில் தாய்தந்தையின் முகம் கண்டு மகிழ்ந்திருந்த நான், இளமைப் பருவம் துளிர்விடும் போதே அரசியல் பொதுவாழ்வில் ஆர்வம் கொண்டவனாக, அக்கறை உடையவனாக மாறினேன் என்றால், அதற்கு காரணம், தமிழ்நாட்டின் தலைப்பெழுத்தைத் தீர்மானிக்கும் இடமாக கோபாலபுரம் இல்லத்தை தலைவர் கலைஞர் உருவாக்கி வைத்திருந்ததுதான்.

கோபாலபுரம் இளைஞர் தி.மு.க. என்ற அமைப்பைத் தொடங்கியபிறகு, அரசியல் ஆர்வம் மேலும் அதிகமானது. கழகத்தின் கொள்கைப் பிரச்சார நாடகங்களில் பங்கேற்று நடிக்க ஆரம்பித்தேன். அஞ்சுகம் நாடக மன்றத்தின் சார்பில், 'முரசொலி' அடியார் அவர்கள் எழுதிய 'முரசே முழங்கு' என்ற நாடகத்தில், நான் தலைவர் கலைஞர் அவர்கள் வேடத்தில் நடித்தேன். பின்னாளில், திரைத்துறையில் நல்ல பல கதாபாத்திரங்களை ஏற்று நடித்த கலைஞர்கள் அந்த நாடகத்தில் என்னுடன் பங்கேற்றிருந்தனர்.

1971இல் 'முரசே முழங்கு' நாடகத்தின் 40ஆவது நிகழ்வு நிறைவடைந்தபோது, சென்னை திருவல்லிக்கேணி என்.கே.டி. கலா மணிமண்டபத்தில் முதல்வர் கலைஞர் தலைமையில் விழா நடைபெற்றது. புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். அவர்கள் அதில் பங்கேற்று வாழ்த்துத் தெரிவித்தார். நாடகத்தில் என்னுடைய கதாபாத்திரத்தைப் பாராட்டி, தலைவர் கலைஞர் அவர்கள் எனக்கு கணையாழி அணிவித்தபோது, 1959-ல் சென்னை மாநகராட்சித் தேர்தலில் கழகம் பெற்ற மகத்தான வெற்றிக்கு காரணமான தலைவர் கலைஞர் அவர்களுக்கு பேரறிஞர் அண்ணா கணையாழி அணிவித்த நிகழ்வு நெஞ்சில் நிழலாட, நெகிழ்ந்து போனேன்.

தலைவர் கலைஞர் அவர்கள் பேசும் போது, **"இந்த நாடகம் இன்று நிறைவு பெறுகிறது என்று நான் கூறுவதற்குக் காரணம், ஸ்டாலின் இந்த வேலையைத் தொடரக் கூடாது என்பதற்காகத்தான். புராணக் காரர்கள் பாஷையில் சொல்ல வேண்டுமென்றால் விடையாற்றி உற்சவம் என்று சொல்லலாம். அதாவது, கோவில்களில் உற்சவங்களையெல்லாம் முடித்து கடைசித் திருவிழாவாக விடையாற்றி உற்சவத்தை நடத்துவார்கள். அதைப் போல இந்த நாடகம் இன்று நடத்தப்படுகிறது என்று கருதுகிறேன்.**

**குடும்பமே இயக்கப் பணிகளில் ஈடுபடுவதை எண்ணுகிற நேரத்தில் ஒரு பக்கத்தில் மகிழ்ச்சி அடைகிறேன். அதே நேரத்தில் எப்படி நான் என்னுடைய தாய் தந்தையருக்கு அடங்காத பிள்ளையாக இருந்தேனோ, இந்த இயக்கத்தில் ஈடுபட்டேனோ அதைப் போல என்னுடைய பிள்ளைகளும் இருக்கிறார்கள் என்பதை எண்ணும்போது நான் செய்த குற்றத்திற்கு ஏற்ற தண்டனைதான் எனக்கு கிடைத்திருக்கிறது என்று கருதுகிறேன். அந்தத் தண்டனை தமிழ்நாட்டை வாழ வைக்கிற காரியத்திற்கு உறுதுணையாக இருப்பதால் இப்படிப்பட்ட தண்டனைகள் அடிக்கடி கிடைக்க வேண்டுமென்று எண்ணினாலும் கூட, ஸ்டாலின் போன்றவர்கள் கொஞ்சம் ஒழுங்காக முறையாகப் படித்து, எனக்கு இருக்கிற ஒரே ஒரு குறை (கல்லூரிப் பட்டம் பெறாதது) அவர்களுக்கு இல்லாத அளவில் அவர்கள் படிக்க வேண்டும்"** என்று தலைவர் உணர்ச்சிப்பூர்வமாகக் குறிப்பிட்டுப் பேசினார்.

புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர் அவர்கள் என்னுடைய நடிப்பாற்றலையும், நாடகத்தின் கருத்தையும் பாராட்டிவிட்டு, **"தான் பெற முடியாத கல்லூரிக் கல்வியை ஸ்டாலினும் இழந்துவிடக்கூடாது என்று கலைஞர் சொன்னார். அதை அவர் எவ்வளவு வேதனையோடு சொன்னார் என்பதை ஸ்டாலின் உணர வேண்டும். ஒரு தந்தை நூறு பக்கங்களில் மகனுக்கு எழுத வேண்டிய கடிதத்தை அவர் ஒரு வரியில் குறிப்பிட்டார்"** என்று தலைவர் கலைஞர் அவர்களின் ஏக்கத்தை எம்.ஜி.ஆர். அவர்களும் தன் உரையில் எடுத்துரைத்தார்.

'முரசே முழங்கு' நாடகம் நிறைவு பெற்றாலும் என்னுடைய இயக்கப் பணியும், கலைப்பணியும் தொடர்ந்து கொண்டே தான் இருந்தன. 1971-ல் கோவையில் நடைபெற்ற கழகத்தின் மாணவர் மாநாட்டின் தலைவர் அண்ணன் எல்.கணேசன் அவர்கள் உரையாற்றும்போது, "மாணவர் பட்டாளம் உயிர்த்தியாகம் உள்பட எந்தத் தியாகத்திற்கும் தயாராக இருந்து இனம், மொழி காக்கும் வீரர்களாக வேண்டும்" என்றார். நான், "எனக்கு இரண்டு நிமிடங்கள் பேச வாய்ப்பு தாருங்கள்" என்று கேட்டு வாங்கிப் பேசினேன்.

**"என்னுடைய தந்தைக்கு நான்கு ஆண் பிள்ளைகள் இருக்கிறார்கள். அந்த நான்கு ஆண் பிள்ளைகளில் ஒரு ஆண் பிள்ளை போய்விடுவதால் என்னுடைய தந்தை நிச்சயம் கவலைப்படமாட்டார். அதுவும் மொழிக்காக, ஒரு இனத்திற்காக தனயனை இழந்த தந்தை என்று என்னுடைய தந்தைக்குப் பாராட்டு கிடைக்கும். எனவே எத்தகைய தியாகத்தை செய்வதற்கும் தயார்.. தயார்"** என்றேன்.

நான் பேசுவதை உன்னிப்பாகக் கேட்டுக்கொண்டிருந்தார் மேடையிலிருந்த தலைவர் கலைஞர். அவர் உரையாற்றும் போது, **"ஒழுங்காகப் படிக்காமல் பட்டம் பெறாமல், அரசியலில் ஈடுபட்டால் என்னைப் போல முதலமைச்சராக ஆகலாம் என்று யாரும் தவறாகக் கருதிக்கொள்ளாதீர்கள். இது விதிவிலக்கு. விதிவிலக்கு, வழிகாட்டிகள் ஆகாது. எனவே விதிவிலக்குகளை வழிகாட்டிகளாக எடுத்துக் கொள்ளக்கூடாது"** என்று மீண்டும் படிப்பையே வலியுறுத்தினார். பட்டம் பெற்று, பண்பாளன் என்ற பெயர் பெற்று, பாரோர் புகழக் குடும்பத்தின் பெருமையை உயர்த்துவதுதான் பெற்றெடுத்தவர்களுக்கு நீங்கள் செய்யும் கைம்மாறு என்றார் தலைவர்.

'கல்வியே அழிவில்லாத செல்வம்' என்பதால்தான் கல்வி உரிமைக்காகவும், அதனடிப்படையிலான வேலை உரிமைக்காகவும் திராவிட இயக்கம் தோன்றியது. பெரியார், அண்ணா, கலைஞர் உள்ளிட்ட தலைவர்கள் அனைவரும் கல்வியின் அவசியத்தை வலியுறுத்தி, அந்த வாய்ப்பை அனைத்து மக்களும் பெறுவதற்காக அயராது பாடுபட்டு வெற்றி பெற்றனர். என்னுடைய தந்தையாக என் பொதுவாழ்வுப் பணிகளில் தலைவர் கலைஞர் அவர்கள் மனநிறைவு கொண்டாலும், இயக்கத்தின் தலைவராக இந்த இனத்தை வாழவைக்கும் தலைவராக என்னுடைய கல்வி மீதான அவரது அக்கறை எப்போதும் தொடர்ந்தது.


**நெருக்கடிநிலைக் காலத்தில் மிசா சிறைவாசத்தில், கொடூரத் தாக்குதலை எதிர்கொண்டேன். என் மீது விழுந்த அடிகளில் பலவற்றை அண்ணன் சிட்டிபாபு தாங்கிக்கொண்டு, தன் உயிரைக் கொடுத்து என் உயிரைக் காத்தார். அந்தச் சிறைவாசத்தின்போது, உரிய அனுமதி பெற்று, சென்னை மாநிலக் கல்லூரியில் தேர்வுகளை எழுதினேன். பின்னர், பி.ஏ. பட்டம் பெற்றேன். அதன் மூலம், தந்தையின் - அல்ல.. அல்ல.. - தலைவரின் எண்ணத்தையும் எதிர்பார்ப்பையும் நிறைவேற்றினேன்.**

அவருடைய விருப்பப்படி, கல்லூரியில் பட்டம் பெற்றாலும், நான் அவரிடம் பெற்ற உயர்ந்த பட்டம் என்பது, **"ஸ்டாலின் என்றால் உழைப்பு..உழைப்பு.. உழைப்பு"** என்று எனக்கு தலைவர் அவர்கள் அளித்த அங்கீகாரம்தான். அந்த உழைப்பும் அவரிடம் கற்றதுதான். அதை இன்றளவும் தமிழ்நாட்டு மக்களுக்காக வழங்கிக் கொண்டிருக்கிறேன். **உயர்கல்வியில் முன்னணி பெற்றுள்ள தமிழ்நாடு இன்னும் பல படிகள் முன்னேறி, உலகின் உயர்கல்வித் தலைநகராகத் தமிழ்நாடு திகழவேண்டும் என்றும், தமிழ்நாட்டு மாணவர்களுக்கு நிகரானவர்கள் உலகில் இல்லை என்று கூறும் நிலை வரவேண்டும் என்பதற்காகவும் உழைத்துக் கொண்டிருக்கிறேன்.**

அந்த உந்துவிசையை எனக்கு இன்றும் வழங்கிக்கொண்டிருப்பது தலைவர் கலைஞரின் அன்றைய பேச்சுதான்.

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரை உச்சரிக்கும்போதே நெகிழ்கிறேன். அவர் நினைவுகளுடனேயே என் வாழ்வைத் தொடர்கிறேன்.**

## இராமானுசரும், திராவிட வேதமும்!



ஆழ்வார்களுடைய நாலாயிர திவ்வியப் பிரபந்தம், திராவிட வேதம் என்று யாரால் சொல்லப்பட்டதென்றால், இராமானுசரால் சொல்லப்பட்டது. அந்தத் திராவிட வேதம் இன்றைக்கு வைணவக் கோவில்களில் எல்லாம் பாடப்படுகிறது, படிக்கப்படுகிறது என்றால், அதற்கு மூல காரணமாகத் திகழ்பவர் இராமானுசர்தான்!

அவர் ஆன்மிகவாதிதான். ஆன்மிகவாதி என்றாலுங்கூட, அந்த ஆன்மிகத்தோடு கலந்து அவர் அளித்த கருத்து சாதாரணமானதல்ல.

உத்தமர் காந்தி அடிகள், ஆலயப் பிரவேசம் என்ற ஒரு திட்டத்தை அறிவித்து - அதை நிறைவேற்றுவதற்கு முன்பு - 850 ஆண்டுகளுக்கு முன்பு அதை கர்நாடக மாநிலத்திலே நடத்திக் காட்டியவர் இராமானுசர் அவர்கள் ஆவார்கள்.

கர்நாடக மாநிலத்தில் திருநாராயணபுரம் என்று அழைக்கப்பட்டு - இன்றைக்கு மேலக்கோட்டை என்று அழைக்கப்படுகின்ற அந்த ஊர்க் கோவில்களில் ஆதிதிராவிடர்கள் - தாழ்த்தப்பட்ட சாதிக்காரர்கள் நுழையக் கூடாது என்ற தடையை அகற்றி - ஆலயப் பிரவேசத்தை, காந்தி அடிகளுக்கு 850 ஆண்டுகளுக்கு முன்பு நடத்திக் காட்டிய பெருமை ஒருவருக்கு உண்டென்றால், அது இராமானுசர் ஒருவருக்குத்தான் உண்டு. அத்தகைய சீரிய, செழுமிய, புரட்சிகரமான கருத்துகளுக்குச் சொந்தக்காரராக அவர் விளங்கினார்!

**- கலைஞர்**

# “கலைஞரின் உள்ளம் அன்பெனும் பிடிக்குள் அடங்கும்”



அமைச்சர் துரைமுருகன்
கழக பொதுச் செயலாளர்

முத்தமிழறிஞர் கலைஞருடன் உடன்பிறப்புகளின் சந்திப்பு என்பது நெகிழ்ச்சியானது மட்டு மல்ல, வரலாற்றுச் சுவடும் ஆகும்!

கலைஞர் அவர்களுக்கு உடன்பிறப்புகளோடு பேசுவதும் அவர்களோடு இருப்பதும் நெகிழ்ச்சி யான நேரமாகும்!

தனிமையில் இருப்பது என்பது பலருக்கும் பிடித்தமான நேரமாகும்!

ஆனால் தலைவர் கலைஞருக்கு அதுதான் மிக வேதனையானது!

உடன்பிறப்புகளோடு கலைஞர் உடனிருந்த நேரமும் அப்போதைய உரையாடல்களில் பிறப்பெடுத்த பல கருத்துகளும் இலக்கியம்!

**தலைவர் எந்த இடத்தில் யாரோடு இருந்தாலும் அந்த இடம் மகிழ்ச்சிக்குரியதாகவே இருக்கும்!**

**கலைஞர் அவர்கள் தினம் தினம் அவர் குடும்பத்தினரோடு செலவிட்ட நேரத்தைவிட கழக உடன்பிறப்புகளோடு உறவாடிய நேரம்தான் அதிக மாக இருக்கும், மகிழ்ச்சியான தருணங்களில் மட்டுமல்லாமல் உடன்பிறப்புக்களின் துயரமான தரு ணங்களிலும் பங்கேற்பது நம்முடைய நெஞ்சை நெகிழ வைப்பதாக இருக்கும்!**

**தலைவர் அவர்கள் சென்னையில் இருந்தால் ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலும் அண்ணா அறிவாலயம் வந்துவிடுவார்! உடன் பிறப்புக்களை சளைக்காமல் சந்திப்பார்! அதில் மகிழ்ச்சியும் இருக்கும் - துன்பம் கொண்ட இரக்க மாகவும் இருக்கும்.**

ஒரு நாள் அண்ணா அறிவாலயத்தில் உட்கார்ந்து உடன்பிறப்புகளைச் சந்தித்துக் கொண்டிருந்தார். அப்போது மதுரை மாவட்டச் செயலாளராக இருந்த பொன்முத்துராமலிங்கம் ஒரு நபரை உடன் அழைத்துக் கொண்டு வந்திருந்தார். கலைஞர் அவர்கள் பொன்முத்துரா மலிங்கத்தைப் பார்த்து “என்ன செய்தி?” என்று கேட்டார். பொன்முத்துராமலிங்கம் உடன் அழைத்து வந்திருந்தவரை அறிமுகம் செய்து வைத்து, அவரைப் பற்றி உயர்வாக சில கருத்துக் களை தெரிவித்துவிட்டு, “இவர் இலக்கியத்தின் மீது மிகுந்த ஆர்வம் கொண்டவர், மதுரை மாவட்ட இலக்கிய அணிச் செயலாளர் பொறுப்பு கேட்கிறார்” என்று சொன்னார்.

**‘உடனே கலைஞர், அந்த புதிய நபரைப் பார்த்து, “கவிதையெல்லாம் படிப்பீர்களா? சங்க இலக்கியம் எல்லாம் தெரியுமா?” என்று கேட்டுவிட்டு, “கம்ப ராமாயணத்தை எழுதியது யார்?” என்று கேட்டார். உடனே அந்த நபர் கொஞ்சமும் யோசிக் காமல், “நீங்கதான் அய்யா” என் றார். அதாவது கம்பராமா யணத்தை எழுதியது கலைஞர் தான் என்று கூறினார். இதைக் கேட்ட அனைவரும் விழுந்து விழுந்து சிரித்தோம். அந்த நபர் பேந்த பேந்த விழித்தார். இதைப் பார்த்துக் கொண்டிருந்த பொன். முத்துராமலிங்கம் அந்த நபரைப் பார்த்து, “நீங்க கொஞ்சம் வெளியே இருங்க, நான் வரேன்” என்று சொல்லி அந்த நபரை அங் கிருந்து அப்புறப்படுத்தினார்.**

### இன்னொரு நிகழ்வு

கலைஞர் அவர்கள் அவ ருக்கே உரிய பாணியில் தொல் காப்பியத்திற்கு உரை எழுத முடிவெடுத்தார். ஒரு வார காலத் திற்கு யாரும் எளிதில் அணுக முடியாத இடத்திற்குச் செல்ல வேண்டும் என்று யோசித்து, கோவா செல்வது என்று முடிவு செய் தார். தயாளு அண்ணியார், கலைஞருடைய டாக்டர் கோபால், நான் - எங்கள் மூவரையும் அழைத்துக் கொண்டு கலைஞர் கோவா சென் றார். கலைஞர் அவர்கள் பொதுவாகவே காலை நேரத்தில் எழுந்து எழுது வதில் அதிக ஆர்வம் கொண்டவர். கோவாவிலும் ஒவ்வொரு நாளும் காலையில் எழுந்து எழுத ஆரம்பித்து விடுவார். மடியிலே ஒரு பேடை வைத்து எழுதுவார். ஒவ் வொரு தாளையும் எழுதி முடித்தவுடன் அடுத்த தாளை திரும்ப எடுப்பதற்குள் எழுதிய தாள் பறந்து கீழே விழுந்துவிடும். அப்படி அவரைச் சுற்றி அறை முழுவதும் எழுதிய தாள்கள் சிதறிக் கிடக் கும். தயாளு அண்ணியார் அவற்றையெல்லாம் சேகரித்து வைப்பார்.

**ஒரு நாள் கலைஞர் எழுதிய தாள்களை டாக்டர் கோபால் அவர்கள் சேகரித்து அடுக்கி வைத்துக் கொண்டிருந்தார். கலைஞர் அவர்கள் அன்றைய தினம் எழுதிய தாள்களை ஏதோ ஒரு ஆர்வத்தில், டாக்டர் வாசித்துக் கொண்டிருந்தார். அந்த நேரம் கலைஞரும் அன்றைய எழுத்துப்பணியை முடித்துக் கொண்டார். டாக்டரைப் பார்த்து, “என்ன டாக்டர் பேப்பரை எல்லாம் நீங்களே அடுக்கி வைத்துக் கொண்டிருக்கிறீர்களா?” என்று கேட்டார். உடனே கோபால் அவர்கள், “ஆமாங்கய்யா, இன்றைக்கு உங்கள் எழுத்துக்களைப் படிக்கிற பாக்கியம் எனக்குக் கிடைத்தது. ரொம்ப அற்புதம் அய்யா. இப் படி யாராலும் சிலப்பதிகாரத்திற்கு உரை எழுத முடி யாது அய்யா” என்றார்.**

**இதைக் கேட்ட கலைஞர் சிரித்துவிட்டு பக்கத்து அறையில் இருந்த என்னை அழைத்து, “துரை, டாக்டர் நான் எழுதியதைப் படித்துவிட்டு ‘சிலப்பதிகா ரத்திற்கு இப்படி யாரும் உரை எழுத முடியாது’ என் கிறார். இவருக்கு சிலப்பதிகாரமும் தெரியவில்லை, தொல்காப்பியமும் தெரியவில்லை” என்று கூறி விட்டு வாய்விட்டுச் சிரித்தார்.**

### இன்னொரு நிகழ்வு

ஒரு நாள் நானும் தலைவரும் அண்ணா அறி வாலயத்திற்கு போனோம். போகிற பொழுதே தலைவருக்கு மூடு சரியில்லை. அந்த நிலையில், கலைஞரின் கார் அண்ணா அறிவாலயத்தின் உள்ளே சென்று நின்றது. காரிலிருந்து இறங்கி அவர் அறைக்குப் போகும் வழியில் கடையநல் லூரைச் சார்ந்த ராஜாமணி என்ற தோழர் கலை ஞரை இடைமறித்து, சிலரைப் பற்றி மளமளவென குற்றச்சாட்டுக்களைச் சொல்ல ஆரம்பித்தார். ஏற் கெனவே மூடு சரியில்லாத நிலையில் இருந்த கலைஞருக்கு ராஜாமணியின் பேச்சு எரிச்சலை ஊட்டியது. “போயா நீ மட்டும் யோக்கியனா? மற்றவனைப் பற்றி குறை சொல்ல வந் துட்ட. ஒரு கட்சிக்காரனை இன்னொரு கட்சிக்காரன் குறை சொல்லும் வழக்கம் என்னைக்கு நிற்குதோ, அன்று தான் கட்சி உருப்ப டும்” என்றார் கோபமாக.

ராஜாமணி தலைவருக்கு வேண்டியவர்தான். தலைவர் இப்படி பேசியதைக் கேட்டு அவர் அசந்து போய் தலைவ ரிடம் ஏதும் கூறாமல் வெளியே போய்விட்டார்.

பின்னர், தலைவர் அவர் கள் யாரிடத்திலும் எதுவும் பேசாமல் கையை தாடைக்கு முட்டுக் கொடுத்துக் கொண்டு அமைதியாக உட் கார்ந்து யோசித்துக் கொண்டிருந்தார். பின் என்னைப் பார்த்து, “துரை, நான் அவனை ரொம்ப திட்டிட்டேன், அவன் எங்கே இருக்கான் பாரு?” என்றார்

நான் உடனே கலைஞரின் அறைக்கு வெளியே வந்து அங்குமிங்கும் தேடினேன், ராஜாமணியை காணவில்லை. அறிவாலயத்திற்கு வெளியே ஆட்டோக்காரரிடம் பேரம் பேசிக்கொண்டிருந்தார்.

நான் அவரிடம் சென்று, “கலைஞர் உன்னைக் கூப்பிடுகிறார்” என்று சொல்லி கலைஞரிடம் அழைத்து வந்தேன்.

**ராஜாமணி தலைவரின் அறைக்குள் நுழைந்ததும், தலைவர், ராஜாமணியைப் பார்த்து, “ராஜாமணி என்னை மன்னிச்சிடுய்யா. நான் ஏதோ ஒரு டென்ஷனில் இருந்தேன், உன்னைத் திட்டிவிட்டேன்” என்றார். ராஜாமணி மட்டும் அல்ல, இதைக் கேட்ட நாங்கள் அனைவருமே அசந்து போய்விட்டோம்.**

**இதைக்கேட்ட ராஜாமணி, “அய்யா... நீங்கள் போய் என்னிடம் மன்னிப்புக் கேட்கலாமா?” என்று கூறிக்கொண்டே காலில் விழுந்து புரண்டு புரண்டு அழுதார்.**

**‘தொண்டனின் மனம் புண்பட்டுவிடக் கூடாது’ என்ற கலைஞரின் நிலைப்பாட்டிற்கு இது ஒரு எடுத்துக்காட்டு.**

### மற்றொரு நிகழ்வு- நெஞ்சைப் பிழிகிற நிகழ்வு

ஒரு நாள் கலைஞர், அண்ணா அறிவாலயத் தில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார். சண்முக சுந்தரம் என்ற வழக்கறிஞர் கழகத்தின் சார்பாக நீதிமன்றங்களில் வாதாடுகிறவர். ஜெயலலிதா உட்பட பல அ.தி.மு.க. காரர்களை நீதிமன்றத்தில் தோலுரித்துக் காட்டியவர். ஒரு நாள் சண்முக சுந்தரம் அவருடைய அறையில் உட்கார்ந்திருந் தார். ஜெயலலிதாவிற்கு வாதாடியவர்களின் தூண்டுதலின் பேரில் சிலர் சண்முகசுந்தரத்தின் அறைக்குள் நுழைந்து சண்முகசுந்தரத்தை கண் மூடித்தனமாக தாக்கினர். அரிவாளைக் கொண்டு பல இடங்களில் அவரை வெட்டினர். யாரும் எதிர்ப் பாராத நேரத்தில் இந்நிகழ்வு நடந்தது.

அங்கிருந்த வக்கீல்கள் தாக்கியவர்களைப் பிடிக்க முற்படும் முன் அவர்கள் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டனர். வக்கீல்களும் அவர்களைப் பிடிப்ப தைக் காட்டிலும் அடிபட்டுக் கிடக்கும் சண்முக சுந்தரத்தை காப்பாற்றுவதுதான் முக்கியம் என்று நினைத்து அவரை உடனடியாக அருகில் இருந்த மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள்.

**இந்த தகவல் அண்ணா அறிவாலயத்தில் இருந்த கலைஞருக்கு கிடைத்தது. எதற்குமே அஞ்சாத தலைவர் படபடப்புக்குள்ளானார். வண்டியில் உட்கார்ந்து மிக வேகமாக மருத்துவமனைக்கு சென்றார். உள்ளே அறையில் சண்முகசுந்தரம் படுத் திருந்தார். பல இடங்களில் வெட்டப்பட்ட காரணத் தால் சண்முகசுந்தரத்தின் உடலிலிருந்து இரத்தம் வெள்ளமாக ஓடிக்கொண்டிருந்தது. கலைஞர் சண் முகசுந்தரத்தைப் பார்த்து கண்கலங்கிவிட்டார். சண் முகசுந்தரத்திற்கு திருமணமாகி கொஞ்சநாள்தான் ஆகியிருந்தது. அவரது மனைவியும் ஒருபக்கம் நின்று அழுதுகொண்டிருந்தார். அந்தக் காட்சி என் கண் முன் அப்படியே நிழலாடுகிறது.**

இப்படி முத்தமிழறிஞர் கலைஞருடன் உடன் பிறப்புகளின் நெகிழ்ச்சியான சந்திப்புகள் எத்தனையோ.

# கல்வி - சமூக மாற்றம்!


கல்வி, சமூக மாற்றத்திற்கு ஒரு கருவி என்ற வகையிலேதான் (Education is a tool for social change) ஒரு மேல்நாட்டு அறிஞன் குறிப்பிட்டான்.

இதே கருத்தைத்தான் வள்ளுவப் பெருந்தகை,

**“அறிவு அற்றம் காக்கும் கருவி செருவார்க்கும்**
**உள்ளழிக்கல் ஆகா அரண்”**

என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ் மக்கள், கல்வி வாய்ப்புகளைப் பெற்றி ருந்தவர்கள், கல்லாதவர்களை அடக்கி ஒடுக்கித் தங்கள் ஆதிக்கத்திற்குக் கொண்டுவந்த வரலாறும் உண்மை.



அந்தக் காலக் கட்டத் திலேதான் - தமிழகத்தைப் பொறுத்தவரை 1916-ஆம் ஆண்டு வாக்கில், தென் னிந்திய நல உரிமைச் சங் கம் தோற்றம் கொண்டது. அந்தத் தோற்றத்திற்குப் பிற குதான் எல்லோருக்கும் கல்வி வாய்ப்பு வேண்டும்; வேலை வாய்ப்பு வேண் டும் என்ற உரிமைக் குரல் விண் முட்ட எழுந்தது.

அந்த உரிமைக் குரல் களின் முன்னோடிகளாக இருந்த திராவிட இயக்கத் தின் தலைவர்களை யாரும் மறந்துவிட முடி யாது. அவர்களுடைய உழைப்பின் வடிவம்தான், என் எதிரே அமர்ந்திருக் கின்ற பல்லாயிரக்கணக் கான ஆசிரியப் பெருமக்கள் என்று சொன்னால், அதை யாரும் மறைக்கவும் முடியாது; மறுக்கவும் முடியாது.

அந்த இயக்கத்தின் தோன்றலாக இருக்கின்ற அரசுதான் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற கழக அரசு !

**- கலைஞர்**

# அண்ணன் கலைஞர் என்னைச் செதுக்கிய தேவன்! என் அரசியல் ஆசான்!



அமைச்சர்
கே.என்.நேரு
கழக முதன்மைச் செயலாளர்

திருச்சி மாவட்டம் தீரர்கள் கோட்டம்!

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் உள்ளம் கவர்ந்த மாவட்டம் திருச்சி மாவட்டம்! அதற்குப் பல காரணங்கள் உண்டு.

அண்ணன் கலைஞர் அவர்கள் தலைமை யேற்று திருச்சி மாவட்டத்தில் முதன்முதலில் 1953 ஜூலை 15இல் நடத்தியது, கல்லக்குடி ரயில் மறியல் போராட்டம்: அதில் ஆறுமாத சிறைத் தண்டனை: அதுவும் திருச்சி மத்திய சிறையில்தான்.

1957 தேர்தலில் முதன்முதலில் போட்டியிட்டு வென்று பேரவை உறுப்பினரானது அன்றைய ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டத்தின் குளித்தலை தொகுதியில்தான் !

அந்தக் குளித்தலையில் நங்கவரம் விவசாயிகள் போராட்டத்தில் முன்னிலையேற்றுப் போராடியதும், பேரவையில் ஆற்றிய கன்னிப் பேச்சில் நங்கவரம் போராட்டம் குறித்துப் பேசியதும், போராட்டத்தில் வெற்றி பெற்று விவசாயிகளின் கூலி உயர்வைப் பெற்றுத் தந்த வரலாறு நிகழ்ந்ததும் திருச்சி மாவட் டத்தில்தான்!

இந்தியை எதிர்த்து, இரயில் நிலையப் பெயர்ப் பலகைகளில் தந்தை பெரியார் அவர்கள் இந்தி எழுத்துகளைத் தார் பூசி அழிக்க: முத்தமிழறிஞர் கலைஞர் இந்தி எழுத்துகளைத் தார் பூசி அழித்ததும் திருச்சி தெப்பக்குளம் அஞ்சல் அலுவலகப் பெயர்ப் பலகைகளில்தான்!

விலைவாசி உயர்வைக் கண்டித்து, 1962இல் தஞ்சை மாவட்ட ஆட்சியர் வாயிலில் மறியல் செய்து மூன்று மாத காலம் சிறைத் தண்டனை பெற்று அதை அனுபவித்ததும் திருச்சி மத்திய சிறையில்தான் !

ஆளும் கட்சியாகக் கழகம் திகழ்ந்தபோதும், எதிர்க் கட்சியாக விளங்கியபோதும் மிகப் பெரிய மாநாடுகளை நடத்தி அண்ணன் கலைஞர் அவர்கள் வெற்றிப் பாதையில் கழகத்தைச் செலுத்திய வரலாறுகளும் திருச்சியில்தான் !

இத்தகைய வரலாற்று நிகழ்வுகளின்போது தமிழ்நாட்டின் அரசியல் கலைமாமேதை அண்ணன் கலைஞர் அவர்களின் ஆணை கேட்டு அரசியல் பயணத்தில் பல வெற்றிப் படிக்கட்டுகளை நிர்மாணித்த அனுபவங்களை நான் எண்ணிப் பார்க்கிறேன்.

அரசியல் மாமலை அண்ணன் கலைஞர் அவர்கள் என்னிடம் நம்பிக்கை வைத்து திருச்சி மாவட் டக் கழகச் செயலாளராகப் பணியாற்றும் வாய்ப்பை எனக்கு வழங்கினார்கள்.

அண்ணன் கலைஞர் அவர்கள் அன்றைக்கு என்மேல் வைத்த நம்பிக்கைக்கு வெற்றி சேர்க்கும் வகையில், இன்றும் அவர் வீரமைந்தர், இன்றைய முதலமைச்சர் தளபதி அவர்களின் காலத்திலும் அவர் வழியில் கழகத்தை வளர்த்து வருகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இரண்டாவது மாநில மாநாடு பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் 1956 மே, 17, 18, 19, 20 ஆகிய நாள்களில் திருச்சி மாநகரில்தான் நடைபெற்றது.

1990 பிப்ரவரி 9, 10, 11 ஆகிய நாள்களில் கழகத் தலைவர் அண்ணன் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக வீற்றிருந்து - திருச்சியில் நடத்திய 6-வது மாநில மாநாடு மகத்தான பெற்றிபெற உழைத்து அண்ணன் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டேன்.

அதேபோல, கழகத்தின் 8-வது மாநில மாநாட்டை 1996 ஜனவரி 26, 27, 28 ஆகிய நாள்களில் அண்ணன் கலைஞர் அவர்களின் தலைமையில் திருச்சியில் வெற்றிகரமாக நடத்தியதில் இரவு பகலாகப் பாடுபட்டு உழைத்துள்ளேன்.

கழகத்தின் ஒன்பதாம் மாநில மாநாட்டினை திருச்சி மாவட்டக் கழகச் செயலாளராக வீற்றிருந்து 2006 மார்ச் 3, 4, 5 ஆகிய நாள்களில் பிரம்மாண்டமாக நடத்தி கழகத் தலைவர் அண்ணன் கலைஞர் அவர்களின் பாராட்டைப் பெற்றுப் பெருமிதம் கொண்டேன்.

**அடுத்து, கழகத்தின் பத்தாவது மாநில மாநாட்டை திருச்சியில் நடத்திடும் அருமையான வாய்ப்பை அண்ணன் கலைஞர் அவர்கள் என்னிடம் ஒப்படைத்தார்கள். கழகம் எதிர்க்கட்சியாக இருந்தபோது, 2014ஆம் ஆண்டு பிப்ரவரி 15, 16 ஆம் நாள்களில், அண்ணன் கலைஞர் அவர்கள் தலைமையில் திருச்சி - திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் பிராட்டியூர் அருகே மிகப்பிரம்மாண்ட மாக நடத்தி, "மாநாடு என்றால் திருச்சி! திருச்சி என்றால் நேரு! நேரு என்றால் மாநாடு! மாநாடு என்றால் நேரு! இந்தப் பெருமை தமிழ் நாட்டிலேயே - திராவிட முன்னேற்றக் கழக வரலாற்றிலேயே நேருவைத் தவிர வேறு யாருக்கும் இல்லை" என்று மனந்திறந்து கூறிய அண்ணன் கலைஞர் அவர்களின் பாராட்டைப் பெற்றுப் பெருமிதம் கொண்டது என் வாழ்வில் மறக்கமுடியாத மாபெரும் வரலாற்றுப் பொன்னேடாகும்.**

அது மட்டுமல்ல, தந்தை வழியில் மகத்தான தலைவராகத் திகழும் இன்றைய முதலமைச்சர் - கழகத் தலைவராகப் பொறுப்பேற்று - 2021இல் தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலைச் சந்தித்தபோது, அவரது ஆணைப்படி திருச்சி - சென்னை தேசிய நெடுஞ்சாலையில் சிறுகனூர் அருகே 2021 மார்ச் 14 அன்று கழகத்தின் 11-வது மாநில மாநாட்டையும் நடத்தினேன். அதன்மூலம் திராவிட நாயகர் முதலமைச்சர் தளபதி அவர்கள் அண்ணன் கலைஞர் அவர்கள் கூறிய "மாநாடு என்றால் நேரு; நேரு என்றால் மாநாடு" என்பதை நினைவுபடுத்திப் பாராட்டியதையும் நான் பெற்ற பெரும்பேறாகக் கருதுகிறேன்.

அண்ணன் கலைஞர், அருமைத் தளபதி ஆகியோர் மட்டுமல்லாமல் - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர், தம்பி உதயநிதி அவர்களும் கழக இளைஞர் அணியின் செயலாளராக இரண்டாவது மாநில மாநாட்டைப் பொறுப்பேற்று சேலம் மாநகரில் பிரம்மாண்டமாக நடத்தியபோது, அதே பாராட்டுமொழிகளை நினைவுபடுத்தி அவர் உரையாற்றியதும் என் வாழ்வில் மறக்க முடியாத நிகழ்வாகப் பதிந்துவிட்டது.

### 1989இல் மின்துறை அமைச்சர் பொறுப்பில் ஆற்றிய பணிகள்:

1989ஆம் ஆண்டு அண்ணன் கலைஞர் அவர்கள் மூன்றாம் முறையாக தமிழ்நாட்டு முதலமைச்சராகப் பொறுப்பேற்றார்கள். அப்போது, **"தம்பி நேரு! மின்சாரத் துறை அமைச்சர் பொறுப்பை உன்னிடம் ஒப்படைக்கிறேன்; தமிழ்நாட்டில் தற்போது 60 சதவீத மின்வெட்டு நிலவுகிறது. அதை நீக்கி, தமிழ் நாட்டு மக்களுக்கு முழுமையான மின்வசதியை அளித்திட வேண்டும். கடுமையான பணி; வெற்றிகரமாக நிறைவேற்றுவாய் என்ற நம்பிக்கை உன்மேல் எனக்கு நிறைய உண்டு"** என்று கூறி மின்துறை அமைச்சர் பொறுப்பை முதன்முதலில் எனக் களித்தார்.

### வடசென்னை அனல்மின் திட்டம்!

1989-1990ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் கிடைத்த மின்சாரம் 3017 மெகாவாட். அப்போது மாநிலத் திட்டக்குழு 1994-1995இல் 6345 மெகாவாட் மின்சாரம் தேவைப்படும் என்றது.

எனவே, கூடுதலாகத் தேவைப்படும் 3328 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்திடும் முயற்சியைத் தொடங்கினேன்.

அப்போது, வடசென்னை அனல்மின் திட்டம் எம். ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் திட்ட மிடப்பட்டது. அதன் நில எடுப்பு தொடர்பாக வி.ஜி.பி. நிறுவனம் உச்சநீதி மன்றத்தில் தொடுத்த வழக்கு நிலுவையில் உள்ளது. அத்திட்டத்தைச் செயல்படுத்தினால் தமிழ்நாட்டிற்கு 2050 மெகாவாட் மின்சாரம் கிடைக்கும்: தற்போதைய மின்வெட்டுகளை முழுமையாக நீக்கிவிடலாம் என்று முதலமைச்சர் அண்ணன் கலைஞர் அவர்களிடம் கூறினேன்.

உடனே, வி.ஜி.பி. நிறுவனத்தின் உரிமையாளர் வி.ஜி.சந்தோஷம் அவர்களை அழைத்துப் பேசினார் அண்ணன் கலைஞர்.

வடசென்னை அனல்மின்நிலையத்தை அமைத்திடத் தேவைப்படும் நிலத்திற்காக எண்ணூர், புழுதிவாக்கம் பகுதிகளில் 2171 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தும் பணி 1986இல் எம்.ஜி.ஆர். ஆட்சியில் தொடங்கப்பட்டது. அதில், வி.ஜி.பி. நிறுவனத்திற்கு 1000 ஏக்கர் நிலமும், கிருத்துவ நகர் சங்கத்திற்கு 117 ஏக்கர் நிலமும் இருந்தன. அவர்கள் நில எடுப்பை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடர்ந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது; அவர்கள் உச்சநீதிமன்றம் சென்றனர், அங்கு வழக்கு நிலுவையில் இருந்தது. அது தொடர்பாகத்தான் நான் கூறியபடி, வி.ஜி. சந்தோஷம் அவர்களை அண்ணன் கலைஞர் அழைத்துப் பேசினார். அவரோ, "என் அண்ணன் வி.ஜி.பன்னீர் தாஸ் அவர்களின் கனவு, அங்கு, ஒண்டர் லேண்ட் அமைப்பது, அதனால் எங்களால் நிலத்தை விட்டுக் கொடுக்க முடியாது " என்றார்.

உடனே அண்ணன் கலைஞர் அவர்கள், அவரிடம், "உங்கள் அண்ணன் கனவு, ஒண்டர் லேண்ட் அமைப்பது: எங்கள் அண்ணன் பேரறிஞர் அண்ணா அவர்களின் கனவு தமிழ்நாட்டு மக்களை வாழவைப்பது; அதற்கு மின்சாரம் தேவை. எனவே, வழக்கை உடனடியாக வாபஸ் பெற்று நிலத்தை ஒப்படையுங்கள்" என வலியுறுத்தினார்.

அதன் அடிப்படையில், அவர்கள் உச்சநீதிமன்றத்தின் வழக்கை வாபஸ் பெற்றனர். நில எடுப்புப் பணி முடிந்து, வடசென்னை அனல்மின் நிலையம் அமைத்திட அன்றைய குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமன் அவர்களை அழைத்து, முதலமைச்சர் அண்ணன் கலைஞர் அவர்கள் தலைமையில் அடிக்கல் நாட்டும் விழாவை மின் துறை அமைச்சராக 1.7.1989 அன்று நான் நடத்தினேன்.

அப்படித் தொடங்கப்பட்ட வடசென்னை மின்நிலையத்தின் மூன்று அலகுகளும் செயல்படத் தொடங்கிய பின்னர்தான் தமிழ்நாட்டின் மின்சாரப் பிரச்சினை தீர்ந்து இன்றுவரை அமைதி நிலவுகிறது என்பதைக் குறிப்பிடுவதில் மகிழ்கிறேன் நான் !

### 1996இல் கூட்டுறவு, உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சராக நான்;

1996இல் அண்ணன் முத்தமிழறிஞர் கலைஞர் நான்காம் முறை முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். அவர் என்னிடம் கூட்டுறவு, உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சர் பொறுப்பைத் தந்தார்.

**அப்போது, அண்ணன் கலைஞர் அவர்களின் அறிவுரைகளை ஏற்று - எல்லா உணவு அட்டைகளுக்கும் 20 கிலோ அரிசி மாதந்தோறும் வழங்கச் செய்தேன். தமிழ்நாட்டில் பட்டினிச் சாவு இல்லாத நிலை ஏற்பட்டது. ஒன்றிய அரசு அரிசியின் விலையை கிலோ ரூ.11.80 என உயர்த்திய போதும் மக்களுக்கு ரூ.3.50. விலையிலேயே வழங்கினேன். அதன்மூலம் அண்ணன் கலைஞர் அவர்களின் பாராட்டு கிடைத்தது எனக்கு.**

அது மட்டுமல்ல; தமிழ்நாடு முழுவதிலும் ஏழை எளியோர்க்கு மண்ணெண்ணெய் வழங்கும் 500 நிலையங்களை நிறுவினேன்.

5291 புதிய நியாய விலைக் கடைகளும், முழுவதும் மகளிரே நடத்தும் 210 கடைகளும், அப்போது புதிதாகத் திறக்கப்பட்டு; மக்கள் அனைவரும் கலைஞர் அரசைப் பாராட்டினர்.

### 2006இல் போக்குவரத்துத் துறை அமைச்சராக நான்!

2006இல் அண்ணன் கலைஞர் அவர்கள் ஐந்தாம் முறை முதலமைச்சரானபின் என்னைப் போக்குவரத்துத் துறை அமைச்சராக்கினார்.

**போக்குவரத்துத் துறையில் அண்ணன் கலைஞர் அவர்களின் அறிவுரைகளைப் பெற்றுப் புரட்சிகரமான பல திட்டங்களை நிறைவேற்றினேன் என்பதை எண்ணும்போது பெருமித உணர்வு என் நெஞ்சில் ஊற்றெடுக்கிறது.**

**2006-2011 ஐந்து ஆண்டுகளிலும் ஒரு பைசாகூட பேருந்துக் கட்டணத்தை உயர்த்திடாமல் சீரிய முறையில் நிர்வாகத்தை நடத்தி, வருவாயைப் பெருக்கி: ஐந்து ஆண்டுகளில் 15,130 பேருந்துகள் புதிதாகக் கொள்முதல் செய்யப்பட்டன என்பது ஒரு வரலாறு.**

**ஓட்டுநரின் கல்வித் தகுதி 10ஆம் வகுப்பு தேர்ச்சி என்பதை 8ஆம் வகுப்பு தேர்ச்சி எனக் குறைத்து, ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்கள் வேலைவாய்ப்புகளைப் பெற்று கலைஞர் அரசைப் பாராட்டினர்.**

முன் எப்போதும் இல்லாத சாதனையாகப் போக்குவரத்துத் துறையில் ஓட்டுநரும், நடத்துநருமாக ஏராளமானோர் புதிதாக நியமனம் செய்யப்பட்டனர்.

தொழிலாளர் ஊதிய ஒப்பந்தத்தை அ.தி.மு.க. அரசு 5 ஆண்டுகளாக உயர்த்தியது. அதை மீண்டும் 3 ஆண்டுகளாக குறைத்து தொழிலாளர் நெஞ்சில் இன்பம் ஏற்படச் செய்தேன். 2004ஆம் ஆண்டில் 20 சதவீத போனஸ் கேட்டுப் போராடிய தொழிலாளர்களைத் தீபாவளி நேரம் என்பதைக் கூட எண்ணிப் பாராமல் அவர்களைக் கைது செய்து சிறையில் அடைத்தது அன்றைய அ.தி.மு.க. அரசு.

ஆனால், கலைஞர் அரசில் 2006 முதல் 2011 ஐந்து ஆண்டுகளிலும் தொழிலாளர்கள் கோரிக்கை வைக்காமலேயே 20 சதவீத போனஸ் வழங்கி, அவர்களின் வாழ்வில் வசந்தம் வீசச் செய்தேன்!

போக்குவரத்துத் தொழிலாளர்களின் நீண்டநாள் கோரிக்கைகளை ஏற்று, அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை நிறைவேற்றினேன். அதைச் சென்னை சீரணி அரங்கில் தொடங்கி வைத்து வாழ்த்திய கலைஞர் என்னை வெகுவாகப் பாராட்டினார்.

குக்கிராம மக்களுக்கும் பேருந்து வசதியை ஏற்படுத்திட, "மினிபஸ்" திட்டத்தைத் தொடங்கி வைத்து 4,446 சிறு பேருந்துகள் கிராமப் புறங்களில் இயக்கப்பட்டுப் பொது மக்களின் பாராட்டுகளைக் குவித்தது போக்குவரத்துத் துறை.

இப்படி, கலைஞர் அரசு தமிழ்நாட்டு மக்களிடம் பாராட்டுகளைக் குவித்திடச் செய்ததில் நான் பொறுப்பேற்று வழிநடத்திய துறைகளின் பங்கு மிகுதியானது என்பதைப் பெருமிதத்துடன் இன்று குறிப்பிட விரும்புகிறேன்.

என்றாலும், **என்னை இயக்கி, ஓய்வின்றி உழைத்து நான் வெற்றிகளை ஈட்டிடும் ஆற்றல் பெற்றவனாக விளங்கிட எண்னைச் செதுக்கிய தேவன் ! - என் அரசியல் ஆசான்! தமிழ்நாட்டு மக்களால் மட்டுமல்லாமல், இந்திய அரசியல் வரலாற்றிலும் ஒரு தலைசிறந்த ஆட்சிக்கலை அறிஞராகப் போற்றப்படும் மாமேதை அண்ணன் கலைஞர் அவர்கள்தான் என்பதை ஒவ்வொரு நொடியிலும் எண்ணி எண்ணி மகிழ்ந்து வணங்குகிறேன் என்பதை அண்ணன் கலைஞர் அவர்கள் நூற்றாண்டு விழா கொண்டாடப்படும் இவ்வேளையில் நன்றியுடன் குறிப்பிடுவதில் அளவிலா ஆனந்தம் அடைகிறேன்!**

வாழ்க அண்ணன் கலைஞரின் புகழ் !

## கருணையும், நிதியும்!



கலைஞருக்கு அவருடைய பெற்றோர் வைத்த பெயரின்படி – அவர் பெயர் கருணாநிதி; கருணையும் இருக்கிறது, நிதியும் இருக்கிறது, என்று சொன்னார் பெரியவர் செங்கல்வராயன்.

என் பெற்றோர் சரியாகத்தான் பெயர் வைத்தார்கள். கருணை அதிகம் இருக்கிறது. அது மூன்றெழுத்து – கருணை; நிதி, குறைவாகத்தான் இருக்கின்றது. அதனால்தான் இரண்டு எழுத்து – நிதி, நிதி குறைவாக இருக்கிறது.

கருணை அதிகம் இருந்தாலும் கூட, தவறு செய்பவர்களைக் கண்டால், அது, ' கருணை ' – கடுமையாக மாறும் என்பதையும்; தவறு செய்யாதவர்கள்தான் தமிழகத்தைக் காப்பாற்றக் கூடியவர்கள் – வருங்காலத்தை நிர்மாணிக்கக் கூடியவர்கள் – புதிய சமுதாயத்தை உருவாக்கக் கூடியவர்கள் என்பதையும்; நான் எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

- கலைஞர்

# முத்தமிழறிஞர் கலைஞரும் நானும்!

முனைவர்
க.பொன்முடி
கழக துணைப் பொதுச் செயலாளர்

எனக்கு “பொன்முடி” என இனமானப் பெயர்சூட்டித் திராவிடப்பாதையில் நான் வீறுநடை போட்டு நடக்க வழிகோலியவர் தலைவர் கலைஞர் அவர்கள்தான் என்பதை எப்போதும் நான் நன்றியுடன் நினைத்துக் கொள்வேன்.

திராவிட இயக்கத்தில் நான் நுழைந்ததற்கும் இன்றுவரை திராவிடக் கொள்கைகளுடன் வாழ்ந்துகொண்டிருப்பதற்கும் தலைவர் கலைஞர் அவர்கள் எனக்களித்த ஊக்கம்தான் முழு முதற்காரணம்.

நான் தலைவர் கலைஞரைச் சந்தித்திருக்காவிட்டால் ஒரு பேராசிரியராகவே வாழ்ந்து முடிந்திருப்பேன். தலைவர் கலைஞரால் ஒரு சமூகப் போராளியாக, திராவிடக் கொள்கை மறவனாக, சுயமரியாதை உணர்வாளனாக, வீதியில் இறங்கிப் பொதுமக்களுடன் மக்களாகக் கலந்துபழகிப் பணி செய்யும் பகுத்தறிவாளனாகச் செதுக்கப்பட்டவன் நான்.

தலைவர் கலைஞரைப் பற்றி நான் சிந்திக்காத நாளில்லை. தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணாவின் கொள்கைகளால் அதிகம் கவரப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தம்முடைய திருவாரூர் நண்பர்களுடன் சேர்ந்து மாணவர்கள் அணி ஒன்றையும், கையெழுத்துப் பிரதியாக ‘மாணவ நேசன்’ என்ற மாத இதழ் ஒன்றையும் 1942-ல் தொடங்கினார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எப்படி இளம் வயதிலேயே சக மாணவர்களை ஈர்த்தாரோ, அதைப்போல என்னையும் ஈர்த்துத் தம் வசமாக்கினார்.

1969-ல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அரசியல்துறைச் செயலாளராக நான் இருந்தேன். அப்பொழுதுதான் கலைஞரைச் சந்திக்கும் முதல் வாய்ப்பினைப் பெற்றேன். அப்பொழுது மொழிப் போரில் துப்பாக்கிக் குண்டுக்கு இரையான மாணவர் “இராசேந்திரன்” சிலையைத் திறந்து வைத்தார், தலைவர் கலைஞர் அவர்களைச் சந்தித்த அந்த முதல் வாய்ப்பே எனக்கு மாபெரும் வாய்ப்பாக அமைந்துவிட்டது. அதன்பின் கலைஞர் கருத்துகளால் தொடர்ந்து ஈர்க்கப்பட்டு, 1971-ல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகச் (தி.மா.மு.க.) செயலாளராகப் பல்வேறு மாணவர்களைத் தி.மு.கழகத்துடன் தொடர்புபடுத்தும் பணியை நிறைவேற்றித் தேர்தல் பரப்புரையிலும் ஈடுபட்டேன்.

**ஒரு சாதாரண எளிய குடும்பத்தில் ‘தெய்வசிகாமணி’ என்ற பெயருடன் திருக்கோவிலூரில் பிறந்தேன். கலைஞரை நான் சந்தித்தபோது, என் பெயர் குறித்து, “அது என்ன ‘தெய்வசிகாமணி (என்ற) பொன்முடி’ - பொன்முடி என்ற பெயரே இனமானப் பெயராக இருக்கு, அதனையே அங்கீகாரப் பெயராக அரசிதழில் மாற்றிக்கொள்” என்று கலைஞர் அவர்கள் என்னை அறிவுறுத்தினார்கள். அவ்வாறுதான் ‘தெய்வசிகாமணி’ என்ற என் பெயர் ‘பொன்முடி’யாக மாறியது.**

சைதாப்பேட்டைத் தேர்தலில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் 1971-ல் களம் கண்டபொழுது அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர்கள் சார்பில் கலைஞருக்காகத் தேர்தல் பணியாற்றினேன். அப்பொழுது அண்ணன் முரசொலி செல்வம் அவர்களுடனும், தளபதி அவர்களுடனும் பழகும் நல்வாய்ப்பினைப் பெற்றேன். அதன் தொடர்ச்சியாக கலைஞர் அவர்களுடன் நெருங்கிப் பழகும் பெரும் பேறும் பெற்றேன்.

கலைஞர் அவர்கள் 1989-ல் எனக்குத் தேர்தலில் நிற்க இடம் கொடுத்து, வெற்றியும் பெறவைத்து என்னை அமைச்சராகவும் அமர்த்திச் சிறப்பித்தார். விழுப்புரத்தில் என் தம்பியின் திருமணத்தில் வாழ்த்துரை வழங்கியபோது என்னைப் பற்றி, “ஆழ்கடலில் கண்டெடுத்த நன்முத்து பொன்முடி - அறிவுமுடி” என்றார்.

தலைவர் கலைஞருடன் நான் உரையாடிய தருணங்கள் - மறக்கமுடியாத என் நினைவுகளைப் பகுத்தும் தொகுத்தும் உடன்பிறப்புகளான உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

**1989ல் நான் M.M.D.A. (தற்பொழுது CMDA) துறைக்கு அமைச்சராக இருந்தபோது அத்துறைக்கு எழும்பூர் இயில் நிலையம் எதிரில் ஓர் அலுவலகக் கட்டடம் கட்டப்பட்டு அதற்கு என்ன பெயர் வைப்பது என ஒரு கோப்பு என்னிடம் வந்தது. தலைவரிடம் எடுத்துச் சென்றேன். அவர் வைத்த பெயர் : மொழிப்போர் தியாகிகளான “தாளமுத்து நடராசன் மாளிகை”. இப்பெயரைச் சூட்டிவிட்டுச் சொன்னார்: “எழும்பூரில் இரயிலில் இருந்து இறங்குபவர்களின் கண்ணில் முதலில் தமிழுக்காகச் சிறைப்பட்டு உயிர்நீத்த இவ்விருவரின் பெயரும் தெரிய வேண்டும்” என்றார்.**

**ஒரு மாபெரும் இயக்கத்தின் அடிமட்டத் தொண்டர்களின் பெயர்களை களப்பலியான உயிர் ஈகிகளின் பெயர்களை வரலாற்றில் பதியவைத்துவிட வேண்டும் என்று நோக்கங் கருதிச் செயல்பட்டவர் தலைவர் கலைஞர். திராவிட இயக்கத்திற்காகப் பாடுபட்ட தீரர்கள் ஒவ்வொருவரின் பெயரும் நினைவும் போற்றப்பட வேண்டும் என்பதே கலைஞரின் கொள்கை. தாளமுத்து நடராசனுக்கு வரலாற்றில் இடம்பிடித்துக் கொடுத்ததால், தன்னிகரற்ற தனிப்பெரும் தலைவராக கலைஞர் அவர்கள் வரலாற்றில் இன்று தலைநிமிர்ந்து நிற்கிறார். இதற்கு கலைஞரின் தமிழ்மொழிப் பற்று மட்டும் காரணமில்லை; கலைஞரின் இனமானப் பற்றும் காரணமாகும். இன்றைய முதல்வர் தளபதியிடமும் அத்தகைய மொழிப் பற்று, இனப்பற்று, சுயமரியாதைப் பற்று இருப்பதை நாம் பார்க்கிறோம்.**



பொறியியல் கல்லூரிகளில் தமிழ்வழிப் படிப்பு, அனைத்து விளம்பரப் பலகைகளிலும் தமிழிலேயே எழுத வேண்டும், அரசுப் பணியில் சேர தமிழில் தேர்ச்சி பெறவேண்டும் என்ற தளபதியின் நடவடிக்கைகளுக்கு கலைஞர் வகுத்த வழியே காரணம் ஆகும்.

ஒருமுறை கலைஞரிடம் ஒருவர் சமையல் அறையில் மனு ஒன்றினை அளித்தார். “என்னய்யா, சமையல்கட்டில் இருந்து ‘மெனு’ வரும் என்று பார்த்தால் ‘மனு’ வருகிறதே!” என்றார் கலைஞர். அருகில் இருந்த அனைவரும் கொல்லென சிரித்துவிட்டனர்.

அண்ணன் ஆர்க்காட்டார், துரைமுருகன், ஜெகத்ரட்சகன் ஆகியோரும் நானும் கலைஞருடன் இரவு 7.00 மணிமுதல் அவர் உறங்கச் செல்லும்வரை உரையாடிக் கொண்டிருப்போம். அந்த உரையாடல் சமயங்களில் அவரிடமிருந்து நகைச்சுவை எவ்வித இடரும் இன்றி உடனடியாக வெளிப்படும். நகைச்சுவை என்பது எப்போதும் அவரது வாழ்வின் ஒரு அங்கமாகவே இருந்தது.

‘நீட்’ தேர்வு குறித்து ஒருநாள் விவாதத்தின் பொழுது, “திறமையில் வெளிநாட்டுக்காரர்களையெல்லாம் மிஞ்சக்கூடிய மருத்துவர்கள் நம் நாட்டில் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் நீட் தேர்வு எழுதி மருத்துவம் பயின்றவர்களா?” என்றார் கலைஞர் அவர்கள். இன்று நீட் தேர்வுக்கு எதிராக தம்பி உதயநிதி போராடி வருவதைக் காணும்போது, கலைஞர் அவர்கள் அன்று சொன்னது என் நெஞ்சில் நிழலாடுகிறது.

கலைஞருடன் ஆன்மிகவாதி ஒருவர் உரையாடும்பொழுது, “ஆண்டவன் முன் அனைவரும் சமம்” என்றார். “அப்படியென்றால் அறங்காவலர் குழுவில் ஆதிதிராவிடர் ஒருவரைப் பிரதிநிதியாக நியமிப்போம்” எனச் சொன்னதோடு, அதனை உடனே நிறைவேற்றி ஆதிதிராவிடரும் உள்ளடங்கிய அறங்காவலர் குழு அமைக்க ஆணையிட்டவர், கலைஞர் அவர்கள்.

தற்பொழுதோ, நாட்டின் முதல் குடிமகனான குடியரசுத் தலைவரே கோவிலுக்குள் நுழைய முடியாத அவல நிலை உள்ளபோது, அந்நாளில், அறங்காவலர் குழுவில் ஆதிதிராவிடரைச் சேர்க்க வேண்டும் என கலைஞர் அவர்கள் கொண்டுவந்த விதிகளை நினைத்துப் பார்க்கின்றேன்.

சட்டசபை விவாதங்களில்; மறைந்த ஜெயலலிதா அவர்களுடன் ஆவேசத்துடன் விவாதத்தில் ஈடுபட்டபோது, கலைஞர் அவர்கள், “நானே முன் காலத்தில் கோபக்காரன்; பார்த்துப் பேசு” என்று எனக்கு அறிவுரை வழங்கியது என் நெஞ்சில் நிழலாடுகிறது.

2016 சட்டமன்றத் தேர்தல் முன்னெடுப்பு சமயத்தில், கூட்டணிப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற சமயத்தில், “பொன்முடி, எனக்கு சாப்பாட்டில்கூட கூட்டுதானய்யா பிடிக்கும்” எனச் சொல்லி, “தேர்தல் கூட்டணி வேலைகளைப் பாருங்கள்” என்றார் தலைவர் கலைஞர் அவர்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அறிவுரையை நெஞ்சிலேந்தி, தலைவர் தளபதி அவர்கள் “INDIA” கூட்டணியை வெற்றி காண வைத்திட பெரும் முயற்சி எடுத்துப் பாடுபடுகிறார்.

கலைஞரிடமிருந்து நான் கற்றுக்கொண்டவை ஏராளம். அவருடன் பயணித்த எனக்கு அவர் அளித்த கருத்துகள், உரையாடல்கள், கதைகள் மற்றும் நகைச்சுவைகள் பற்றி மட்டும் தனி நூலே வெளியிடலாம்.

நான் கல்லூரிப் பேராசிரியராகப் பணியாற்றிய காரணத்தினாலும், தமிழ்நாடு மக்கள்மீது பற்றுக் கொண்ட கலைஞர் அவர்கள், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்களை சமுதாயத்தில் மேன்மையடையச் செய்ய வேண்டுமென்ற தொலைநோக்குப் பார்வையில் என்னை உயர்கல்வி அமைச்சராக்கினார். அப்பொழுது கலைஞர் அவர்கள் என்னிடம், “கூழாங் கற்களை வைரமாக்கும் கல்விமுறை வேண்டும்; வைரத்தில் எண்ணெய் இறங்கிடவைத்திடும் கல்விமுறை கூடாது” என்றார். அதனை நினைவில் கொண்டுதான், பொறியியல் கல்லூரிகளுக்கு நுழைவுத் தேர்வு ரத்து, கலைக் கல்லூரிகளில் சுழற்சி முறை (Shift System) கொண்டுவந்து மாணவர் சேர்க்கையின் அளவு இருமடங்காக உயர்ந்து ஏழை மாணவர்கள் பயனடைந்தனர்.

முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கு கல்விக் கட்டணச் சலுகை, மாணவர்களுக்கு இலவசப் பேருந்துப் பயணச் சலுகை போன்ற பல நலத்திட்டங்களைக் கொண்டுவந்தார் கலைஞர். நானும் கலைஞர் அவர்கள் கூறிய, “கூழாங்கற்களை வைரமாக்கும் கல்விமுறை வேண்டும்” என்ற குறிப்பறிந்து செயல்பட்டேன்.

கல்வியறிவு பெற்றால் மட்டுமே இச்சமூகம் மேன்மையடைய முடியும் என்ற உன்னத நோக்கத்தோடு, உயர்கல்வியில் மிகப் பெரிய சமூக மாற்றங்களை முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் செய்தார்கள். இன்று பாமரனும் படிப்பறிவு பெற்றான் என்றால், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் கொண்டுவந்த தனித்துவம் வாய்ந்த உயர் கல்விக் கொள்கையே அதற்குக் காரணம் ஆகும்.

அடித்தட்டு மக்களுக்கான மகத்தான நம்பிக்கையே, தலைவர் கலைஞர் அவர்கள்தான். ஏழைகளுக்கும் எதிரிகளுக்கும் அவரே ஏணி. நவீன தமிழ்நாட்டை உருவாக்கிய நிர்வாகப் பேராளுமை அவர். இன்னும் ஆயிரம் வருடங்கள் கடந்தாலும், தமிழுக்கும் தமிழருக்கும் கலைஞர் செய்தவை; அவர் பெயரை என்றென்றும் வரலாற்றில் பொன்னெழுத்துகளாய்க் கல்வெட்டாய் நிலைநிறுத்தும்.

**கலைஞரின் மரணம் எனக்கும் தமிழினத்திற்கும் மாபெரும் துயரம் ஆகும். என் தந்தையை இழந்தது போல், என் பகுத்தறிவு ஆசானை இழந்ததுபோல், எப்போதும் என்னை வழிநடத்தி வந்த ஒரு இலட்சியச் சுடரை இழந்ததுபோல், பெறற்கரிய நயத்தகு நாகரிகச் சான்றோரைப் பறிகொடுத்து நிற்கிறேன்.**

**கலைஞரைப் பார்த்தேன், கலைஞருடன் பழகினேன், கலைஞருடன் பேசினேன், கலைஞருடன் உணவருந்தினேன், கலைஞர் காலடியில் அமர்ந்திருந்தேன், கலைஞருடன் சட்டசபையில் அமர்ந்திருந்தேன், அன்பு மழையில் நனைந்தேன் என்பதை விட வேறு பெருமை எதுவும் எனக்கு இந்த வாழ்வில் இல்லை.**

காலம் போற்றும் வகையில் தமிழ்நாட்டில் நல்லாட்சி வழங்கியவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள். தமிழ்நாட்டு விளிம்புநிலை மக்களுக்கு அவர், அதிகாரத்தையும், சுயமரியாதையையும் சட்டத்தின் மூலம் கிடைக்கச் செய்ததை ஒருநாளும் எவராலும் மறக்க முடியாது.

**வங்கக் கடலோரம் துயில் கொண்டு மீளாத் துயரில் எங்களை விட்டுச் சென்று தமிழ்நாட்டு மக்கள் மனங்களில் என்றும் இறவாப் புகழ் கொண்டுவிட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களே, மறுபடியும் எழுந்து வாருங்கள்!**

**தாங்கள் என்னை வாஞ்சையோடு கரகரத்த குரலில் “தம்பி பொன்முடி” என்று அழைத்த அந்த மந்திர வார்த்தையை ஒரு நாளும் மறவேன்!**

**வாழ்க கலைஞர் புகழ்!**
**வெல்க தமிழர்!**

## திராவிடர் இயக்கமும், பாரதியும்!



திராவிடர் இயக்கம் ஒரு காலத்தில் பாரதியை ஏற்றுக் கொள்ளவில்லைதான். ஆனால், திராவிடர் இயக்கம் இன்றைக்கு பாரதியை ஏற்றுக் கொள்கின்ற அளவுக்கு உங்கள் முன் வந்து நிற்கிறது என்றால், அது பாரதி பெற்ற பெருமை, பாரதியின் சிறப்பு, பாரதியின் பாட்டுக்குள்ள வலிமை; அவருடைய கருத்துக்கு உள்ள பலம் என்பதை நாம் ஒத்துக்கொண்டுதான் தீர வேண்டும்.

பாரதி, கடவுள்களைப் பற்றிப் பாடினார்; பராசக்தியைப் பற்றி, கண்ணனைப் பற்றிப் பாடினார் என்பதையெல்லாம் வைத்துக் கொண்டு, திராவிடர் இயக்கம் அல்லது சுய மரியாதை இயக்கம், அவரைப் புறந்தள்ளிவிட முடியாது.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், எத்தனையோ சுயமரியாதைக் கருத்துகளைப் பாடல்களாகத் தந்திருக்கிறார் என்றாலும் கூட, அவர் தொடக்கத்திலே பாடியது சுப்ரமணிய துதி அமுதுதான். பாரதிதாசன், சுப்ரமணிய துதி அமுது பாடினார் என்பதற்காக, அவர் பாடியுள்ள பகுத்தறிவுக் கருத்துகளையெல்லாம் தள்ளிவிட முடியாது. அவர் கதர்ப் பாட்டு, ராட்டைப் பாட்டு பாடினார் என்பதற்காக, அவருடைய புரட்சிக் கருத்துகளையெல்லாம் ஏற்றுக் கொள்ள இயலாது என்று சொல்லிவிட முடியாது.

அதைப் போல, பாரதியார் கடவுள் பாட்டு பாடினார், பராசக்தி பாட்டு பாடினார் என்றாலும், அதிலே பொதிந்து கிடக்கும் கருத்துகளையெல்லாம் எண்ணிப் பார்த்த காரணத்தால் தான், கனக சுப்பு ரத்தினம் என்ற தன்னுடைய இயற்பெயரை, பாரதிக்குதாசன் என்று புரட்சிக் கவிஞர் மாற்றிக் கொண்டார்.

**-கலைஞர்**

# கலைஞர் எனும் உடையாத பனிக்குடம்!

**“நீ அரசியல் வீட்டுக்குள்**
**கிரகப்பிரவேசம் நடத்திய பிறகுதான்**
**தமிழர்கள் தங்கள் வீட்டுக்கு**
**வெள்ளையடித்துக் கொண்டார்கள்.**
**நீ -**
**அரியாசனம் ஏறிய பிறகுதான்**
**தமிழர்களுக்கு ஒரு யோகாசன வலிமை வந்தது.’**

தலைவர் கலைஞரின் மணி விழாவுக்காக முசிறி அரசு கலைக்கல்லூரி, இளங்கலை கணித மாணவனாக இருந்தபோது, நான் எழுதி அனுப்பிய புதுக் கவிதையின் சில வரிகள் இவை. முழுக் கவிதையையும் ‘உண்மை’ இதழ் (15.7.1984) வெளியிட்டபோது, அவரை தொலைவிலிருந்து மட்டுமே பார்த்தும் படித்தும் என்னுள் வரித்துக் கொண்டவனாயிருந்தேன்.

பின்பு தமிழ்க்குடிமகன் அவர்கள் மதுரை யாதவர் கல்லூரி முதல்வராக இருந்தபோது நடைபெற்ற கல்லூரிகளுக்கான பேச்சுப் போட்டியில், மதுரை சட்டக் கல்லூரி மாணவனாக (1986) கலந்து கொண்டு நான் பெற்ற பரிசுதான், தலைவர் கலைஞர் அவர்களின் விரல்களைத் தொடுவதற்கும், என்னைப் பாராட்ட ஓரிரு வாழ்த்து முத்துகளை என் காதுகளில் அவர் அள்ளித் தெளிப்பதற்கும், தட்டிக்கொடுத்து என் தோள் மீது அவரது கை படுவதற்கும் காரணமாக இருந்தது. அந்த விநாடிகளில் நான் இந்த மண்ணில் மீண்டும் பிறந்ததாக உணர்ந்தேன்.

அவரையும் அவருடைய தமிழையும் அவற்றோடு கலந்த அவரின் அரசியல் ஆளுமையையும் அறிவதற்கு நான் அப்போது காட்டிய ஆர்வம், பின்னாளில் அரசியலில் நான் நுழைவேன் என்பதற்கான முகாந்திரமாக இருந்ததில்லை. பின்னாளில் கலைஞரின் ‘போர்வாள்’ என்று அழைக்கப்பட்ட வைகோ அவர்களின் பிரிவால் ஏற்பட்ட ‘இடைவெளி’ எங்களைப் போன்ற இளைஞர்களை அரசியலிலும் கழகத்திலும் கை நீட்டி வரவேற்று இடமளித்தது. விளைவு, 1996ஆம் ஆண்டு பெரம்பலூர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் ஆனேன். மதிப்பிற்குரிய ஆண்டிமடம் சிவசுப்பிரமணியன் அவர்களும், அமைச்சர் கே.என்.நேரு அவர்களும் தலைவர் கலைஞரிடம் என்னை அறிமுகப்படுத்தி முன்னிறுத்தியதால் கழகத்திலும் தேர்தல் களத்திலும் தொடங்கியது என்னுடைய பயணம்.

அன்று முதல் தலைவர் கலைஞரைப் பின்னொற்றி ஒரு புள்ளியாய்த் தொடங்கிய எனது அரசியல் பயணத்தைப் பெரும் கோலமாய் ஆக்கி, இறுதிவரை கலையாமல் காப்பாற்றி, தன்னோடு என்னை அரவணைத்த அன்னை அவர்.

2007 டிசம்பர் மாதம் இன்றைய முதல்வர் அன்றைய இளைஞரணிச் செயலாளர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இளைஞரணியின் முதல் மாநில மாநாட்டில் (திருநெல்வேலி) இளைஞரணியின் அணிவகுப்பைத் தொடங்கி வைக்கும் வாய்ப்பினை தலைவர் கலைஞர் எனக்கு வழங்கினார்.

அம்மாநாட்டில் நிறைவுப் பேருரையாற்றும்போது குறிப்பிட்ட வாசகங்கள் இன்னமும் என்னுள் நன்றியாய் ஊற்றெடுத்துக் கண்ணீராய் மாறி கன்னத்தில் அவ்வப்போது வழிந்தோடும். “நான் தம்பி ஸ்டாலினுக்குச் சொல்கிறேன், உனக்கு நான் தந்தை என்றாலும்கூட, என்றைக்கும் நான் குடும்ப உறவோடு, குடும்பப் பாசத்தோடு, குடும்பம் தான் பெரிது என்று நடந்தவன் அல்ல என்பது உனக்கு நன்றாகத் தெரியும். என்னுடைய வாழ்க்கையில் என்னை அறிந்தவர்கள் உணர்வார்கள். பேராசிரியர் உணர்வார், வீராசாமி உணர்வார், தம்பி துரைமுருகன் உணர்வார். அண்மைக்காலமாக என்னோடு அதிகமாக இருக்கிற தம்பி ஆ.இராசா உணர்வார்.” (முரசொலி 17.12.2007) என்று அவர் குறிப்பிட்ட வாசகம்தான் என்னை இப்போதும் எப்போதும் இயக்கும் சக்தியாகவே உணருகிறேன். தலைவர் கலைஞர் அவர்களின் அந்த நம்பிக்கையை, என் வாழ்நாளின் கடைசி நிமிடம் வரை நெஞ்சில் நிறுத்தி, கழகம் காக்க வேண்டும் என்ற கடமை உணர்ச்சியும், நன்றிப் பெருக்கும் என்னுள் இப்போதும் ஒருங்கே பீறிடுகின்றன. இதயத்தில் இவ்வளவு பெரிய இடத்தை எனக்கு அவர் கொடுக்கக் காரணம் என்ன?

**கட்சிக்குள் பல தரப்பட்ட தொண்டர்கள், தலைவர்கள், களப்பணியாளர்கள், இட்ட ஆணையை நிறைவேற்றும் வல்லமை ஆற்றல்மிக்க தளகர்த்தர்கள், அவருக்காக உணர்ச்சி மேலிட்டு உயிர் கொடுக்கவும் துணியும் தொண்டர்கள் பலர் இருந்தாலும் அவர்களையெல்லாம் அன்பால் பாசத்துடன் அவர் அரவணைத்து, கட்டிக் காப்பாற்றும் சகோதரனாய், நண்பனாய், தந்தையாய் அவர் இருந்தபோதும், அவருக்குள் எப்போதும் இமைப்பொழுதும் அகலாமல் இருந்தவை திராவிடக் கொள்கைகளும், அதற்கு அரணாய் விளங்கும் பெரியாரும் அண்ணாவும்தான்.**

நாடாளுமன்றத்தில் என்னை நெறிப்படுத்திய என் ஆசான் முரசொலி மாறன் அவர்கள் 2002ஆம் ஆண்டு அப்போலோ மருத்துவமனையில் எதிர்கொண்ட இதய நோய்க்காக அறுவை சிகிச்சை மேற்கொண்ட நேரம் அது. தினமும் காலை மாலை இருவேளையும் தலைவர் கலைஞர் அவர்கள் முரசொலி மாறன் அவர்களின் உடல்நிலை குறித்து அறிய மருத்துவமனைக்கு வருவார். நான் அப்போது ஒன்றிய மருத்துவத்துறை இணை அமைச்சர் என்பதால், நானும் அவருக்கு உதவியாக மருத்துவமனையிலேயே தங்கிவிட்டேன். தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட அண்ணன் மாறன் அவர்களின் உடல்நலம் கருதி, பார்வையாளர்கள் அவரைப் பார்க்க வரவேண்டாம் என்று மருத்துவர்கள் கண்டிப்பாக அறிவுறுத்தினர்.

அதுதான் ஒரு நோயாளிக்கு நல்லது என்று தீர்க்கமாய் எப்போதும் இருப்பவர் தலைவர் கலைஞர். நான் தினமும் தலைவர் கலைஞருக்கு அண்ணன் மாறன் அவர்களின் உடல்நிலை குறித்து விளக்கும் கடமையை ஏற்றுக்கொண்ட பணிவான தம்பியாய், துறை அமைச்சராய் அவர்முன் அன்றாடம் நிற்கின்ற வாய்ப்பு அப்போதுதான் நேர்ந்தது.



அந்த நேரத்தில் வெளியில் ஒரு பொது நிகழ்ச்சியில் பேசிய தலைவர் கலைஞர், சாதி மத பேதங்கள் கூடாது என்று வலியுறுத்த நினைத்தவர், ‘இந்து’ என்ற சொல்லுக்கு ‘திருடன்’ என்று அகராதியில் ஒரு பொருள் இருப்பதாகப் பேசிவிட்டார். கூட்டணியில் இருந்த வெங்கையா நாயுடு முதல், வெறுப்புகளைப் பேசும் காவிக் கும்பல்கள் வரை கலைஞரை எதிர்த்து கண்டனக்குரல் எழுப்பினர்.

அடுத்த நாள் அப்போலோ மருத்துவமனைக்கு வந்த தலைவர் கலைஞர், அவரோடு வந்திருந்த பேராசிரியர் மற்றும் ஆற்காட்டார் ஆகியோருடன் இதுகுறித்த விவாதத்தில் இருந்தபோது, அண்ணன் மாறன் அவர்களின் உடல்நிலை குறித்து விளக்க அறைக்குள் நுழைந்த நானும் அந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டேன். அப்போது, பயம் கலந்த பணிவோடு, “அய்யா, நீங்கள் கூட்டத்தில் சொன்னது சரிதான்; பேராசிரியர் அவர்களும் திராவிடர் கழக மாநாட்டில் ஏற்கனவே அதை விளக்கிப் பேசியிருக்கிறார். அப்படி ஒரு பொருள் உண்டு என்பது மட்டுமன்று, ‘இந்தியாவுக்குச் சொந்தமான எதுவும்’ (Anything belonging to India), ‘ஒரு பண்பாடற்ற மனிதன்’ (An uncultured broot), ‘விகாரமான ஒரு கறுப்பு நிறத்தவர்’ (Black and ugly) என்று மேலும் மூன்று பொருள்கள் உண்டு. நீங்கள் குறிப்பிட்ட ‘திருடன்’ (A Dacoit) என்ற பொருளும் உண்டு. ‘இந்தி சப்தசாகர்’ என்ற அகராதியில் இவை உள்ளன. அதை வெளியிட்டது வாரணாசியில் உள்ள நாகரிணி பிரச்சார சபா... இராமச்சந்திர வர்மா என்ற சமஸ்கிருத அறிஞர் அதன் ஆசிரியர் என்று குறிப்பிட்டதுடன், அந்தப் புத்தகம் எனது டெல்லி வீட்டில் இருக்கிறது. அதைக் கொண்டு வர ஏற்பாடு செய்கிறேன்” என்று சொன்னேன்.

அப்படியே அடுத்த நாள் காலை எட்டு மணிக்கு அந்தப் புத்தகத்தோடு கோபாலபுரம் சென்றேன். கலைஞரின் தனிச் செயலர் மறைந்த சண்முகநாதனிடம் அந்தப் புத்தகத்தைக் காட்டினேன். அவர் தலைவரிடம் இன்டர்காமில் செய்தியைச் சொன்னார். இருவரையும் தலைவர் மேலே அறைக்கு வரச் சொன்னார். அந்தப் புத்தகத்தில் குறிப்பிட்ட பக்கத்தை வண்ணத்தாளில் குறியிட்டு தலைவரிடம் கொடுத்தோம். பத்து நிமிடம் அட்டைப்படம் முதல் அந்தக் குறிப்பிட்டப் பக்கம் உள்ளிட்ட பகுதிகளைப் படித்துவிட்ட தலைவர் கலைஞர் அவர்கள் என்னை அருகில் அழைத்தார். நெகிழ்ச்சியும் நடுக்கமும் கலந்த உணர்வோடு நான் அவர் பக்கத்தில் சென்றேன். என் கரம் பற்றி அதில் முத்தம் ஒன்று கொடுத்தார். நான் இன்ப அதிர்ச்சி கலந்த ஆனந்தத்தில் தலைவர் காலில் விழுந்து வணங்கினேன்.

அன்று அனைத்து மாலை நாளிதழ்களிலும் தன் சொந்தச் செலவில் ‘இந்து’ என்பதற்கு என்ன பொருள் என்று அரைப் பக்கம் விளம்பரத்தை ஆதாரத்தோடு கொடுத்தார். 1920களில் பிறந்து 1960களில் இந்திய அரசியலிலும் இலக்கியத்திலும் உச்சம்தொட்ட தலைவர் கலைஞர் அவர்களின் முத்தப் பரிசும், 1960களின் இடையில் பிறந்த என் கையில்பட்டபோது ஆன்மிகப் பிடியில் திளைக்கும் ஒரு பக்தன் மருகுவதுபோல் உள்ளத்தால் மயங்கினேன். ஈரம் காயாத அந்த முத்தத்தில் அவர் நேசித்த திராவிடத் தத்துவத்தின்மீது அவருக்கு இருந்த தீராக்காதல் வெளிப்பட்டதை நினைவூட்டிக் கொள்ளும்போதெல்லாம் இப்போதும் என்னைப் புதுப்பித்துக்கொள்வதாக உணர்கிறேன்.

அவரின் சமூகநீதிப் பார்வையின் உயிர்ப்புக்கு எப்போதும் இறப்பே இல்லை. தன்மானத்தைவிட இனமானம் பெரிது என்பதில் பெரியாராகவே வாழ்ந்தவர் அவர். தி.மு.க. ஒன்றியத்தில் பா.ஜ.க.வோடு கூட்டணி வைத்து, அதில் நான் அமைச்சராகவும் இருந்த காலம் அது. ஆம், பா.ஜ.க.வின் மூலாதாரக் கொள்கையான, காஷ்மீருக்கு வழங்கப்பட்ட சிறப்பு அதிகாரமான அரசியல் சட்டத்தின் பிரிவு 370ஐ நீக்குவது, அயோத்தியில் பாபர் மசூதி இருந்த இடத்தில் ராமர் கோயில் கட்டுவது, பொது சிவில் சட்டம் கொண்டு வருவது ஆகியவற்றை நிறைவேற்றக் கூடாது என்ற நிபந்தனையுடன்தான் அன்றைய கூட்டணி அமைந்தது. அந்தக் கூட்டணி திராவிடர் கழகத்துக்கு உடன்பாடாக இருக்கவில்லை. ஜெயலலிதாவுக்கு “சமூகநீதி காத்த வீராங்கனை” என்ற பட்டம் வழங்கி, தலைவர் கலைஞரையும், தி.மு.க.வையும் திராவிடர் கழகத்தின் தலைவர் ஆசிரியர் வீரமணி அவர்கள் கடுமையாக விமர்சித்து விடுதலையில் எழுதியது மட்டுமன்று; இருவரும் அரசியலில் எதிரும் புதிருமாய் இருந்த நேரம் அது.

**தினமும் விடுதலை நாளிதழை முதல் நாள் மாலையே தவறாமல் படிக்கும் பழக்கத்தை வழக்கமாகக் கொண்டவர் கலைஞர். கடுமையான விமர்சனங்கள் வந்தால், தலைவர் மனம் காயப்படக் கூடாது என்பதற்காகத் தனிச்செயலர் சண்முகநாதன் உட்பட எவரும் இயன்ற வரை விடுதலை நாளிதழை மறைத்து வைக்கவே நாங்கள் முயற்சி செய்வோம். ஒருநாள் அது நடந்தது. “விடுதலை நாளிதழ் எங்கே?” என்று அன்றைய தினம் கேட்டார். விடுதலை இதழை தயக்கத்தோடு கொண்டு போய் தலைவரிடம் கொடுத்தோம். படித்துவிட்டு என்னைப் பார்த்தார். திராவிடர் கழகத்திலிருந்து தி.மு.க.வுக்கு வந்தவன் என்பதால் எள்ளலாகக் கேட்டார். “நான் விடுதலையைப் படித்தால் அது உன் குருநாதரைக் காட்டிக் கொடுத்து விடும் என்று தானே மறைத்தாய்” என்றார்.**

**“இல்லை; அவர்மீது எனக்கும் இப்போதெல்லாம் வருத்தம் உண்டு. உங்களுடைய மனம் வலிக்கக் கூடாது என்பதற்காகத்தான் விடுதலையை தரவில்லை” என்றோம். அவ்வளவுதான், “விடுதலை இப்படி வந்தால்தான் அவர் வீரமணி; இல்லையென்றால் அவர் ஈரமணி” என்றார். மலைப்பின் விளிம்புக்கே சென்று அவரின் காலைப் பற்றினேன். “வாக்கு வங்கி அரசியலில் ஓர் அரசியல் கட்சிக்குத் தேர்தல் நேரத்தில் வரும் கூட்டணி நெருக்கடிகளுக்கு நியாயங்கள் பல இருக்கலாம். ஆனால், கொள்கை அடிப்படையில் விமர்சனங்களை அறிந்துகொள்வதில் தயக்கம் வேண்டியதில்லை” என்ற அவரின் வார்த்தைத் தெறிப்பில் அவருடைய ஜனநாயக மாண்பு கண்டு வியந்தேன்.**

நீரடித்தா நீர் விலகும்? அந்தக் கொள்கைத் தலைவர்கள் பின்னர் இணைந்து, திராவிடத்துக்கு உற்ற துணையாய் ஓர் வழி நின்று, திராவிட சமூகத்துக்கு ஆற்றிய பணிகளும், அடுத்த தலைமுறைக்குத் தந்த அறிவுரைகளும் எத்தனை எத்தனை..? தனிமனித முரணை, தத்துவத்தின் முரணாக முன்னிறுத்தாமல், ஒரு விசாலப் பார்வையோடு, வேற்றுமைகளை விழுங்கும் அவரின் ஆளுமை என்னை மெய்சிலிர்க்க வைத்தது. பின்னாளில் இருவரிடமும் இந்த நிகழ்வைப் பகிரும்போதெல்லாம், அவர்களிடம் வெளிப்படும் அந்த வெள்ளந்திச் சிரிப்பில் திராவிடம் மலரும்!

நிறைய இருக்கிறது இன்னும், நினைவுகள் நீளப் பட்டுவிடக் கூடாது என்றாலும், நெஞ்சில் நின்ற சிலவற்றை மறைக்கக் கூடாது என்பதால் இன்னும் சில... 2ஜி வழக்கில் நான் பதவி விலகிய நேரம்... “தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, அண்ணல் அம்பேத்கர் போன்ற அரசியல் சீர்திருத்தத் தலைவர்கள் காட்டிய வழியில் தொடர்ந்து செல்பவரும், என் உள்ளம் கவர்ந்த தம்பிமார்களில் ஒருவராக விளங்கி வருபவரும், பழைய திருச்சி மாவட்டம், பெரம்பலூர் பகுதியில் பட்டிக்காட்டுப் பொட்டலில் பூத்துக் குலுங்கி வரும் புரட்சியாளர் அருமைத்தம்பி”... என்றெல்லாம் முரசொலியில் எழுதி என்னைப் பெருமைப்படுத்திய தலைவர் அவர்.

பிறகு பிணையில் வந்து வழக்கு நடக்கும் ஒவ்வொரு வாரத்தின் இறுதியிலும் அவரைச் சந்தித்து வழக்கின் முன்னேற்றம் குறித்துப் பேசுவேன். பொதுவாகக் குற்றவாளிகள் குற்றவியல் வழக்கில் தாமாக முன்வந்து கூண்டில் ஏறி சாட்சியம் அளிப்பதில்லை. அரசுத்தரப்பு சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்தாலே போதும். ஊழல் குற்றச்சாட்டுக்கு உள்ளான இந்தியாவின் கவர்னர் ஜெனரல் வாரன் கேஸ்டிங் வழக்கு முதல் ஜெயலலிதா தண்டிக்கப்பட்ட சொத்துக் குவிப்பு வழக்கு வரை குற்றம் சாட்டப்பட்ட எவரும் சாட்சிக்கூண்டுக்குப் போனதில்லை. தேவையில்லாத சிக்கல் வரும் என்பது மட்டுமன்று, அது ஆபத்தும்கூட. அந்தச் சாட்சியத்தை அடிப்படையாக வைத்தே குற்றம்சாட்டப்பட்டவர் தண்டிக்கப்பட அதிக வாய்ப்பும் உண்டு.

**நானே சாட்சிக்கூண்டுக்குப் போய் சி.பி.ஐ.யின் குறுக்கு விசாரணையை எதிர்கொள்ள, நீதிமன்றத்தில் நானாக முன்வந்து மனு போட்டபோது, அவரைப் பலரும் குழப்பி விட்டிருந்தனர். “இதுதேவையா?” என்று என்னை சற்றே கடிந்த குரலில் கேட்டார். அவசியத்தை விரிவாக விளக்கிச் சொன்னேன். ஒரு நீண்டப் பெருமூச்சுக்குப் பின் அவர் சொன்னார்: “உன் நம்பிக்கையைப் பாராட்டுகிறேன். என்னைச் சந்திக்கும் பலரும் விசாரணை நீதிமன்றத்தில் தண்டனை பெறத்தான் நேரிடும் என்று அஞ்சுகின்றனர். எப்படியாவது நீ ஜெயித்து வரணும். இல்லையென்றால் இனிமேல் எந்த ஒரு தாழ்த்தப்பட்டவருக்கும் தொலைத் தொடர்புத்துறை போன்ற முக்கியத் துறைகளை நிர்வகிக்கும் திறமையும் அருகதையும் இல்லை என்று இன எதிரிகள் முத்திரை குத்தி விடுவார்கள்” என்று சொன்னபோது திகைத்துத் தேம்பி நின்றேன்.**

**தனக்குக் களங்கம் வரும் என்றோ - கட்சிக்குக் கறை வரும் என்றோ கவலைப்பட வேண்டியவர், தான் கொண்ட சமூகநீதிக் கொள்கைக்குப் பங்கம் வந்துவிடுமே, பரிகாசப்படுத்தப்படுமே என்று கவலைப்பட்ட ஒரு தலைவனை தமிழ்நாடு இனி மேலும் பெறுமா என்று அறுதியிட்டுக் கூற முடியாது. மீண்டும் பணிந்து அவரது பாதம் தொட்டேன்.**

2ஜி வழக்கின் தீர்ப்பு 2017ஆம் ஆண்டு டிசம்பர் 21ஆம் தேதி வெளிவந்து நான் விடுதலை செய்யப்பட்டபோது தலைவர் கலைஞர் முழு சுயநினைவில் இல்லை என்றாலும், அதற்கு அடுத்த நாள் சென்னை வந்து கோபாலபுரத்தில் தீர்ப்பை அவர் காதில் உரக்கச் சொன்னபோது, அவர் முகத்திலிருந்து வந்த புன்னகை இன்றும் எனக்கு வழிகாட்டும் ஒளிவிளக்கு. தீர்ப்பு வந்த நாளன்று இரவே டெல்லியிலிருந்து அவருக்கு நான் ஒரு கடிதம் எழுதினேன். அதில், ‘என்னைப் பனிக்குடத்தில் வைத்துப் பத்திரப்படுத்திய தாய் நீங்கள்’ என்று குறிப்பிட்டிருந்தேன். அவர் இன்று நம்முடன் இல்லை. ஆனால்,என்னைப் பொறுத்தவரை அந்தப் பனிக்குடம் இன்னும் உடைந்து போய் விடவில்லை. என் உயிரில், உணர்வில் அது உடையாமல்தான் இருக்கிறது. நான் அதில் பாதுகாப்பாக இருக்கவே எப்போதும் விரும்புகிறேன்.

வாழ்க கலைஞர் புகழ்!! வெல்க திராவிடம்!!!

ஆ.இராசா எம்.பி.,
துணைப் பொதுச்செயலாளர், தி.மு.க.

## “ஒன்றே குலம்; ஒருவனே தேவன்”


**ஒரு நிகழ்ச்சிக்கு,**
**திருவாரூருக்கு,**
**பேரறிஞர் அண்ணா**
**அவர்கள் வந்திருந்தார்கள்.**
**அண்ணாவுக்கு முன்பு**
**பேசியவர்கள், தங்கள்**
**மதத்தைப் பற்றிய சில**
**அற்புதங்களை எல்லாம்**
**எடுத்துச் சொன்னார்கள்.**
**இறுதியாகப் பேசிய அறிஞர்**
**அண்ணா சொன்னார்கள்:**
**“அற்புதங்கள் இருப்பதற்காக**
**உங்கள் மத விழாவிற்கு நான்**
**வரவில்லை.**
**அற்புதங்கள்**
**நிகழ்த்துவதென்றால்,**
**அத்தகைய ஆண்டவர்கள்**
**எங்களிடத்திலே ஆயிரக்**
**கணக்கிலே இருக்கிறார்கள்.**
**எங்கள் ஆண்டவன், நெற்றிக்**
**கண்ணைத் திறந்தாலே**
**திரிபுரமும் எரியும். எங்கள்**
**ஆண்டவன், ஒரு வேலாயுதத்தை**
**விட்டால்,**
**பல மலைகளைக் குடையும்;**
**எனவே நான் அற்புதங்களுக்காக**
**வரவில்லை; அன்புக்காக**
**வந்திருக்கிறேன்; நீங்கள்**
**உலகத்தை வழிநடத்திச் செல்கிற**
**அமைதிக்காக வந்திருக்கிறேன்.**
**நீங்கள் மக்களையெல்லாம்**
**மக்களாகப் பாவிக்கின்ற அந்த**
**எண்ணத்தை மதித்து நான்**
**வந்திருக்கிறேன்” என்று**
**சொன்னார்கள்.**

**எனவே அந்த அண்ணா**
**வழியில் “ ஒன்றே குலம்,**
**ஒருவனே தேவன் “ என்ற**
**திருமூலரின் வாக்கியத்தை**
**அறிஞர் அண்ணா அவர்கள்**
**தமிழ்நாடெங்கும் பரப்பினார்கள்.**
**அதையே மக்கள் அனைவரும்**
**பின்பற்ற வேண்டும். அந்த**
**அளவிற்குப் பின்பற்றினாலே**
**நாட்டில் உள்ள**
**மூட நம்பிக்கைகள்**
**தொலைந்து,**
**நல்ல சமதர்ம**
**சமுதாயத்தை**
**உருவாக்க**
**முடியும்.**

**-கலைஞர்**



# முத்தமிழறிஞர் கலைஞருடன் இருந்த காலம்தான், எனது பிறவிப் பயனடைந்த காலம்!



ஆர்.எஸ்.பாரதி
அமைப்புச் செயலாளர், தி.மு.க.

தமிழைக் காக்கவும் தமிழ் மொழியைக் காக்கவும் தமிழ்நாட்டைக் காக்கவும் அல்லும் பகலும் உழைத்த "உலகத் தமிழர்களின் ஒப்பற்றத் தலைவர்' முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களோடு நான் இருந்த காலம்தான் எனது பிறவிப் பயனடைந்த காலம்" எனச் சொல்லலாம். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடன் எனக்கு ஏற்பட்ட முதல் சந்திப்பு என்பது 1962ல்தான். இச்சந்திப்பு என் வாழ்நாளில் மறக்க முடியாத ஒரு நிகழ்வு. காரணம், எனது 15-வது வயதில் கலைஞர் அவர்களை அவரது கோபாலபுரம் இல்லத்தில் நேரில் சந்தித்து, அவரிடம் ஆலந்தூரில், கழகக் கூட்டம் நடத்துவதற்கு அன்றைய ஆலந்தூர் செயலாளர் ஆலந்தூர் பாலன் அவர்களுடன் தேதி கேட்கச் சென்று சந்தித்ததுதான் முதல் சந்திப்பு.

அச்சந்திப்பின் போது தேதி கேட்டபோது, பாலன் அவர்களிடம் 'சினிமா தொடர்பான நிகழ்ச்சிகளெல்லாம் இருக்கிறது. அதனைப் பார்த்துவிட்டு தேதி உறுதி செய்து தருகிறேன்' என்று கூறியதோடு, பாலன் அவர்களின் கனத்த உடலைப் பார்த்துவிட்டு, 'நீ வரவேண்டாம். இந்த பையனை அனுப்பி வை. அதற்கு முன் சென்னை மாநகராட்சி தேர்தல் நிதியாக ஐம்பது ரூபாயை அறிவகத்தில் செலுத்தி, இரசீதுடன் இந்த பையனை அனுப்பி வை. தேதியை உறுதி செய்து தருகிறேன்' என்று கூறினார்.

அதன்பின்னர், உரிய தொகை செலுத்திவிட்டு அவரிடம் அந்த ரசீதைக் காண்பித்ததும் தேதி அளித்தார். நான் சிறிய பையன்தானே என்று என்னை அலட்சியப்படுத்தாமல், கட்சிப் பணியாற்றுகின்ற இளைஞரை ஊக்குவிக்க வேண்டுமென்ற எண்ணத்தில், என்னை அனுப்பி வைக்கச் சொன்னவர் கலைஞர். ஆக, என்றைக்கும் இளைஞர்களை ஊக்கப்படுத்துகிற தலைவராக அவர் விளங்கினார் என்பதற்கு இதுபோன்ற சான்றுகள் ஏராளம்.

அதற்குப் பிறகு, 1967 சட்டமன்றத் தேர்தலில், கழகம் வெற்றி பெற்று முதன்முதலாக ஆட்சியைப் பிடித்தவுடன், கலைஞர் அவர்கள் தனது கோபாலபுரம் இல்லத்தில், அறிஞர் அண்ணா உள்ளிட்டோருக்கு காலை உணவு ஏற்பாடு செய்திருந்தார். அன்று காலை, என்னுடன் பரங்கிமலை தொகுதியில் எம்.ஜி.ஆருக்காக தேர்தல் பணியாற்றிய மு.க.முத்துவை கோபாலபுரம் இல்லத்தில் சந்தித்து நன்றிகூறச் சென்றிருந்தேன். அப்போது, என்னைப் பார்த்த கலைஞர் என்னையும் சிற்றுண்டி அருந்திட அழைத்து, கோபாலபுரம் இல்லத்தில் அவர் முன்னிலையில் சிற்றுண்டி பரிமாறப்பட்டது. அதன் பிறகு, இதே கோபாலபுரம் இல்லத்தில், நெருக்கடி காலத்தில் கலைஞர் அவர்களுடன் தங்கி இருந்து பணியாற்ற வாய்ப்பு கிடைத்தது எனது பேறு.

1972ல் எம்.ஜி.ஆர். கழகத்தை விட்டு பிரிந்த நேரத்தில், பரங்கிமலை தொகுதியில் எம்.ஜி.ஆரோடு கழகப் பொறுப்பில் இருந்த பெரும்பாலோர் அவரது கட்சியில் சேர்ந்துவிட்டனர். ஆலந்தூரில் ம.ஆபிரகாம் மற்றும் நான் ஆகிய நாங்களிருவர் மட்டுமே எம்.ஜி.ஆருடன் செல்லவில்லை என்பதை அறிந்த கலைஞர், அன்றைய சென்னை மாவட்ட தி.மா.மு.க. அமைப்பாளராக இருந்த முரசொலி செல்வம் அவர்களிடம் சொல்லி, என்னையும் ம.ஆபிரகாம் ஆகிய இருவரையும் கோபாலபுரத்திற்கு நேரில் வந்து சந்திக்கச் சொல்லி அழைத்தார். முதலமைச்சர் கலைஞர் அவர்களை, கோபாலபுரம் இல்லத்தில் சந்தித்த போது, நான் எம்.ஜி.ஆரோடு நெருக்கமாக இருந்ததை அறிந்து, 'என்னய்யா, வருத்தப்படுகிறாயா?' என்று கேட்டார் கலைஞர். இக்கேள்விக்கு என்னால் பதில் சொல்ல முடியாமல், கதறிக் கதறி அழுதுவிட்டேன்.

'எல்லோரும் சென்றுவிட்டார்கள்' என்று கண்ணீர் மல்க கலைஞர் அவர்களிடம் கூறினேன். 'எல்லாம் சரியாகிவிடும். வருத்தப்படாமல் சென்று கழகப் பணியாற்றுங்கள். எந்தப் பிரச்சினையாலும் எனது செயலாளர் கருப்பண்ணன் அவர்களிடம், நீயோ அல்லது ஆபிரகாமோ நேரில் வந்து கூறுங்கள்' என்று கலைஞர் அன்று கூறி அனுப்பியதுதான், இன்று வரை நான் உறுதியுடன் கழகப் பணியாற்றி வருவதற்கு அச்சாரமாக அமைந்தது. அதன்படியே பல்வேறு எதிர்ப்புகளிடையே எம்.ஜி.ஆரை எதிர்த்து, ஆலந்தூர் பகுதியில் கழகப் பணியாற்றி வந்தேன்.

கழகத்தின் கொள்கைப் பரப்புச் செயலாளர் சிட்டிபாபு அவர்களுடன் பிப்ரவரி 1ஆம் தேதி காரைக்குடியில் நடைபெறவிருந்த 'ஒளிமிகு ஒன்பதாண்டு' எனும் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக ஜனவரி31ஆம் தேதி தாம்பரத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பங்கேற்றுவிட்டு, கூட்டம் முடிந்ததும் காரைக்குடிக்குச் செல்வதாக திட்டமிட்டிருந்தோம். 1976ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் தேதி மாலை ஆறு மணிக்கே கழக ஆட்சி கலைக்கப்பட்டுவிட்டது.


இச்செய்தி தாம்பரம் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டபோது கிடைத்ததால், கூட்டத்தைப் பாதியிலே முடித்துவிட்டு, கோபாலபுரத்திற்கு தலைவர் கலைஞர் அவர்களைச் சந்திக்கச் சென்றோம். சிட்டிபாபு அவர்களுடன் கலைஞர் அவர்களை மாடியில் சென்று சந்தித்தேன். அன்று மாலை 6 மணியிலிருந்து கோபாலபுரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை கலைஞர் தனது 'நெஞ்சுக்கு நீதி'யில் விரிவாக எழுதியுள்ளார்.

**அன்று இரவு முழுவதும் சிட்டிபாபு, நான், புலவர் ஆடலரசு ஆகியோர் கோபாலபுரத்து வீட்டினருகே உள்ள கிருஷ்ணன் கோவில் வாயில் படியிலேயே கொட்டும் பனியில், குளிரில் அமர்ந்திருந்தோம். விடியற்காலை மூன்று மணியளவில் இதனை கண்ட கலைஞர் அவர்கள், 'அவர்களை வீட்டிற்குள் வந்து அமரச் சொல்' என்று உதவியாளர் செயல்மணி அவர்களிடம் சொல்லி அனுப்பி, நாங்கள் சென்று அங்கே அமர்ந்திருந்தோம். இப்படிப்பட்ட நெருக்கடியான நேரத்தில்கூட தன்னுடைய தொண்டர்களுக்கு உடல் நலம் கெட்டுவிடக் கூடாது என்று தாயுள்ளத்தோடு எண்ணியவர்தான் கலைஞர்.**

2001ல் கழகம் ஆட்சியில் இல்லாதபோது, தினந்தோறும் காலை, மாலை என இருவேளையும் தலைமைக் கழகத்திற்கு வந்து செல்வது எனது வாடிக்கை. அத்துடன் மாலையில் அண்ணா அறிவாலயத்திலிருந்து சி.ஐ.டி. காலனி இல்லத்திற்கு அவருடனேயே அவரது காரில் பயணம் செய்து, வீட்டிற்குச் சென்று அங்கேயே இரவு 10.30 மணி வரை, அவருடன் உரையாடிவிட்டுத்தான் எனது வீட்டிற்குச் செல்வது எனது வாடிக்கையாக இருந்தது. அவ்வாறிருக்க, ஒருநாள் காலை அண்ணா அறிவாலயத்திற்கு வந்த கலைஞர் அவர்கள், அன்றைய அமைப்புச் செயலாளராக இருந்த கல்யாணசுந்தரம் அவர்களிடம் 'எங்கே பாரதி, இன்னும் வரவில்லையா?' என்று கேட்க, கல்யாணசுந்தரமோ 'அண்ணன் பாரதி அவர்கள், பாரத் ஸ்கேன் சென்டரில் 'எம்.ஆர்.ஐ. ஸ்கேன்' எடுக்க சென்றிருக்கிறார்' என்று சொன்னவுடன், பதறிப் போன கலைஞர் அவர்கள், நேற்றிரவு பத்து மணி வரை என்னுடன் பேசிக் கொண்டிருந்தானே? இதைப் பற்றி ஒன்று சொல்லவில்லையே..? அவன் உடம்புக்கு என்னாச்சு..? எம்.ஆர்.ஐ.ஸ்கேன் எடுக்கும் அளவுக்கு என்னாச்சு அவன் உடம்புக்கு?" என்று படபடப்புடன் எல்லோரிடமும் கேட்க, அத்தகவல் எனக்கு தெரிந்தவுடன், நேரில் அவரைச் சந்தித்து 'ஜென்ரல் செக்அப் செய்யத்தான் சென்றேன். எம்ஆர்ஐ ஸ்கேன் எடுத்துப் பார்த்ததில் பாதிப்பு எதுவும் இல்லை, நார்மலா இருக்கிறது' என்று விளக்கமளித்தேன். இந்த விளக்கத்தைக்கூட ஏற்காமல், ஏம்பா, உனக்கு உடம்புக்கு என்னென்னு சொல்றதில்லையா" என பல்வேறு கேள்விகளால் என்னைத் துளைத்து எடுத்து கோபித்துக் கொண்டார். என் தந்தை உயிரோடிருந்தால் எப்படி துடிதுடித்திருப்பாரோ, அப்படிப்பட்ட ஒரு துடிதுடிப்பையும், படபடப்பையும் அவரது முகத்தில் கண்டேன். பின்னர், நான் விளக்கமாக விவரித்ததும்தான் அமைதியானார்.

**இந்நிகழ்வை நினைக்கும் போது என்ன தவம் செய்தேனோ" என்ற வரிகள்தான் நினைவுக்கு வருகிறது. இதுபோன்று எனக்கு மட்டுமல்ல, கழகத்தில் இருக்கின்ற தனக்கு நெருக்கமானவர்களுக்கு ஏதேனும் உடல்நிலை சரியில்லை என்று கேள்விப்பட்டாலே, கலைஞர் அவர்கள் தாங்கிக் கொள்ள மாட்டார்.**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடன் பழகிய காலத்தில், நடந்த பல்வேறு நிகழ்வுகள் என் மனதில் 'பசுமரத்தாணி' போல பதிந்துள்ளது. அவற்றைச் சொல்ல வேண்டுமென்றால் பக்கங்கள் கொள்ளாது. தாயாய், தந்தையாய், தனயனாய், தோழனாய் என அனைத்து உறவுகளுடன் ஒட்டுமொத்த வடிவமாய் இருந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர்.**



## வாழ வைக்கும் கருவிகள்!

எப்படியோ தமிழ் உணர்ச்சி இன்றைக்கு மங்கிப் போய்க் கொண்டிருக்கின்ற கால கட்டம். நாம் எல்லாம் ஒரே இனம் ஒரு சாதி தமிழ் சாதி என்பது மறைந்து, பல சாதிகளாகப் பிரிந்திருக்கின்ற இந்தக் கால கட்டத்தில், நமக்கு இராமானுசருடைய ஆன்மீகமும் தேவைப்படுகிறது; அறிஞர் அண்ணா அவர்களுடைய அறிவியக்கமும் தேவைப் படுகிறது; தந்தை பெரியார் அவர்களுடைய சுய மரியாதை இயக்கமும் தேவைப்படுகிறது; உத்தமர் காந்தி அடிகளுடைய அஹிம்சா தத்துவமும் தேவைப்படுகிறது; புத்தருடைய சமத்துவக் கொள்கையும் தேவைப்படுகிறது.

இப்படி ஒரு இனம் ஒரு சமுதாயம் உய்விக்கப்பட வேண்டுமேயானால், ஒரு சமுதாயத்தை ஒற்றுமைப் படுத்த வேண்டுமேயானால், எங்கெங்கிருந்து என்னென்ன கருவிகள் கிடைக்கிறதோ, அந்தக் கருவிகளையெல்லாம் பெற்றுத்தான் தீர வேண்டும். அந்தக் கருவிகளை ஒழுங்காகப் பயன்படுத்தினால், செம்மையாகப் பயன்படுத்தினால், நம்முடைய எண்ணங்கள் நிறைவேறும்.

- கலைஞர்

1998

அளவில் வடபுலத் தலைவர்கள் எல்லாம் கூடி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை இந்தியக் குடியரசுத் தலைவராகத் தேர்வு செய்யலாம் என முடிவு எடுத்தார்கள். அதை கலைஞர் அவர்களிடம் அவர்கள் தெரிவித்தபோது, **“நான் தமிழ்நாட்டு மக்களுக்கு ஆற்ற வேண்டிய பணிகள் இன்னும் ஏராளமாக இருக்கின்றன. அவற்றை விட்டுவிட்டு ஒன்றிய அரசில் எந்தப் பதவியையும் ஏற்க நான் விரும்பவில்லை”** என்று கூறி, அவர்கள் கூற்றை ஏற்க மறுத்துவிட்டார். அப்படி, இந்திய அளவில் கலைஞர் அவர்கள் ஒரு மாநிலத் தலைவராகவே இறுதிவரை திகழ்ந்த போதிலும், அவர் எண்ணத்தால், செயலால், மொழிப் பற்றால், இயற்றிய திட்டங்களால், ஏழை எளிய மக்களை உயர்த்துவதில் பற்றிக் கொண்டிருந்த உணர்வுகளால், அவர் செய்த தியாகங்களால், இணையிலா அவர் ஓர் உலகத் தலைவராகவே போற்றப்படத் தக்கவர் என்பதை எவரும் மறுத்திட வியலாது.



# அண்ணன் கலைஞர்

# இன்றும் என் உணர்வில் இருக்கிறார்; என்னை இயக்குகிறார்!

அமைச்சர் **எ.வ.வேலு**
கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்

அந்த உலக மாமேதையைப் பலர் தொலைக் காட்சிகளில் பார்த்து மகிழ்ந்திருப்பார்கள்; தூரத்தில் நின்று அவர் ஆற்றிய உரைகளைக் கேட்டுக் களித்திருப்பார்கள்; ஊர்வலத்தில், வாகனத்தில் அவர் செல்லும்போது பார்த்துப் பரவசமடைந்திருப்பார்கள். நானோ, அவர் அருகில் நின்று பேசி, அவர் ஆணையைக் கேட்டுச்செயல்பட்டு, அவர் தந்த பொறுப்புகளை ஏற்று, அவர் வியக்கும்படிப் பணிகளை முடித்துப் பாராட்டுகளைப் பெற்றுள்ளேன். அமைச்சர் பொறுப்பில் அவருக்குக் கீழே பணியாற்றி, அவர் மெச்சத்தக்க வகையில் செயலாற்றி, மக்கள் மனநிறைவு கொள்ளத்தக்க வகையில் கட்சியிலும் ஆட்சியிலும் தொண்டாற்றி அவர் பாராட்டுகளைப் பலமுறை பெற்ற நிகழ்வுகளை யெல்லாம் நொடிதோறும் நினைந்து நினைந்து மகிழ்கிறேன்.

### அண்ணன் அணிவித்த கணையாழி

நான், திருவண்ணாமலை மாவட்டக் கழகச் செயலாளர்; தலைமைக் கழகம் தேர்தல் நிதி வசூல் செய்வது என்று முடிவு எடுக்கப்பட்டது. நாடாளுமன்றத் தேர்தல் வருகிறது. அண்ணன் கலைஞர் அவர்கள் மாவட்டச் செயலாளர்களுக்குள் ஒரு போட்டி வைக்கிறார். “எந்த மாவட்டம் அதிகமாகத் தேர்தல் நிதி தருகிறதோ, அந்த மாவட்டச் செயலாளர்களுக்கு மூன்று தங்க மோதிரம் பரிசு தருவேன். அதையும் என் கரத்தாலேயே அவர்களுக்கு அணிவிப்பேன்” என்கிறார்.

உடனே, அனைத்து மாவட்டச் செயலாளர்களும் களத்தில் இறங்கி நிதி திரட்டும் பணியில் மும்முர மாய் ஈடுபட்டுச் சேர்த்த நிதியைத் தலைவர் கலைஞர் அவர்களிடம் கொண்டுவந்து சேர்த்தோம். **கழக மாநாட்டில் அண்ணன் கலைஞர் அவர்கள் பரிசுக்குரிய மாவட்டச் செயலாளர்கள் யார் என்பதை அறிவிக்கிறார். முதல் பரிசு சேலம் மாவட்டம் அண்ணன் வீரபாண்டியார்; இரண்டாம் பரிசு திருவண்ணாமலை மாவட்டம் அடியேன்; எனது விரல் பற்றி இலட்சக்கணக்கான கழகத் தொண்டர்கள் முன்னிலையில் உடன் தளபதியின் அரவணைப்புடன் அண்ணன் கலைஞர் அணிவித்த கணையாழி இன்னும் என்னிடம் மின்னிக் கொண்டுள்ளது. அண்ணன் கலைஞர் கணையாழி அணிவித்தபோது, எனக்கு ஏற்பட்ட சிலிர்ப்பு இன்றும் என்னை மயங்கச் செய்கிறது!**

### ‘நான் எண்ணியதை முடிப்பதில் தம்பி வேலுவே முதல் இடத்தில் உள்ளார்’ என்றார் அண்ணன் கலைஞர்

பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967இல் தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின் 1.5.1967 அன்று ரூபாய்க்கு 1 படி அரிசி வழங்கும் திட்டத்தை முதன்முதல் சென்னை மாநகரில் தொடங்கி வைத்தார். அடுத்து, கோவையில் தொடங்கினார். எனினும், நிதிநிலை காரணமாக அத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்திட இயலவில்லை. என்றாலும், பேரறிஞர் அண்ணா அவர்களின் எண்ணத்தை நிறைவேற்றும் வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அண்ணா அவர்களின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடத் தொடங்கும் நேரத்தில், 15.9.2008 முதல் தமிழ்நாடு முழுவதும் 1 ரூபாய்க்கு 1 படி அரிசி திட்டத்தை நிறைவேற்றினார்கள். அப்பொழுது, என் பொறுப்பிலிருந்த உணவுத்துறை சார்பில் 1 ரூபாய்க்கு 1 கிலோ அரிசி வழங்கும் திட்டத்தின் தொடக்க விழாவில் உரையாற்றிய பொழுது அண்ணன் கலைஞர் அவர்கள் என்னைப் பார்த்தார் கள், **“நான் மனதில் என்ன நினைக்கி றேனோ அதை என் வாயால் சொல்லாமலேயே, என் கண் அசைவின் மூலம் அதை உணர்ந்து செய்து முடித்திடும் ஆற்றலுள்ளவர்களில் தம்பி வேலு அவர்கள்தான் முதலிடத்தில் உள்ளார்”** என்று கூறி என்னைப் பாராட்டியது இன்றும் என் கண்களில் நிழலாடிக் கொண்டிருக்கிறது!

### என் பெயர்க் காரணம் கூறிய கலைஞர்

கழகத்தின் பொதுக்கூட்ட நிகழ்ச்சி ஒன்றில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் என் பெயரைக் குறிப்பிட்டுப் பாராட்டிக் கூறிய சில வார்த்தைகள் இன்றும் என் செவியில் எதிரொலித்துக் கொண்டே இருக்கின்றன.

**கழகத்தைக் கட்டிக் காப்பதிலும், எதிரிகளை வீழ்த்துவதிலும் நான் ஏவாமலேயே, நான் எண்ணுவதை / ஏவி முடிப்பதிலேயே குறியாய் இருப்பதில் வல்லவர். அதனால்தான் அவர் பெயரே “எ.வ.வேலு” என்று என்னைப் பாராட்டினார் அண்ணன் கலைஞர், அந்தக் கணத்தை என் வாழ்வில் மறக்க முடியுமா?**

### உழைக்கும் உணர்வைத் தந்த உந்துதல்கள்

கழகம் எதிர்க்கட்சியாக இருந்த காலங்களில் நான் சென்னையில் தங்கி இருந்த நாள்களில் காலையில் கோபாலபுரம் செல்வேன். பின்னர் அங்கிருந்து தலைவர் கலைஞர் அவர்களுடன் முரசொலி அலுவலகத்திற்குச் செல்வதும், பின் அவரைக் கோபாலபுரம் இல்லத்தில் கொண்டு வந்து விடுவதும் வழக்கமாகும். அன்றியும், மாலை நேரங்களில் கோபாலபுரத்தில் அவரைச் சந்திப்பதை வாடிக்கையாகக் கொள்வேன். அவர்களுடன் கூடவே இருந்து, இரவு அவர் படுக்கையறைக்குச் சென்றபின்தான் நான் என் வீட்டுக்குத் திரும்புவேன்.

இடைப்பட்ட நான்கு, ஐந்து மணி நேரங்களில் அண்ணன் கலைஞர் அவர்கள் தம்முடைய கடந்த கால அனுபவங்களை என்னுடன் பகிர்ந்து கொள்வார்கள். அப்பொழுது எனக்கு ஏற்படும் அனுபவங்கள் அவரைப் போலவே இலக்கை அமைத்துக்கொண்டு உழைக்க வேண்டும் என்ற உணர்வையும் உந்துதல்களையும் எனக்கு அளிக்கும். அந்த நினைவுகள் எல்லாம் எழுந்து எனக்கு இன்றும் அவ்வப்போது மகிழ்ச்சியையும் நெகிழ்ச்சியையும் தந்து கொண்டிருக்கின்றன.

### 90 வயதிலும் அவரின் திரையுலகச் சிந்தனைகள்

அண்ணன் கலைஞர் அவர்கள் எப்பொழுதும் தனிமையை விரும்பாதவர். எந்த நேரத்திலும் தம்பிமார்கள் புடை சூழவே காட்சி அளிப்பார்.

அப்படி, ஒரு நாள் தம்பிமார்கள் புடைசூழ அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தபோது, திரை உலகத்தோடு தொடர்பு கொண்டிருந்தவன் என்ற முறையில் என்னிடம் மட்டும் 90 வயதிலும் திரைப்படத்துறை தொடர்புடைய செய்திகளைக் கேட்டார்.

### திரை உலகத்திற்கே கர்த்தா கலைஞர்!

நான் ஒரு முறை இரவு 9 மணி அளவில் அண்ணன் கலைஞர் அவர்களுடன் தனியாக இருந்தபொழுது அவரிடத்தில் ஒரு கேள்வியை எழுப்பினேன். அதாவது, “பல திரைப்படக் கதாநாயகர்கள் உங்களால் உருவானார்கள். அதற்கு, உங்கள் கதை வசனத்தின் ஆற்றல் முக்கிய காரணமாகும் அவரால் உருவாக்கப்பட்டவர்களில் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர், சிம்மக் குரலோன் சிவாஜி, இலட்சிய நடிகர் எஸ்.எஸ்.ஆர். ஆகியோர் பற்றி ஒரு கேள்வி” என்று கூறிக் கேட்டேன்.

“எம்.ஜி.ஆர்., சிவாஜி, எஸ்.எஸ்.ஆர். மூவருக்கும் வசனம் எழுதும் பொழுது ஏதேனும் அளவுகோல் வைத்துக் கொள்வீர்களா?” என்று கேட்டேன்.

அப்போது அண்ணன் கலைஞர் அவர்கள், **“சிவாஜி ஏற்ற இறக்கத்தோடு வசனத்தை அருமையாக உச்சரித்துப் பேசுவார். அவருக்கு ஏற்றது போல் எழுச்சிமிக்க நீண்ட வசனங்களை எழுதுவேன்.**

**எஸ்.எஸ்.ஆர் உணர்ச்சி பொங்கப் பேசுவார். அவருக்குப் பொருத்தமான உணர்ச்சிகரமான வசனம் எழுதுவேன். எம்.ஜி.ஆர். அவர்களுக்கு இளமையும் எழுச்சியும் துள்ளலும் கொண்ட இரண்டு மூன்று வரிகள் கொண்ட வசனங்களை எழுதுவேன்”** என்று ஒவ்வொருவருக்கும் எப்படி எழுதுவேன் என எனக்குத் தெரிவித்தார். அப்போது, அண்ணன் கலைஞர் அவர்களின் அரிய சிந்தனைத் திறனை எண்ணி வியந்தேன். அவர் திரைக்கதை வசன கர்த்தா அல்ல, திரை உலகத்திற்கே கர்த்தா அவர்களே!

இதையெல்லாம்விட ஒரு நாள் இரவில் அண்ணன் கலைஞர் அவர்களோடு இணைந்து உட்கார்ந்து உணவு உட்கொள்ளும் வாய்ப்பு எனக்கு அமைந்தது. அப்போது என்னையும் அருகில் உட்கார வைத்துக் கொண்டு, “நித்யா, வேலுக்கு ஒரு தட்டு கொடு; அவருக்கும் ஒரு தோசையைக் கொடு”; என்று கூறினார். அவர் காலடியில் உட்கார்ந்து உணவு உட்கொண்ட அந்தக் காட்சி, ஒரு 7 நட்சத்திர ஓட்டலில் உட்கார்ந்து உணவு உட்கொண்டால்கூட அவரின் தாய்ப் பாசத்திற்கு ஈடாகாது. அண்ணன் கலைஞர் அவர்களின் காலடியில் அமர்ந்து உண்ட அந்த நினைவு இன்றும் என் மனதில் பசுமையாக நிழலாடிக்கொண்டு என்னை உணர்ச்சிப் பிழம்பாக்கு வதை என்னால் இன்றும் உணர முடிகிறது.

### குறைந்த விலையில் உணவுப் பொருள்கள் வழங்கும் சிறப்புப் பொது விநியோகத் திட்டம் தொடங்கிய வரலாறு

2007 ஆம் ஆண்டு அண்ணன் கலைஞர் அவர்கள் முதலமைச்சர்; நான் உணவுத்துறை அமைச்சர், **‘‘விலைவாசி விஷம்போல ஏறிக் கொண்டே போகிறது.. ஏழைகளும், நடுத்தர மக்களும் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். உங்கள் உணவுத் துறை சார்பாக என்ன நடவடிக்கை எடுப்பீர்கள்?”** என்று ஒரு கேள்விக்கணையை என்னிடம் திடீரெனத் தொடுத்தார் அண்ணன் கலைஞர்.

அதன் விளைவு நான், என் துறையின் செயலாளர் சண்முகம், ஐ.ஏ.எஸ்., நிதித்துறைச் செயலாளர் ஞானதேசிகன், ஐ.ஏ.எஸ்., அரசின் தலைமைச் செயலாளர் திரிபாதி ஐ.ஏ.எஸ். ஆகியோருடன் தலைமைச் செயலகத்தில், முதலமைச்சர் அறையில், அவர் முன்னால் இரண்டு மணி நேரம் அமர்ந்து இந்த விலைவாசி உயர்வு தொடர்பாக ஆலோசனையில் ஈடுபட்டோம். அப்போது முதலமைச்சர் கலைஞர் அவர்களின் அரிய ஆலோசனைகளைப் பெற்றோம். கலைஞர் அவர்கள் அப்பொழுது வழங்கிய ஆலோசனைகளின் அடிப்படையில் கோப்புகளைத் தயார்செய்து, கோப்புகளை முதலமைச்சர் அலுவல கத்திற்கு நானே எடுத்துச் சென்றேன். அந்தக் கோப்பில் முதல்வர் கலைஞர் அவர்களிடம் கையெழுத்தினைப் பெற்றேன். முதல்வர் கலைஞர் அவர்கள் கையெழுத்திட்ட அந்தக் கோப்புகள் அனைத்தும் விலைவாசிக் கொடுமைகளைக் குறைத்து ஏறத்தாழ 2 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்குப் பயன் தரும் சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தை உருவாக்கி நடைமுறைப் படுத்துவது தொடர்பானதாகும்.

14.4.2007 முதல் சென்னையிலும் மே 27 முதல் பிற மாவட்டங்களிலும் இந்தச் சிறப்புப் பொதுவிநியோகத் திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ் நியாய விலைக் கடைகள் மூலம் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில், கோதுமை இவை எல்லாம் குறைந்த விலையில் வழங்கப்பட்டன. அந்தத் திட்டம் இன்றும் நடைமுறையில் உள்ளது. **விலை குறைந்த அந்தப் பொருள்கள் மக்களுக்கு இன்றும் கிடைக்கின்றது என்றால் முதல்வர் கலைஞர் அவர்கள் அன்று போட்ட ஒரு கையெழுத்துதான் காரணம். 2007 முதல் இன்று வரை அந்தத் திட்டம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்த ஆணையும் அதைப் பெற்ற வரலாற்று நிகழ்வும் இன்றும் என்னை இயக்கிக் கொண்டு என் நெஞ்சில் ஊக்கத்தையும் உழைக்கும் உணர்வையும், உந்துதல்களையும் அளித்துக் கொண்டிருக்கிறது.**

பஞ்சாப் மாநிலத்தில் ஒருவர் உச்சநீதிமன்றத்தில் பொது விநியோக முறை குறித்து பொது நல வழக்கு ஒன்றைத் தொடர்ந்தார்.

அதன் விளைவாக, ஓய்வு பெற்ற உச்சநீதி மன்ற நீதிபதி தலைமையில் ஒரு குழு அமைத்து மாநிலத்திற்கு சென்று ஆய்வு செய்து உச்சநீதி மன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்ய பரிந்துரை செய்தார்கள். அந்தத் தருணத்தில் உச்சநீதிமன்ற நீதியரசர்கள் தன்வீர் பண்டாரி, தீபக் வர்மா ஆகிய இருவரும் “தமிழ்நாடு மாநில பொது விநியோகம் சிறப்பாக உள்ளது, இந்தியாவிலே சிறப்பான மாநிலம் தமிழ்நாடுதான்” என பாராட்டினார்கள்.

எனது, இரண்டாவது மகன் டாக்டர்.கம்பன் திருமணத்தில் தலைமை தாங்கி வாழ்த்தி பேசிய தலைவர் பொது விநியோகத் திட்டம் சிறப்பாக இருக்கிறது என உச்ச நீதிமன்ற நீதியரசர்கள் பாராட்டி பேசியுள்ளது, “தம்பி வேலுவின் உழைப்புதான் காரணம்! உணவுத் துறையின் மூலம் எனது அமைச்சரவையில் மணிமகுடம் சூட்டியது போன்ற உணர்வு எனக்கு உள்ளது” என பாராட்டியது இன்னும் அவருக்கு என் கடமையை செய்ய வேண்டும் என்ற உந்து சக்தி என் உள்ளத்தில் மேலோங்கியுள்ளது.

**இப்படி எத்தனையோ நிகழ்ச்சிகளை அண்ணன் கலைஞர் அவர்களுடன் இணைந்து அவர் ஆணைகளையும் அறிவுரைகளையும் கேட்டுப் பெற்றுப் பணிபுரிந்த அனுபவங்களை நினைவு கூரும்போது அவை அனைத்தும் என் உயிருக்கும், உணர்வுக்கும் ஊக்கம் தருபவையாகும்; என்றே எண்ணுகிறேன். அண்ணன் கலைஞர் இன்றும் என் உணர்வில் இருக்கிறார்; என்னை இயக்குகிறார். அந்த உணர்வோடு அவரை எண்ணி, எண்ணி என் இறுதிக் காலம் வரை எனது பணிகளைத் தொடர்வேன். அது ஒன்றே என் வாழ்வின் இன்பம்! இன்பம்!! இன்பம்!!!**

# “மூதறிஞர் விருது”



“ஆதித்தனார் அவர்களுடைய பிறந்தநாள் விழாவைக் கொண்டாடுகின்ற இந்த நாளில் ‘மூதறிஞர்’ என்ற ஒரு விருதினை எனக்கு வழங்கிச் சிறப்பித்துள்ள நண்பர் சிவந்தி ஆதித்தன் அவர்களுக்கும், இந்த விருதினை வழங்கிய ஆளுநர் பேரன்பிற்குரிய, பெருமதிப்பிற்குரிய மேதகு பாத்திமா பீவி அவர்களுக்கும் என்னுடைய நன்றியை, வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விருதுடன் நம்முடைய சிவந்தி ஆதித்தன் அவர்கள் ஒரு இலட்சம் ரூபாய் பொற்கிழியை எனக்கு வழங்கியுள்ளார்கள். கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு தஞ்சைப் பல்கலைக் கழகத்தில் ராஜராஜ சோழன் பெயரால் நான் எழுதிய “தென்பாண்டிச் சிங்கம்” என்ற வரலாற்று நூலுக்குப் பரிசு வழங்கப்பட்டது. அந்தப் பரிசினை வழங்கிய சங்கர் தயாள் சர்மா அவர்கள் எனக்கு அவருடைய அன்பின் காரணமாக பட்டத்தையும் வழங்கினார்.

அந்த நிகழ்ச்சியிலே ஒரு இலட்சம் ரூபாய் பொற்கிழியும் தரப்பட்டது. அதனை நான் தஞ்சைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ச் சான்றோர்கள் சிலருடைய பெயரால் ஒரு அறக்கட்டளையை உருவாக்கி அவர்களுடைய பெயரால் அவ்வப்போது சொற்பொழிவுகளை ஏற்பாடு செய்து, மாணவர்களும் மற்றவர்களும் பயன்பெறுகின்ற வகையிலே செலவழித்திடுங்கள் என்று அந்தத் தொகையை தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கே தந்து விட்டேன். வழங்கியவர்கள் தமிழ்ப் பல்கலைக் கழகத்தார். திருப்பித் தந்தது அவர்களிடமே!

இப்பொழுது நிலைமை அப்படி இல்லை, (பலத்த சிரிப்பு) இன்று காலையில் சிவந்தியின் அண்ணன் ராமச்சந்திர ஆதித்தன் தமிழக அரசின் சார்பில் நடத்தப்படுகின்ற ஏழைப் பெண்களுடைய திருமண உதவித் திட்டம் மூவலூர் ராமாமிர்தம் அவர்களுடைய பெயரால் வழங்கப்படுகின்ற திட்டத்திற்கு நான் விடுத்த வேண்டுகோளின்படி பலர் கோடிக் கணக்கில், இலட்சக்கணக்கில் நிதி வழங்கியிருக்கிறார்கள் என்றாலும் காலையிலே ஒரு இலட்சம் ரூபாயை அந்த நிகழ்ச்சியிலே வழங்கினார்கள்.

காலையில் ஒரு நிகழ்ச்சியும், மாலையிலே ஒரு நிகழ்ச்சியும் நடைபெறுவது எவ்வளவு எங்களுக்கு இலாபகரமானது என்பதற்கு (சிரிப்பு) இதைச் சொல்கிறேன். காலையிலே ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டதை நான் முதலமைச்சர் நிவாரண நிதியிலே சேர்த்து ஏழைப் பெண்களின் திருமண நிதிக்கு இது பயன்படுத்தப்படும் என்று குறிப்பிட்டேன்.

அதைப்போலவே இப்பொழுது சிவந்தி அவர்கள் இந்த விழாவிலே எனக்காக வழங்கியுள்ள ஒரு இலட்சம் ரூபாயை முதலமைச்சர் நிவாரண நிதியில் சேர்த்து ஏழைப் பெண்கள் திருமண உதவித் திட்டத்திற்கு வழங்குகிறேன்.

‘மூதறிஞர் விருது’ எனக்குக் கிடைத்திருப்பதற்கான காரணங்களைச் சொன்னார்கள். மொழியிலே நான் கொண்டுள்ள பற்று, அரசியலிலே நான் ஏற்றுள்ள நிலை, அண்ணாவின் தம்பியாக இருந்தது,இருப்பது, பெரியாரின் தொண்டனாக நான் வாழ்ந்தது, பகுத்தறிவுக் கொள்கையில் எந்த நேரத்திலும் யாரோடும் சமரசம் செய்து கொள்ளாமல் உறுதியாக நிற்பது, சமூக நீதி, மாநில சுயாட்சி, இந்தியாவின் ஆட்சி மொழிகளில் ஒன்றாக தமிழும் ஆகவேண்டுமென்ற அந்தக் குறிக்கோள் - இவைகளில் நெஞ்சுறுதியோடு நானும் இருந்து, என் தலைமையிலே இருக்கின்ற இயக்கத்தையும் வழி நடத்திச் செல்வது என்பதை இங்கே பாராட்டி, வாழ்த்திய அனைவரும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

இத்தகைய வாய்ப்புகளையெல்லாம் உருவாக்கித் தந்த நண்பர் சிவந்தி ஆதித்தன் அவர்களை என்ன பாராட்டினாலும் தகும். நான் 1924ஆம் ஆண்டு பிறந்தேன். பிறந்த போதே என் வீட்டில் கள்வர்கள் புகுந்து, என் தாயின் தாலிச்சரடு உட்பட அத்தனையையும் திருடிச் சென்றார்கள், அப்பொழுதும் நான் அழாமல் இருந்த காரணத்தால் தப்பித்தேன். அழுதிருந்தால் என் குரல்வளையில் கட்டை விரலை வைத்து நசுக்கியிருப்பார்கள். நல்ல வேளையோ அல்லது என் போதாத காலமோ அழாமல் இருந்துவிட்டேன். இன்றைக்கு சுகம், துக்கம் இவைகளையெல்லாம் அனுபவிப்பது மாத்திரமல்ல, அவைகளுக்கிடையே மொழிக்கும் நாட்டிற்கும் தொண்டாற்றுகிறேன் என்கின்ற அந்த இன்பத்தைப் பெறுகிறேன் அல்லவா?

அதற்காக அந்தக் கள்வர்களின் கட்டை விரலை வாழ்த்துக்கிறேன் என் கழுத்திலே அதை வைத்து அழுத்தாமல் இருந்ததற்காக. என்னோடு இணைந்து, இன்றைக்கு என்னுடைய சகோதரர், நாவலாசிரியர் - எழுத்தில் தனக்கென ஒரு முத்திரையைப் பொறித்துக் கொண்டிருப்பவர் பிரபஞ்சன் அவர்களும் விருது பெற்றிருக்கிறார். அவருடைய அண்ணன் என்ற முறையில் நான் அவரை வாழ்த்துகிறேன். பாராட்டுகிறேன். அவருக்கு விருது வழங்கிச் சிறப்பித்த சிவந்தி அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னைப் பொருத்தவரையில் நான் இன்னும் நீண்ட நாள் வாழ வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். ஆட்சிப் பொறுப்பிலே இருக்க வேண்டுமென்பதற்காக அல்ல, அதிகாரங்களை அனுபவிக்க வேண்டுமென்பதற்காக அல்ல, தமிழுக்குத் தொண்டு செய்வதற்காக. என்னுடைய கண்கள் இறுதியாக மூடும்வரை, அண்ணாவின் இதயத்தை எடுத்துச் சென்று மீண்டும் அண்ணாவிடத்திலே ஒப்படைக்கின்ற அந்தக் காலம் விரைவிலே வந்துவிடாமல் நான் இன்னும் கொஞ்ச காலம் வாழ்ந்து இன்னும் ஆற்ற வேண்டிய தொண்டினை ஆற்றி இங்கே தரப்பட்ட “மூதறிஞர்” என்ற பட்டத்திற்குரியவனாக என்னை ஆக்கிக் கொள்கிற வரையில் வாழ வேண்டுமென்று இயற்கையை வேண்டி என்னை வாழ்த்திய அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்”

**- முத்தமிழறிஞர் கலைஞர்**

(28.09.1997)



# நூற்றாண்டு நாயகர் கலைஞர்

**டி.கே.எஸ். இளங்கோவன்**
(கழக செய்தித் தொடர்பு தலைவர்)

ஏறத்தாழ இருபதாண்டு காலம் தலைவர் கலைஞர் அவர்களுடனேயே பயணித்த பேறு பெற்றவன் நான். என்னுடைய பள்ளிப் பருவத்திலேயே என் தந்தையாருடன் சென்று அவரை அடிக்கடி சந்திக்கும் வழக்கமுள்ள நான், அவரது சிந்தனைத் திறன், திட்டமிடல் ஆகியவற்றால் கவரப்பட்டவன். அவரது கட்டுப்பாடு மிகுந்த வாழ்க்கை அவரை எந்த அளவுக்கு உயர்த்தியது என்பதையும் என் தந்தை சொல்லக் கேட்டும், நானும் பார்த்து உணர்ந்து கொண்டவன்.

என் தந்தையார் தத்துவ மேதை டி.கே.சீனிவாசன் அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் ஏறத்தாழ 1940களில் தொடங்கி நண்பர்களாகப் பயணித்தனர். நீதிக்கட்சி, திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் என தொடர்ச்சியாக இணைந்து பணியாற்றியவர்கள்.

1962ஆம் ஆண்டு தி.மு.கழகம் காங்கிரஸ் ஆட்சிக்கு எதிராக விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம் நடத்தியது. அப்போராட்டத்தில் ஈடுபட்ட கழக முன்னணியினர் கைது செய்யப்பட்டு, சிறைக்கு அனுப்பப்பட்டனர். அந்தக் காலத்தில் நாங்கள் மந்தைவெளிப் பாக்கத்தில் குடியிருந்தோம். சிறைவாசம் முடிந்து என் தந்தையார் உள்ளிட்ட கழகத் தலைவர்கள் வெளி வந்த சில நாட்களில் எனது பாட்டி, எனது தந்தையின் தாயார், உயிர் நீத்தார். கழக முன்னோடிகள் பலரும் இல்லம் தேடி வந்து என் தந்தையாருக்கு ஆறுதல் சொன்னார்கள். தலைவர் கலைஞர் அவர்களும் வீட்டுக்கு வந்தார். வந்தவர் அந்தப் பகுதியின் கழகப் பொறுப்பாளராக இருந்த டி.கே.கபாலி அவர்களை அழைத்து, **“டி.கே.சீனிவாசன் இப்பொழுதுதான் சிறையிலிருந்து வெளி வந்திருக்கிறார். அவரிடம் பணம் இருக்காது. அவரது தாயார் எனக்கும் தாயாரைப் போல இருந்தார். நீங்கள் அங்கேயே இருந்து இறுதிச்சடங்கு வரை உடனிருங்கள். மொத்த செலவுக்கும் நான் பணம் தருகிறேன்”** என்று சொல்லி பணம் கொடுத்துவிட்டுச் சென்றார். அப்போது எட்டு வயது சிறுவனாக இருந்த எனக்கு, தலைவர் கலைஞர் அவர்கள்மீது கொண்ட மதிப்பும், மரியாதையும் பலமடங்கு அதிகரித்தது.

என் தந்தையார் இறந்த நேரத்தில் திருச்சிக்கு ஒரு நிகழ்ச்சிக்காக சென்றிருந்தார் தலைவர் கலைஞர். அங்கிருந்தே எனக்கு தகவல் அனுப்பினார் “நான் மறுநாள் காலை வந்துவிடுகிறேன். அதுவரை காத்திருக்கவும்” என்று அவர் சொன்னார். மறுநாள் காலை எங்கள் இல்லத்துக்கு வந்து இறுதி அஞ்சலி செலுத்தினார்.

**என்னை தனது பிள்ளைகளில் ஒருவராகத்தான் அவர் கருதினார். கழகத்தில் என்னை முக்கிய பொறுப்பில் அமர்த்தி அழகு பார்த்தவர். இருமுறை என்னை நாடாளுமன்றத்திற்கு அனுப்பி வைத்தவர். தமிழ் நாட்டில் எந்தப் பகுதியிலாவது கட்சிக்குள் பிரச்சினை என்று செய்தி வந்தால், உடனே என்னை அழைப்பார். ”நீ பிரச்சினை குறித்து விசாரித்தாயா?” என்று கேட்பார். நான் விசாரிக்கவில்லை என்று தெரிந்தால் என்னைக் கடுமையாகத் திட்டுவார். இரவு தலைமைக் கழகத்திலிருந்து அவரது இல்லம் செல்லும் வரை காரிலேயே என்னை திட்டிக் கொண்டு வருவார். வீடு சென்ற பிறகு அம்மாவை அழைத்து “ இளங்கோவனை கடுமையாக திட்டிவிட்டேன். அவனுக்கு காப்பி கொடு” என்று சொல்வார். இப்படி என்னை நெக்குருகச் செய்த பல நிகழ்வுகளை சொல்லிக் கொண்டே போகலாம்.**

சென்னை, அண்ணா அறிவாலயத்தில் வெளியூரிலிருந்து வரும் தோழர்கள் “ஊருக்கு எப்படி திரும்பிப் போவீர்கள்” என்று கேட்பார். அவர்கள் இரவில் காரில் செல்கிறோம் என்று சொன்னால், “இரவுப் பயணம், பத்திரமாகச் செல்லுங்கள்” என்று கூறுவார்.

அடுத்தநாள் காலை தொலைபேசி மூலம் என்னை அழைத்து, “அந்தத் தோழர்கள் ஊர்போய் சேர்ந்துவிட்டார்களா என்று விசாரித்தாயா?” என்று கேட்பார். நான் “இல்லை” என்று சொன்னால், உடனே என்னைக் கடுமையாகக் கடிந்து கொள்வார். “இரவுப் பயணம் பாதுகாப்புக் குறைவு. அவர்கள் பத்திரமாக வீடு போய் சேர்ந்தார்களா என விசாரிக்க வேண்டாமா? இப்படி அக்கறையற்று இருக்கிறாயே?” என்று என்னை திட்டுவார்.

**கழகத்தின் ஒவ்வொரு தொண்டர் மீதும் கொண்ட அக்கறை என்னை நெஞ்சு நெகிழச் செய்யும். கழகத்தவரை தன் குடும்பத்தவராகப் பார்த்த மாபெரும் தலைவர் அவர்.**

**தலைவருக்குத் தலைவராக, தந்தைக்கு தந்தையாக, ஆசானுக்கு ஆசானாக விளங்கிய அவரிடமிருந்து நான் கற்றுக் கொண்டது ஏராளம். அவரது அன்பும், பாசமும் என் நெஞ்சில் என்றும் நிலைத்திருக்கும்.**

# இளம் தலைமுறையின் பாசறை - கலைஞர்!

**இனமான பேராசிரியர்**



1930 - 1940 ஆம் ஆண்டுகளில் பெரியாரின் பச்சை அட்டைக் குடியரசு ஏடும், 1940 -1950களில் அறிஞர் அண்ணாவின் திராவிட நாடும், எப்படி இளைஞர் தம் உள்ளங்களில் தனியாட்சி நடத்தி வந்தனவோ, அதைப் போன்றே **முரசொலியும் - இளைஞர் உள்ளமெல்லாம் கொள்ளை கொண்டது எனலாம். உணர்ச்சி ததும்பும் நடையில், கிளர்ச்சியூட்டும் கருத்துகளை மாற்றுக் கருத்துடையார் கலக்கமுறும் அளவுக்குத் தாங்கி வந்த ஏடு முரசொலி.**

**அதன் முதலாமாண்டு விழா 1943 -ஆகஸ்ட் அளவில் அமைந்த போது; மு.க. அவர்கள் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுமாறு, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பயின்று கொண்டிருந்த என்னையும் எனது நண்பர் இரா.நெடுஞ்செழியன் (நாவலர்) அவர்களையும் அழைத்திருந்தார்.**

அப்பொழுதெல்லாம்-நமது இயக்கத் தோழர்கள் எவரும், திருமணம் என்றோ, நீத்தார் நாள் என்றோ, சுயமரியாதைச் சங்க ஆண்டு விழா என்றோ அழைத்துவிட்டால் போதும், அதைத் தவறவிடமாட்டேன். ஒரு வகையில் கூறினால், அந்த நிகழ்ச்சிகட்குச் சென்று பேசிவிட்டாலே எனக்குப் பெருமை. நாட்டையே திருத்திவிட்டதாக ஓர் எண்ணம். அந்தக் காலத்தில், இந்தத் தன்மான இயக்கத்தவர்கட்கு வாய்த்திருந்த சட்டமன்றமே பொதுமேடைதான். நூறுபேர் அளவில் கூடிய கூட்டமென்றாலும் பெரிய கூட்டந்தான். கூட்டம் நடத்துவதாக கேட்டவர்களால் - எந்தக் காரணத்தாலேனும் கூட்டம் நடத்த முடியாவிட்டால்தான் எங்களுக்குத் தோல்வி ஏற்பட்டது போல் கவலை ஏற்படும். சைக்கிள், மாட்டுவண்டி, குதிரைவண்டி, லாரிகள் எதுவானாலும் எம் போன்றோர் பயணம் தொடரும். இந்த நிலையில் திருவாரூரில் இருந்து ஒரு மாணவர் ; பழக்கமில்லாத புதியவர் அழைத்திருந்தாலும், அதைத் தவறவிடுவேனா? வருவதாக வரைந்தேன் ஒரு அஞ்சல் அட்டையில், ஆரூர் வந்து சேரும் புகைவண்டியின் நேரத்தையும் குறிப்பிட்டு எழுதினேன். பின்னும் ஓர் அட்டையில் என்னுடன் வருவதாகக் கூறியவாறு நண்பர் நெடுஞ்செழியனும் வந்தார். அன்றைய சூழலில் எனது இளைய உள்ளத்தில் நானே ஒரு தலைவர் என்பது போன்றதொரு மயக்கம்.

விடியற்காலையில் ஆரூர் சேரும் வண்டியில் சிதம்பரத்திலிருந்து போய்ச் சேர்ந்தோம். அப்பொழுது எல்லாம் புகைவண்டியில் மூன்றாம் வகுப்பு உண்டு. அதில் பயணம் செய்யத்தான் எங்களால் முடிந்தது என்றாலும், அதிலும் ஓர் மகிழ்ச்சியே. மக்களைத் தேடிக் கொண்டு அலையும் என் போன்றவருக்குப் பயணிகள் நெருக்கத்தில் பயணம் செய்வது கடினமாகவா தோன்றும்? அதிலும் யாராவது சிறிதே தெரிந்தவரோ, புதியவரோ உரையாட முன் வந்தால் எனக்குத் தெரிந்தவற்றை எல்லாம், எனது கொள்கை விளக்கமாகக் கூறித் தீர்த்துவிடுவேன். என்னுடன் உரையாடுபவர் ஏற்றாலும் ஏற்காவிடிலும் அது பற்றி எண்ணுவதே இல்லை. எண்ணினால் அன்றோ கவலைப்படுவதற்கு. இளங்கன்று பயமறியாது என்றொரு பழமொழி நினைவுக்கு வருகிறது. பயமறியாது என்பது மட்டுமல்ல, பயனும் அறியாது என்று இப்பொழுது தெரிகிறது.

இளைய வயதினருக்குப் பெரியவர்களிடத்தில் எதிர்வாதம் செய்வதில் அவர்களை அறியாமலே ஒரு ஆர்வம் இருக்கும். அது ஒரு கொள்கையில் கொண்ட பற்றுடன் உருக்கொண்டால் அந்த எதிர்வாதம் தனது கொள்கையில் தெளிவடைவதற்கு அல்லாவிடினும் தெரியாதவற்றைத் தெரிந்து கொள்ளும் ஆர்வம் கொள்ளுவதற்கு ஏதுவாகும். அப்படிப்பட்ட நல்வாய்ப்பாக அந்த உரையாடல்கள் அமைந்து, என்னை - என் போன்றோரை உருவாக்கி இருக்கக் கூடும்.

பாரதக் கதையைப் பேசியே பாழ்பட்ட நாடு; இராமாயணத்தை அப்படியே நம்பி ஏற்றதாலேயே இழிவுற்ற நாடு, புராணங்களுக்கு மரியாதை செலுத்தியே அறிவிழந்த நாடு, நமது சுயமரியாதைக் கொள்கைகளை ஏற்றாலும், எதிர்த்தாலும் அது பற்றிப் பேசி வைப்போமே என்று வெறி கொண்டிருந்த காலம்.

ஆரூர் நிலையம் சேர்ந்த நாங்கள் எதிர் பார்த்து இருப்பவர் யாராகலாம் என்று கண்களைச் சுழல விட்டோம். யார் என்று தெரியத்தான் வழியில்லையே, அவர்களாகத்தான் எங்களைக் கண்டுபிடிக்க வேண்டும். என்னைப் பார்த்தாலும் எளிதில் எவரும் அன்பழகன் இவன்தான் என்று நம்பமாட்டார்கள். உயர்நிலைப் பள்ளி மாணவனைப் போன்றே ஒல்லியான சிறுவன் தான், நல்ல வேளையாக நெடுஞ்செழியன் உடனிருந்தார். முரசொலி ஆசிரியர் கருணாநிதியும் அவரது பள்ளித் தோழர் தென்னனும் எங்களைக் கண்டு கொண்டனர்.

அவர்களுக்குக் கூட நெடுஞ்செழியன் அவர்களின் இளந்தாடியைக் கொண்டே அடையாளங் கண்டதாகக் கூறினர். நிலையத்தில் இருந்து அழைத்துச் சென்று ஓர் இல்லத்தில் தங்கவைத்தனர். அப்பொழுது கருணாநிதியும் தோற்றத்தில் மிகவும் இளையவராகத்தான் இருப்பார். எங்களைத் தங்கவைத்த இடத்திற்கு உணவு வந்தது. உண்டோம். சிறிது ஓய்வெடுத்தோம். காலையில் ஓர் மண்டபத்தில் முரசொலி ஆண்டு விழா கூட்டம், மாலையிலோ ஒரு பொதுக்கூட்டம், இருநூறு, முந்நூறு பேர் இருப்பர். காலையிலும், மாலையிலும் மு.க. அவர்கள் என்னையும் நெடுஞ்செழியனையும் வரவேற்றுப் பேசி முரசொலியின் பகுத்தறிவுப் பணிக்கு அனைவரும் ஆதரவு தர வேண்டும் என்று பேசினார்.

**நெடுஞ்செழியன் அவர்கள் தமிழரின் வீர உணர்வை புரட்சிக் கவிஞரின் பாட்டின் மூலம் விளக்கிப் பேசினார். நானும் வேகமாகப் பேசினேன். வைதீகக் கொள்கைகளைக் கண்டித்தும் சாதி வேற்றுமையைச் சாடியும் அந்தக் கூட்டத்தில் ஆற்றிய உரையை அன்றைய மாணவர் அரங்கசாமி (அரங்கண்ணல்) பலமுறை பாராட்டி உரைத்திருக்கிறார்.** ஆனால் நான் என்ன பேசினேன் என்பது எனக்குத் தெளிவாகத் தெரியாது. பின்னர் இருபது ஆண்டுகள் வரையிலும் கூட அப்படிப்பட்ட ஒரு நிலைதான். தமிழினம் தாழ்ந்திடச் சூது செய்திட்ட சூழ்ச்சிமிக்கப் பகைவர் எதிரே உள்ளது போலவும், அவர்களைக் கண்டனம் செய்து பேசியவுடன் அவர்களெல்லாம் விடைபெற்றுக் கொண்டு ஓடி விடுவது போலவும் ஓர் எண்ணம்.


ஆனால், இப்போழுதுதான் புலனாகிறது, அந்தச் சூழ்ச்சியைச் செய்தது தனிமனிதர்கள் அல்லர்; கொள்கை கொண்ட அமைப்பு - அதுவும், நம்முடைய மக்கள் உள்ளத்திலேயே மதிப்புப் பெற்று அவர்தம் நம்பிக்கைக்குரியதான ஓர் வைதீக அமைப்பு என்பது - வைதீக வருணதருமத்தைத் தமதென நம்ப வைத்திட்ட அந்த அமைப்பே, இதிகாச புராணவழியில் நாளும் நமது அறிவைத் திருப்பிவருவது, நம்பத் தகாதவற்றை எல்லாம் நம்ப வைப்பது.

முரசொலி முதல் ஆண்டு விழா அன்றைய நிலையில் சிறப்பாக நிறைவேறியது, பேச்சாளர்களாகிய எங்களைப் பொறுத்தவரையில் முழு வெற்றியே, ஆனால் முரசொலி ஆசிரியரைத்தான் காணவில்லை. விழா நடத்தும் பொறுப்பை ஏற்றவராதலின் அதன் செலவுகளுக்கான தொகையைத் தேடும் வேலை. எங்களையும் வழியனுப்ப வேண்டும். சிதம்பரத்திலிருந்து திருவாரூருக்குக் கட்டணம் ஏறத்தாழ ஒன்றேகால் ரூபாய், இருவழிச் செலவும் இருவருக்கும் அளித்திட ஐந்து ஆறு ரூபாய் தேவை. அதற்கு வழி இல்லை. கடன் தரவும் யாரும் இல்லை. அந்த நிலையில் உடனடியாகக் கை கொடுத்தது, அவர் வீட்டில் இருந்ததொரு வெள்ளிக் கிண்ணம். அதை வீட்டாருக்குத் தெரியாமல் தான் எடுத்துச் செல்ல நேரிட்டது. அடமானம் வைப்பதற்கு. வீட்டிலுள்ள பெரியவர்கள் என்ன சொன்னாலும் - அது தவறு என்று ஏற்கக் கூடிய நிலையில் அவர் இருக்கவில்லை. தமிழரின் தன்மானமே வைதீகத்திடம் அடமானம் வைக்கப்பட்டுள்ள போது -அதை மீட்க வெள்ளிக் கிண்ணத்தை அடமானம் வைப்பதுதான் தவறா? என்று கேட்கத்தான் அவருக்கோ, எங்களுக்கோ தோன்றியிருக்கும். அவ்வாறு கிடைத்த தொகையோடு வந்துதான் - ஆளுக்கு இரண்டரை ரூபாய் கொடுத்து வழியனுப்பி வைத்தார் மு.க. அப்படியெல்லாம் அரும்பாடு பட்டுத்தான் முரசொலி முதல் ஆண்டு விழா நிறைவுற்றது.

அதன் பின்னர் மு.க. அவர்கள் எழுதி நடித்த 'சாந்தா அல்லது பழனியப்பன்' என்னும் சீர்திருத்த நாடகத்திற்குத் தலைமை ஏற்க புரட்சிக் கவிஞரையும்; உரையாற்ற என்னையும் அழைத்திருந்தார். இருவரும் கலந்து கொண்டோம். நாடகம் நிறைவேறியது. பின்னர், **ஆரூரில் மு.க. அவர்கள் செயலாளராக இருந்து நடத்தி வந்த தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்ற ஆண்டு விழாவிற்கு அழைக்கப்பட்டேன். திரு.கே.ஏ. மதியழகன், டாக்டர் இலக்குவனார், அக்காலத்தில் தனபாக்கியம் என்றழைக்கப்பட்ட திருமதி பொற்செல்வி ஆகியோருடன் கலந்து கொண்டேன். இளந்தலைமுறையினரை இயக்கப் பற்றுடையவர்களாக மாற்றும் பாசறையாகத் திகழ்ந்தது அந்த மு.க. மன்றம்.**

**'முரசொலி' மலர் -1992**

## கலப்புத் திருமணம் - சாதி!



**நா**ம் சமபந்தி விருந்து நடத்தி விட்டோம். ஆனால் எத்தனை பேர் கலப்புத் திருமணத்திற்குத் தயாராக இருக்கிறோம். திருமணம் ஆனவர்களைக் கேட்கவில்லை; இன்னும் ஆகாதவர்களைக் கேட்கின்றேன். ஆனவர்கள், நான் தயார் என்று கையை உயர்த்தி விடாதீர்கள். நான் கேட்பதற்கு உரிமை படைத்தவன்.


என்னுடைய குடும்பத்திலேயே பல கலப்புத் திருமணங்களை நடத்தி வைத்தவன் நான்; அதிலும் குறிப்பாக ஆதி திராவிடப் பெண்ணை என்னுடைய மருமகளாக ஏற்றுக் கொண்டவன் நான். ஏற்றுக் கொண்டவன் மட்டுமல்ல; நானே வரவழைத்து என்னுடைய மகனுக்குக் கட்டி வைத்தவன்.

இன்றைக்கும் ஆதி திராவிடப் பேரக் குழந்தையை, பேத்திக் குழந்தையை எடுத்துக் கொஞ்சுகின்றேன்; முத்தமிடுகின்றேன். ஒரு பெண்ணை எடுத்தது மாத்திரமல்ல; என்னுடைய வீட்டுப் பெண்ணை, என்னுடைய பேத்தியை ஒரு தலித் - ஆதி திராவிடர்க்குக் கலப்புத் திருமணம் செய்து வைத்ததும் நான்தான்.

எனவே அந்த உரிமையோடு கூடத்தான் நான் சொல்லுகின்றேன். கலப்புத் திருமணம் சாதியை ஒழிப்பதற்கு பெரும் கருவியாகப் பயன்படும் என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது.

**- கலைஞர்**

# கலைஞருக்கு நிகர் கலைஞர்!



கலைஞரின் எழுத்து வல்லமை, பேச்சு வல்லமை, நாடக நூல்களை எழுதிய வல்லமை, நாடகங்களில் நடித்த திறமை இவைகள் ஒவ்வொன்றையும் பற்றி எடுத்துச் சொன்னார்கள்.

கலைஞர் இத்தகைய திறமைகளைப் பெற்றிருப்பது எவ்விதம் என்பதை உணர்ந்தால்தான் இந்தப் பாராட்டு விழாவின் உட்கருத்து புரியும்.

வண்ணமான எண்ணத்தை மிகச் சிறு பருவத்தில் பெற்றவர் கலைஞர். அவர் இளமைப் பருவம் முதல் நாட்டு மக்களுக்கு எதையாவது சொல்ல வேண்டும் என்று ஆர்வத்தோடு சில எண்ணங்களை உருவாக்கிக் கொண்டு கையேட்டுப் பிரதிகள் மூலமாகச் சொல்லி கட்டுரை வடிவத்தில், கவிதை வடிவத்தில், நாடக வடிவத்தில், சினிமாத்துறை மூலம் சொல்லி இன்றைய தினம் அமைச்சராக இருந்து அந்த எண்ணங்களுக்கு எல்லாம் அமைச்சர் என்ற முறையில் எந்த அளவுக்கு வடிவம் கொடுக்க முடியுமோ, அந்த அளவுக்கு வடிவம் கொடுத்து வருவதை நாமெல்லாம் மகிழ்ச்சியோடு பாராட்டுகிறோம்.

**ஒரு நாளைக்குக் கலைஞர் எத்தனை மணிநேரம் தூங்குகிறார் என்பதை யாராவது அவருக்குத் தெரியாமல் பார்த்தால்தான் இந்தத் திறமை பெற்றதன் அடிப்படை உழைப்பு என்பதை உணர்வீர்கள்.**

கடுமையான உழைப்பு என்று நான் குறிப்பிட்டேன். கடுமையான உழைப்பு செய்வதற்கேற்ற உடல் வளம் ஒரு துளியும் கிடையாது. பேசுகிறபோது வீரம் சொட்டும், பேசி உட்கார்ந்த உடனே வியர்வை கொட்டும். வீட்டுக்குச் சென்ற உடனே மருந்துச் சொட்டுகள் உள்ளே செல்லும். 2 மணி நேரத்துக்குப் பிறகு வீட்டில் உள்ளவர்கள் கன்னத்திலே, கை வைத்துக் கொள்பவர்களும், முகவாய்க் கட்டையைத் தடவிக் கொள்பவர்களும், பெரியவர்களாக உள்ளவர்கள் தலையிலே தட்டிக் கொள்பவர்களும், இப்படிப் போய் அலைவானேன், இப்படி வந்து அவதிப்படுவானேன். இப்படிப் போய் வேலை செய்வானேன், இங்கு வந்து இப்படிக் கடிப்பானேன் என்று கவலைப் பட்டுக் கொள்பவர்களும், சுற்றி இருக்கிற டாக்டர்கள், இது இந்த வியாதியாக இருக்குமா, அந்த வியாதியாக இருக்குமா என்று அவர்களுக்குள்ளே பேசிக் கொள்வதையும் நீங்கள் பார்த்தீர்களானால், அந்தக் கடும் உழைப்புக்கு ஏற்ற உடற்கட்டு அவரிடத்திலே இல்லை.

எப்படியோ சொல்லி வைத்தாற் போல் தமிழ் நாட்டின் தலைவர்களில் யாருக்கு உடற்கட்டு இருக்கிறதோ அவர்கள் தங்களது உடற்கட்டை வேறு பல காரியங்களுக்குப் பயன்படுத்துகிறார்களே தவிர, இப்படிப்பட்ட காரியங்களுக்குப் பயன்படுத்துவதில்லை. உடற்கட்டு துளியு மில்லாத ம.பொ.சி. போன்றவர்களும் கலைஞரைப் போன்றவர்களும்தான் கடுமையாக உழைத்துவிட்டு வயிற்றைப் பிடித்துக் கொண்டோ தலையை, கழுத்தைப் பிடித்துக் கொண்டோ மருத்துவமனையில் படுத்திருக்கிறார்கள்.

ம.பொ.சி.யும், சட்டமன்றத் தலைவர் அவர்களும் சொன்னார்கள், கலைஞரைத் தாக்க சிலர் முயன்றார்கள் என்று! இதிலே நான் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. அவர்கள் தாக்க முற்படாமல் இருப்பார்களேயானால்தான் நான் உள்ளபடியே ஆச்சரியப்பட்டிருப்பேன். ஒரு பேரறிவாளர் சொன்னார். "உன்னை யாருமே குறை கூறவில்லையென்றால் கொஞ்ச காலம் கவலைப் படு. மற்றவர்கள் மனதை உறுத்தும்படியான வகையில் விஷயத்தை சொல்லத் தவறிவிட்டாய் என்பதுதான் அதனுடைய பொருள்" என்று!

நான் கலைஞர் அமைச்சரான போது அடைந்த மகிழ்ச்சியை விட அவர் மாற்றாரால் 'அமைச்சர்' என்ற முறையில் தாக்கப்படுவாரானால் நிமிர்ந்த நடை போட்டு "என் தம்பி எதையும் ஏற்றுக் கொள்கின்றவன்" என்று சொல்வேன்.

நாங்கள் எங்கள் மீது ஈ எறும்பு விழாது என்று சொல்லத்தக்க அளவிலே உள்ளவர்களல்ல. எங்களை உருட்டிவிட்ட அழுக்குப் பள்ளங்கள் ஏராளம். நாங்கள் ஏறி இறங்கிய மலைச் சரிவுகள் நிரம்ப உண்டு. நாங்கள் கண்டு அதிலே சிக்காமல் தப்பிய சதிகள் பல. சந்தித்த எதிர்ப்புகள் மிகப்பல. அவைகளுக்குப் பிறகு இன்றைய தினம் இந்த நிலை அடைந்திருக்கிறோம் என்றால் மறுபடியும் எங்களை அதே கொடுமைக்கு ஆளாக்குகின்றவர்களை நான் பணிவன்போடு கேட்கிறேன்.

இன்னும் எந்த உயரத்துக்கு எங்களை அழைத்துச் செல்ல நீங்கள் இந்தக் கொடுமை செய்கிறீர்கள்?

**பேரறிஞர் அண்ணா**

எங்களைத் தூற்றினீர்கள். மக்கள் போற்ற ஆரம்பித்தார்கள். நீங்கள் அடித்தீர்கள்; மக்கள் அணைத்துக் கொண்டார்கள். எங்களை அலட்சியப்படுத்தினீர்கள், மக்கள் எங்களை அரசாளும் பீடத்தில் அமர்த்தினார்கள்.

புதுவை நகரத்திலே நடைபெற்ற ஒரு பெரிய கலவரத்தில் அவரையும் மற்றவர்கள் அடித்துப் போட்டு,இவர் செத்துவிட்டார் என்ற எண்ணத்தாலே பாதையோரத்தில் கிடத்திவிட்டுச் சென்று வருடம் 22 ஆகிறது. அதை விடப் பெரிய தாக்குதல் இனி யாரும் நடத்த முடியாது. ஏன் சொல்கிறேன் என்றால், தாக்குதல் நடந்த இடம் புதுச்சேரி. புதுச்சேரித் தாக்குதலே அவ்வளவுதான்.


**என்னை முழுவதும் அறிந்தவர்கள் தான் கழகத்திலே இருக்கிறார்கள். அதிலே முற்றிலும் அறிந்தவர் என்று சொல்லத் தக்கவர்களிலே கலைஞருக்கு மிகச் சிறந்த இடம் உண்டு.**

நான் கவலையோடு இருக்கிறேன் என்றால் முதன் முதல் கண்டுபிடிக்கக்கூடியவர் கலைஞர்தான். கோபமாக இருக்கிறேன் என்றால் முதல் முதல் கண்டு பிடிக்கக்கூடியவர் கலைஞர்தான். நான் கோபமாக இருப்பது தெரியாமல் என்னிடத்திலே ஏதாவது பேசி, நான் கோபமாக நாலு வார்த்தை சொன்ன பிறகுதான் 'அண்ணா கோபமாக இருக்கிறார்' என்று சொல்வர் நம்முடைய நாவலர். கலைக்கு இருக்கும் ஒரு விசேடமே அது. கவலைப்பட்டு நடிக்கிறானென்றால் மற்றவர்களும் அதை உணர்ந்து அல்லது அந்த கணமே அறிந்து மற்றவர்களைக் கவலைப்பட வைப்பதுதான் கலைஞனுடைய திறமை. அதைப் போல என்னுடைய கோபதாபங்களை, என்னுடைய கவலைகளை, உடனுக்குடன் நொடிப் பொழுதில் அறிந்து அதை மாற்றவேண்டும் என்ற அக்கறையோடு நல்ல முறையில் துணை புரிவதில் கலைஞருக்கு ஈடு கலைஞர்தான்.

**(கலைஞர் பிறந்த நாள் விழா! 1968)**

## அம்பேத்கரின் கருத்துகள்!

**சா**தி சமயங்கள், மத பேதங்கள், உயர்வு தாழ்வு – இவை எல்லாம் அகற்றப்பட வேண்டும் என்பதையும், அனைவரும் சமம் என்ற சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்பதையும் இலட்சிய மூச்சாகக் கொண்டிருக்கின்ற எங்களுக்கு, அம்பேத்கருடைய பல கருத்துகள், மேலும் ஆர்வத்தைத் தூண்டி விடக் கூடிய கருத்துகளாக அமைந்திருக்கின்றன. அவர் சொல்லுகிறார்:



"உங்களுடைய சமூக அமைப்பை மாற்றாமல், நீங்கள் சிறிதுகூட முன்னேற்றம் காண முடியாது."

"சாதியை அடிப்படையாக வைத்து நீங்கள் எதையும் உருவாக்க முடியாது. தேசிய இனத்தை உருவாக்க முடியாது; ஒரு ஒழுக்கப் பண்பை உருவாக்க முடியாது."

"சாதியை அடிப்படையாக வைத்து நீங்கள் எதை உருவாக்கினாலும் – அது உடைந்து சிதறி உருப்படாமல் போய்விடும்."

"சாதியை உடைப்பதற்கு உண்மையான தீர்வு, கலப்புத் திருமணமே. வேறு எதுவும் சாதியை ஒழிக்க முடியாது.

சமபந்தி போஜனமும், கலப்புத் திருமணமும் சாதாரண நடைமுறைகளாகும் போதுதான் சாதியின் சக்தி அழியும்"

இவை அம்பேத்கருடைய பொன்மொழிகள். இந்த அணுகுமுறை இன்றைக்கும் – இந்தக் காலகட்டத்திலும் நம்மால் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நிர்பந்தம் நமக்கு ஏற்பட்டிருப்பதை நான் உணராமல் இல்லை.

**- கலைஞர்**